பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 27 திங்கட்கிழமை (10.05.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 165

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரச தரப்பு திரை மறைவில் பேச்சு!

## ஆளுங்கட்சியிலிருந்து சம்பந்தனுக்குத் தூது

கொழும்பு, மே 10

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் திரைமறைவுப் பேச்சுகளை ஆரம்பித்துள்ளதாம்.

கொழும்பிலிருந்து வெளியாகும் 'த நேஷன்' ஆங்கில வார இதழுக்கு அளித்துள்ள பேட்டியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் இதனை மறைமுகமாகக் கோடி காட்டியுள்ளார்.

''முக்கிய விடயம் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தொடர்பு கொண்டுள்ளீர்களா?'' என்ற கேள்விக்கு நான் அவருடன்தொடர்புகொள்ளவில்லை. அவரும் என்னுடன் தொடர்பு கொள்ளவில்லை. எனினும் அரசின் சில உறுப்பினர்கள் என்னுடன் தொடர்புகொண்டு பேசியுள்ளனர். நாங்கள் ஆரம்பக் கட்டத்தில் இருக்கிறோம்'' என்று சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார்.

''இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயம் தொடர்பாக (24ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டனின் புதிய அரசுடன் பேச இலங்கை முஸ்தீபு

கொழும்பு, மே 10

பிரிட்டனில் ஆட்சியமைக்கலாம் என எதிர்பார்க்கப்படும் கன்சர்வேட்டிவ் கட்சியுடன் இலங்கை அரசு விரைவில் பேச்சு நடத்தவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கை தொடர்பில் நட்புறவுடன் செயற்படும் பிரிட்டனின் கன்வர்வேட்டிவ் கட்சியின் புதிய அரசுடன் விரைவில் இலங்கை கலந்துரையாடுமென அங்குள்ள இலங்கைக்கான தூதுவர் நிஹால் ஜெயசிங்க (24ஆம் பக்கம் பார்க்க)

## துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற போட்டிகளின் இறுதியில் கைகலப்பு!

### மத்தியஸ்தர்களும் விளையாட்டு அலுவலர்களும் மோதல்

யாழ்ப்பாணம்,மே 10

வடமாகாண விளையாட்டுத்திணைக்களம் நேற்று நடத்திய விளையாட்டுப் போட்டியின் இறுதியில் மத்தியஸ்தர் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டதால் போட்டி பெரும் சர்ச்சையிலும், சண்டையிலும் முடிவடைந்தது.

இச்சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது,வடமாகாணத்தின் மாவட்ட அணிகளுக்கு இடையே சைக்கிள், மரதன் ஓட்டங்கள், வேகநடை போட்டிகளை மாகாண விளையாட்டுத் திணைக்களம் நேற்றுத் துரையப்பா விளையாட்டரங்கில் நடத்தியது.

பெண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டி மாலை முடிவடைந்த நிலையிலேயே மத்தியஸ்தர் ஒருவர் விளையாட்டு அலுவலர்களால் (24ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்பை மாற்றுவதற்கான பூர்வாங்கப் பணிகள் ஆரம்பம்?

கொழும்பு, மே 10

அரசமைப்பில் மாற்றங்கள் செய்வதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பித்துள்ளார்.

அரசமைப்பில் மேற்கொள்ளப்படவேண்டிய மாற்றங்கள் குறித்த நகல் வடிவமொன்றைத் தயாரிக்கும் பொறுப்பை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான குழுவொன்றிடம் அவர் ஒப்படைத்துள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)

## மே 17ஐ துக்க நாளாக அனுஷ்டிக்க கோருகின்றது தமிழ்க் கூட்டமைப்பு

சென்னை, மே 10

ஒவ்வொரு வருடமும் மே 17 ஆம் திகதியை துக்க தினமாக கடைப்பிடிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களைக் கோரியுள்ளது.

இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, செல்வராசா, ந.சிவசக்தி ஆனந்தன், பா.அரியநேத்திரன், விநோ நோகராதலிங்கம், ஈ.சரவணபவன், எஸ்.ஸ்ரீதரன், செல்வம் அடைக்கலநாதன், சி.யோகேஸ்வரன், ம.ஆ.சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, கே.பியசேன ஆகிய கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

வருடாந்தம் மே 17 ஆம் திகதியை துக்க தினமாகக் கடைப்பிடிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களைக் கோரியுள்ளது. உச்சக்கட்டப் போரின் போது பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டமை, இலட்சக் கணக்கானோர் பல்வேறு பாரிய பாதிப்புகளுடன் இருப்பிடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டமை போன்றவற்றைச் சுட்டிக்காட்டியே இத் துக்கதின அனுஷ்டிப்பைக் (24ஆம் பக்கம் பார்க்க)

## எஸ்.எம்.எஸ். வதந்தி பரப்பியோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடிவு!

கொழும்பு, மே 10

கடந்த சில நாள்களாக கைத்தொலைபேசிகள் குறித்து பொய்யான குறுஞ்செய்திகளை (எஸ்.எம்.எஸ்) பரப்பி மக்களை அச்சுறுத்தியமை தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்து அவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன (24ஆம் பக்கம் பார்க்க)

## அடுக்கி வைக்கப்பட்டிருந்த விறகின் மீது படுத்து தீ மூட்டி உயிர் நீத்த வயோதிபர்!

### ஏழாலையில் சனியிரவு அதிர்ச்சியூட்டும் சம்பவம்

வலி.வடக்கு,மே10

இப்படியும் ஒருவர் தனக்குத்தானே செய்து கொள்வாரா? என ஆச்சரியத்தையும் உணர்வையும் தரும் விதத்தில் முதியவர் ஒருவர் வீட்டில் வைக்கப்பட்டிருந்த விறகு அடுக்கின்மேல் படுத்துத் தனக்குத் தானே தீ மூட்டித் மரணித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு ஏழாலையில் (24ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் 90 சதவீதமான பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் பூர்த்தி

### ஜனாதிபதியின் ஆலோசகர் சந்திரபெர்னான்டோ தகவல்

கொழும்பு,மே10

வன்னியல் 90சதவீதமான பிரதேசத்தில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. எதிர்வரும் யூலை மாதம் நடுப்பகுதிக்கு முன் கண்ணிவெடி அகற்றும் பணி பூர்த்தியாகிவிடும்.

ஜனாதிபதியின் வடக்கு-கிழக்கு பிரதேசத்துக்கான ஆலோசகர் சந்திரா பெர்ணான்டோ இத் தகவலைத் தெரிவித்தார். (24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழருக்கு உகந்த தீர்வை வழங்குவதற்கு இந்தியா தனது முழுப்பலத்தையும் பயன்படுத்தவில்லை

### 'றோ' வின் முன்னாள் தலைவர் கேணல் ஹரிஹரன் புட்டுக்காட்டுகின்றார்



கொழும்பு, மே 10

இலங்கைத் தமிழர்களுக்கான உரிய, உகந்த தீர்வை வழங்குவதற்கு இந்தியா தனது முழுமையான பலத்தையும் பயன்படுத்தவில்லை - என்று இந்திய அமைதிப்படையின் புலானாய்வுப் பிரிவின் - றோவின் - முன்னாள் தலைவர் கேணல் ஹரிஹரன் புட்டுக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு உதவி வழங்கக்கூடிய ஆர்வலர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் சென்னையில் இடம்பெற்றபோது அவர் அதில் கலந்து கொண்டு இந்[illegible] முன்வைத்துள்ளார்.

[illegible] வதற்கு இந்தியா மிகப்பெரிய பங்களிப்பை வழங்கியுள்ளது. இந்த நிலையில் இந்தியா நினைத்தால், இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான முழுமையான தீர்வை முன் வைப்பதற்கு அழுத்தம் கொடுத்திருக்க முடியும். ஆனால் இந்தியா அதனை செய்ய மறுத்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கையில் தற்போது சீரான குடியேற்ற நடைமுறை எவையும் இல்லை. புதிய கட்டுக்கோப்பான கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதன் மூலமே இலங்கையில் சீரான தமிழ்க் குடியேற்றத்தை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி, முல்லை மாவட்டங்களின் பேருந்து உரிமையாளர்களுடன் அமைச்சர் சந்திப்பு

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் தனியார் பேருந்து உரிமையாளர்கள் தற்போது முகங்கொடுத்துள்ள உடனடிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன்பிரகாரம், மேற்படி மாவட்டங்களின் தனியார் பேருந்துக் கழகங்களைப் பதிவு செய்வதற்கும், பேருந்துச் சாரதிகளுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கும், கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவு நகரப் பகுதிகளில் தனியார் பேருந்து நிலையங்களை அமைப்பதற்கும் அதே நேரம் கேள்விப் பத்திரம் மூலம் தனியார் பேருந்துகளுக்கான வீதிப் பயண அனுமதிகளை வழங்கும் நடவடிக்கையைப் பிற்போடுவதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்படி விடையங்கள் தொடர்பில் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் தனியார் பேருந்து உரிமையாளர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முன்வைத்திருந்த கோரிக்கைக்கு அமைவாகப் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவிடம் கலந்துரையாடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1)

## யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் கசிப்பு கைப்பற்றப்பட்டது

யாழ்ப்பாணம்,மே10

யாழ்.நகரப் பகுதியில் ஆஸ்பத்திரி வீதியில் பொலிஸாரும் படையினரும் இணைந்து மேற்கொண்ட தேடுதலில் பெருமளவு கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது என படை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆஸ்பத்திரிவீதியில் நிலைகொண்டுள்ள இருபதாவது படையணியின் தேசிய படையின் இராணுவத்தினர் பொலிஸாருடன் இணைந்து இத் தேடுதலில் ஈடுபட்டனர்.

30லீற்றர் கசிப்பு மற்றும் உப பொருள்கள் இத் தேடுதலில் மீட்கப்பட்டன என்றும் இது தொடர்பாக கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளனர் என்றும் யாழ்.நகர படையணித் தளபதி தெரிவித்தார். (1)

## கல்வியியல் முதுகலைமாணி பரீட்சைகள் 23 இல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப் படிப்புக்கள் பீடத்தினால் எதிர் வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு கல்வியியல் முதுகலைமாணிப்பரீட்சை நடத்தப் படவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் தற்போது அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

இப்பரீட்சைக்கு நாடெங்கிலும் இருந்து 1600 பேர் தோற்ற உள்ளனர். "கல்வியியலில் பொது உளச்சார்பு" எனும் தலைப்பிலான வினாத்தாள் பரீட்சிக்கப்பட உள்ளது.

4 வருடங்களுக்கு பின்பு நாடு முழுவதிலும் இருந்து பரீட்சார்த்திகள் தோற்ற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (1-121)

## நியூஸிலாந்திடம் தோற்றது இலங்கை; இந்தியாவிடம் வீழ்ந்தது பாகிஸ்தான்!

### பெண்கள் 'ருவென்ரி-20' போட்டியில்

செயின்ட் கீட்ஸ், மே 10

பெண்கள் 'ருவென்ரி-20' உலகக் கிண்ணத் தொடரில், நேற்றுமுன்தினம் இரவு நடந்த ஆட்டத்தில், நியூஸிலாந்து அணியிடம் 47 ஓட்டங்களால் இலங்கை அணி தோற்றது. அதேவேளை, இன்னொரு ஆட்டத்தில் இந்தியாவிடம் 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் வீழ்ந்தது.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வரும் பெண்கள் 'ருவென்ரி-20' உலகக் கிண்ணத் தொடரில், நேற்றுமுன்தினம் இரவு நடந்த ஆட்டம் ஒன்றில் நியூஸிலாந்து-இலங்கைப் பெண்கள் அணிகள் மோதின.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 154 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர், வெற்றியிலக்கைத் துரத்திய இலங்கை அணி, 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு வெறும் 107 ஓட்டங்களையே சேர்த்தது.

இதன் மூலம் 47 ஓட்டங்களால் நியூஸிலாந்து அணி பெருவெற்றிபெற்றது.

இன்னொரு, ஆட்டத்தில் இந்தியா-பாகிஸ்தான் பெண்கள் அணிகள் மோதின.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு வெறும் 104 ஓட்டங்களையே சேர்த்தது.

பின்னர், இலகுவான இலக்கை விரட்டிய இந்திய அணி, 16.4 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 106 ஓட்டங்களைச் சேர்த்தது.

இதன் மூலம் 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றிபெற்றது.

## நாடு திரும்பினார் கெவின் பீற்றர்சன்

பார்படோஸ், மே 10

இங்கிலாந்து அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரரான பீற்றர்சனுக்கு முதலாவது குழந்தை பிறக்கவுள்ளமையால், அவர் நாடு திரும்பியுள்ளார்.

இதனால், நியூஸிலாந்துக்கு எதிராக இன்று நடைபெறும் ஆட்டத்தில் அவர் ஆடமாட்டார். எனினும், அரையிறுதியில் இங்கிலாந்து ஆடும்போது அவர் அணியோடு இணைந்து கொள்வார் எனத் தெரிய வருகிறது.

## மரடோனா மீது பாய்ச்சல்!

''தொடர்ந்தும் எனது தந்தையாரைத் தரக்குறைவாக விமர்சித்து வந்தால் மரடோனா பயிற்சியாளர் பதவியை இழக்க நேரிடும்'' - என்று ஆர்ஜென்ரீனா உதைபந்தாட்டச் சங்கத் தலைவரின் மகன் ஹம்பர்ட்டோ ஆவேசமாகக் கூறியுள்ளார்.

உலகக் கிண்ணப் போட்டித் தொடருக்கு முன்னர் ஆர்ஜென்ரீன வீரர்களுக்கு துபாயில் பயிற்சி கொடுக்க வேண்டும் என்று அந்த அணியின் பயிற்சியாளர் மரடோனா விருப்பம் தெரிவித்தார். ஆனால், போதிய நிதி வசதி இல்லாமையால் அந்தப் பயிற்சி முகாமுக்கு ஆர்ஜென்ரீனா உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் ஜூலியானோ கிராடனோ ஒப்புதல் அளிக்கவில்லை.

இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர், ஆர்ஜென்ரீனா அணி, ஒரு கண்காட்சிப் போட்டியில் ஹைதி அணியுடன் மோதியது. இந்தப் போட்டியில் ஆர்ஜென்ரீனா வெற்றிபெற்ற பின்னர் மரடோனா, ஆர்ஜென்ரீனா உதைபந்தாட்ட சங்கத் தலைவர் ஜூலியானோவைக் கடுமையாக விமர்சித்தார்.

ஏற்கனவே ஆர்ஜென்ரீனா அணியின் துணைப் பயிற்சியாளர்களை நியமிப்பதிலும் ஜூலியானோ-மரடோனா இடையே மோதல் ஏற்பட்டது. அப்போதும் மரடோனா ஜூலியானோவைக் கடுமையாக விமர்சனம் செய்திருந்தார்.

இந்த நிலையில் மரடோனாவின் விமர்சனங்களுக்கு ஆர்ஜென்ரீனா உதைபந்தாட்ட சங்கத் தலைவரின் மகன் ஹம்பர்டோ மரடோனாவைக் கடுமையாகத் தாக்கிப் பேசியுள்ளார்.

''ஆர்ஜென்ரீனா உதைபந்தாட்டச் சங்கத்தின் தற்போதைய நிதி நிலைமை சரியில்லை. இதனால்தான் எனது தந்தை துபாய் பயிற்சிமுகாமுக்கு அனுமதிதரவில்லை. ஆனால், இதை எல்லாம் புரிந்து கொள்ளாத மரடோனா எனது தந்தையை ஒரு மாட்டை, கொசு கடிப்பதுபோல் தொல்லை செய்து வருகிறார். இனிமேலும் அவரது விமர்சனம் தொடர்ந்தால் அவர் தனது பதவியை இழக்க நேரிடும்'' - என்று ஆவேசமாகக் கூறி உள்ளார்.

## 10ஆவது சுற்று செஸ் போட்டி: சமநிலையில் முடித்தார் ஆனந்த்!

இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் - பல்கேரியாவின் வெசெலின் தபலோவ் இடையே நேற்றுமுன்தினம் நடந்த 10ஆவது சுற்றில், கறுப்பு நிறக் காய்களுடன் ஆடிய நடப்புச் சம்பியன் ஆனந்த், 60ஆவது நகர்த்தலில் சமனிலையை எட்டினார். 10 சுற்றுகள் முடிவில் ஆனந்த்-தபலோவ் இருவரும் தலா 5 புள்ளிகளுடன் தொடர்ந்து சமநிலையில் உள்ளனர்.

## 'ஸ்பானீஷ் லீக்' உதைபந்தாட்டத் தொடர்: பார்சிலோனாவிடம் செவில்லா தோல்வி!

பார்சிலோனாவுக்கு எதிரான ஆட்டத்தில் செவில்லா 3-2 என்ற கோல் கணக்கில் தோல்வி கண்டது. இந்த வெற்றியின் மூலம் பார்சிலோனா 'ஸ்பானீஷ் லீக்' கிண்ணத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது.

'ஸ்பானீஷ் லீக்' உதைபந்தாட்டப் போட்டித் தொடர் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இதில், நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில் பார்சிலோனா - செவில்லா அணிகள் மோதின.

செவில்லா வலுவான அணியாக இருந்தமையால் இந்தப் போட்டி மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. ஒருவேளை இந்தப் போட்டியில் பார்சிலோனா தோல்வி கண்டிருந்தால் அது ரியல் மாட்ரிட் அணிக்குச் சாதகமாக இருந்திருக்கும். ஆனால், பார்சிலோனா 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று 3 புள்ளிகளை ஈட்டியது.

அதே வேளையில் ரியல் மாட்ரிட் அத்லெடிகோ பில்போ அணியை 4-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. நேற்றுமுன்தினம் வரை 37 ஆட்டங்கள் முடிந்துள்ளன. இதில் பார்சிலோனா 96 புள்ளிகளைப் பெற்றுள்ளது. ரியல் மாட்ரிட் 95 புள்ளிகளுடன் தொடர்ந்து 2ஆவது இடத்தில் உள்ளது. இரு அணிகளுக்கும் இன்னும் ஒரே ஓர் ஆட்டம் மட்டுமே மிகுதியாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## கிரிக்கெட் சபைக்கு முதல் எதிரி நான்தான் இப்படிக் கூறுகிறார் லலித்மோடி

புதுடில்லி, மே 10

''இந்திய கிரிக்கெட் சபைக்கு நான்தான் முதலாவது எதிரியாக இருந்திருக்கிறேன்.''

- இவ்வாறு லலித்மோடி கூறியுள்ளார்.

ஐ.பி.எல். கிரிக்கெட் முறைகேடு, ஊழல் தொடர்பான சர்ச்சைகளில் சிக்கி - ஐ.பி.எல். தலைவர் பதவியிலிருந்து விலக்கப்பட்ட லலித்மோடியிடம், இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டு இந்திய கிரிக்கெட் சபை நோட்டீஸ் அனுப்பியது. இதற்கு லலித் மோடி இன்று பதிலளிக்கவுள்ளார்.

இதுகுறித்துத் தனது வழக்கறிஞருடன் ஆலோசனை நடத்திய அவர், ஆயிரம் பக்கங்களைக் கொண்ட அறிக்கையைத் தாக்கல் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், லலித்மோடி ஐ.பி.எல். கிரிக்கெட்டுக்கு எதிராக இங்கிலாந்தில் 'ருவென்ரி-20' கிரிக்கெட் லீக் தொடர் ஒன்றை நடத்தத் திட்டமிட்டிருந்தார் எனவும், இது தொடர்பாக அவர் இங்கிலாந்தில் உள்ள மூன்று அணிகளிடம் ரகசியமாகப் பேச்சுகளை நடத்தினார் எனவும், இது தொடர்பாக விளக்கம் கேட்டும் இந்திய கிரிக்கெட் சபை நோட்டீஸ் அனுப்பியது.

இவைகள் பற்றி நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் கருத்துக் கூறும்போதே லலித்மோடி மேற்கண்டவாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''இதுவெல்லாம் வாழ்க்கையின் ஒரு அம்சம். இந்தியக் கிரிக்கெட் சபைக்கு நான் நீண்ட நாள்களாக முதன்மையான பொது எதிரியாக இருந்திருக்கிறேன்.

''இரண்டாவது நோட்டீஸ் குறித்து நான் பதில் சொல்ல மாட்டேன். நோட்டீஸில் என்ன சொல்லப்பட்டதோ அதன் அடிப்படையில் சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினரும் கருத்துக் கூறியிருக்கிறார்கள்'' - என்றார்.

## பாக். அணி மீது விசாரணை!

நேற்றுமுன்தினம் நடந்த 'ரு-20' ஆட்டத்தில் நியூஸிலாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி தோல்வியடைந்தமை குறித்து அந்நாட்டு நாடாளுமன்றக் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

134 ஓட்டங்கள் என்ற சிறிய வெற்றியிலக்கு நோக்கி நகர முடியாமல் போனமைக்கான காரணங்களைக் அறிந்துகொள்வதற்காகவும், இந்த மோசமான ஆட்டத்திற்கு அணி சார்பான எவரும் சம்பந்தப்பட்டுள்ளனரா என்பதை அறிவதற்காகவுமே அந்நாட்டு நாடாளுமன்றக் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது எனத் தெரியவருகிறது.




## புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 10

கலைமகள் சர்வதேச ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் புதிய ஆரம்ப பயிற்சி ஆசிரியர்களை வரவேற்கும் நிகழ்வு இன்று மு.ப. 10 மணிக்கு கொக்குவிலில் உள்ள கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கலைமகள் சர்வதேச ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் இயக்குநர் எஸ்.கௌரிபாலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக [illegible] கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி நாகதர்சினி சரவணபவனின்
அன்புத் தாய்

**திருமதி நாகேஸ்வரி நாகலிங்கம்**

அவர்கள் காலமான செய்தி அறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**இராமநாதன் கல்லூரிச் சமூகம்;**
**சுன்னாகம்.**

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நன்மதிப்பு முயற்சிகள் எப்போது?

ஐக்கிய நாடுகள் சபையின் மூத்த அதிகாரி லைன் பஸ்கோவின் இலங்கை விஜயம் முன்னர் உத்தேசிக்கப்பட்டது போன்று இன்னும் நடைபெறவில்லை; அதாவது சாத்தியமாகவில்லை. அச்சொட்டாகச் சொன்னால் இரண்டு மாதங்களுக்கு முன்னரே லைன் பஸ்கோ இலங்கை வருவார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கையில், வன்னியில், முள்ளிவாய்க்காலில், இடம்பெற்றவை எனத் தெரிவிக்கப்படும் போர்க் குற்றங்களுக்கு பொறுப்பேற்கச்செய்யும் விவகாரம் தொடர்பாக, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ-மூன் தமக்கு அலோசனைகளை வழங்குவதற்கென விசேட குழு ஒன்றை நியமிக்கப் போவதாக அறிவித்திருந்தார்.

அத்தகைய ஓர் ஆலோசனைக் குழுவை நியமிப்பது, தமக்குத் பாதகமாகிவிடும் என்ற எண்ணத்துடன், ஐ.நா. செயலரின் திட்டத்தை தடுத்து நிறுத்துவதற்கு, தான் எந்தவிதத்திலும் பொறுப்புக் கூறும் நிலைமை வந்துவிடக் கூடாது என்ற எண்ணத்துடன், தன்னால் இயன்றவரை - முன்கதவால் மட்டுமன்றி - பின்கதவாலும், சம்பந்தப்பட்டோரின் அலுவலகங்களைத் தட்டியது இலங்கை.

அதனை அறிந்து பான் கீ- மூன் தனது முடிவைப் பின்தள்ளிப் போட்டார். சில சந்தர்ப்பங்களில் தமக்குரிய ஆலோசனைக்குழுவை நியமிப்பதில் இருந்து பின்வாங்கப்போவதில்லை என்றும் உறுதிபடக் கூறிவந்தார். சில வாரங்களின் பின்னர், தமது உத்தேச செயற்பாடு- ஆலோசனை குழுவின் செயற்பாடு, எவ்வாறு அமையும் என்பதனை இலங்கை அரசாங்கத்துக்கு விளக்குவதற்குத் தமது சிரேஷ்ட அதிகாரி லைன் பஸ்கோவை கொழும்புக்கு அனுப்புவதாக அறிவித்து தனது திட்டத்தை தாமதப்படுத்தி உள்ளார்.

ஆனால் உயர் அதிகாரி லைன் பஸ்கோவின் கொழும்பு விஜயம் ஒரேயடியாக பின்தள்ளிப் போய்விட்டது. அதற்கான காரணமும் இப்போது அம்பலமாகி விட்டது. பான் கீ-மூனின் விசேட பிரதிநியின் விஜயத்துக்கு முன்னர் ஐக்கிய நாடுகள் சபையின் நன்மதிப்பைப் பெறுவதற்கு இலங்கை அரசு தன்னாலான முயற்சிகளை செய்து வருவதாக அதே சபையின் மற்றொரு மூத்த அதிகாரி ஒருவர் ''பொட்டுக் கேட்டை'' அவிழ்த்து விட்டிருக்கிறார்.

சபாஸ்! வன்னியில் சுற்றவாளியாகவே தான் நடந்து கொண்டது என்ற நிலைப்பாட்டை கிடுக்கிப் பிடியாக்கிக்கொண்டு, நல்ல பெயர் கேட்பதற்கான சூட்சுமமான திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துவதற்கு இலங்கை அரசு முனைப்புடன் கருமமாற்றி வருகின்றது என்பது புலனாகிறது.

போர்க் குற்றங்கள் குறித்து பொறுப்புக் கூறும் கடமைப்பாடு இலங்கை அரசுக்கு உண்டு என்று பல சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித நேய அமைப்புகள் வலியுறுத்தி வந்தாலும், தான் சுற்றவாளி, அதனால் பொறுப்புக் கூறுவதற்கில்லை என்ற நிலைப்பாட்டில் இருந்து ஒரு அங்குல மேனும் கீழ் இறங்க இலங்கை அரசு விரும்பவில்லை!

போர்க்குற்றங்கள் நடந்தனவா என்று அரசாங்கம் தனது சொந்த விசாரணைகளை மேற்கொள்ளும் என்று தெரியவித் திருந்த போதிலும் அதுவும் இதுவரை நிலத்திலிருந்து கிளம்பியதாக இல்லை!

அதனால் தான் போலும், ஐ.நா.பொதுச் செயலாளரின் விசேட பிரதிநிதியின் கொழும்பு வருகையின் முன்னர் நன்மதிப்பைப்பெறும் முயற்சிகளில் அது ஈடுபட்டிருக்கிறது.

நன்மதிப்பைப் பெறுவதற்கான காலத்தை நீட்டிச் சென்றால்- அந்த முயற்சிக்காக காலத்தைக் கடத்தி னால்- போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக் கூறும் விவகாரம் தானாகவே அஸ்தமித்துப் போகும் என்று - மறைந்து போகும் - என்று கொழும்பின் அரச தரப்பு அதிகாரிகள் நினைக்கக் கூடும்.

பேச்சு வழக்கில் 'மூக்குள்ளவரை சளி' என்ற சொற்றொடர் ஒன்று உண்டு.மேலும் பொறுப்புக் கூறும் கடமையிலிருந்து விலகிக் கொள்வது நாட்டுக்கும் அரசுக்கும் அபகீர்த்தியைக் கொண்டு வரும் என்பதனை கொழும்பு அதிகாரிகள் உணர்ந்து கொள்வது நல்லது. அதனால் நாட்டுக்குப் பல நட்டங்கள் வந்து சேரும் என்பதும் நினைவில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். அரசு அதனையாவது உணர்ந்து கொள்ளுமா? ஐ.நா.சபையின் நன்மதிப்பைப் பெறுவதற்கு காலத்தை நீட்டுவதும் நட்டத்தில் முடியலாம். யார் அறிவார்?!

# நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுத்த முன்னாள் தளபதி பொன்சேகா முயன்றாராம்

## புலனாய்வுத் துறையினர் தொடுக்கும் இன்னுமொரு குற்றச்சாட்டு

கொழும்பு, மே 10

கடந்த டிசெம்பர் மாதத்தில் 'சண்டே லீடர்' பத்திரிகைக்கு ஓய்வு பெற்ற இராணுவத் தளபதி ஜெனரல் சரத்பொன்சேகா வழங்கியதாகக் கூறப்படும் ஒரு அறிக்கை தொடர்பில் எதிர்வரும் புதன்கிழமை மே 12 ஆம் திகதி அவர் கொழும்பு மாஜிஸ்ரேட் சம்பா ஜானக்க ஜயரட்ண முன்னிலையில் ஆஜர் படுத்தப்படவிருக்கின்றார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் எவரும் சரணடைய வருவார்களானால் அதற்கு இடம் தர வேண்டாமென்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சட்டவிரோதமான கட்டளையொன்றை பிறப்பித்திருந்தார் என்ற வகையில் சரத் பொன்சேகா அப் பத்திரிகைக்குக் கூறியிருந்தார் என்பதே குற்றச்சாட்டாகும்.

2009 டிசெம்பர் 13 ஆம் திகதி அச் செய்தி சண்டேலீடர் பத்திரிகையில் வெளியானதைத் தொடர்ந்து சரத் பொன்சேகா இச் செய்திக்கு விளக்கம் ஒன்றை விடுத்திருந்தார். அது வருமாறு - யுத்தத்தின் இறுதி நாள்களில் இராணுவத்தின் தளபதி என்ற முறையில் சில விடுதலைப் புலித் தலைவர்கள் சரணடைவதற்குத் திட்டமிடுகிறார்கள் அல்லது விரும்புகிறார்கள் என்ற வகையில் எனக்கு எந்தவிதத் தகவலும் கிடைத்திருக்கவில்லை. அவ்வாறு செய்ய அவர்கள் விரும்புகிறார்கள் என்று எந்தக் கட்டத்திலும் எனக்குக் கூறப்படவில்லை. மற்றும் வெள்ளை நிறத்துணிகளைத் தாங்கியபடி அவர்கள் வர வேண்டும் என்ற வகையில் ஒருவித ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது என்று எனக்குக் கூறப்பட்டிருக்கவில்லை. இந்தக் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக என்னால் முடிவாகவும் அதிகாரப் பூர்வமாகவும் திட்டவட்டமாகவும் கூற முடியும். எந்த ஒருவரும் வெள்ளைத் துணிகளுடன் வர அந்த இறுதி நாள்களில் முயற்சி செய்யவில்லை. ஆகவே படையணிகள் வெள்ள முள்ளிவாய்க்காலுக்கு வடக்கில் எஞ்சிருந்த 100 × 100 நிலப்பரப்பினை முற்று முழுதாகக் கைப்பற்றியபோது சகல புலித் தலைவர்களும் கொல்லப் பட்டார்கள்.

போர் முடிந்து இரண்டு நாள்களின் பின்னர் அப்போதைய பிரிகேடியர் சவேந்திராவுடன் சிக்குண்டிருந்த சில பத்திரிகையாளர்கள் மூலமக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடமிருந்து சட்ட விரோதமான ஒரு கட்டளை ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு கிடைத்திருந்ததாக அறிந்தேன். இந்த சட்டவிரோத கட்டளையானது எவ்வாறாயினும் நில மட்டத்தில் செயற்படுத்தப்படவில்லை. நிலமட்டத்தில் என்ன நடந்தது என்பதற்கு நான் முழுப் பொறுப்பும் எடுத்துக் கொள்கின்றேன்.

இந்தச் செய்திக்கு இன்றைய திகதி வரை பொன்சேகா ஒரு போதும் மறுப்புத் தெரிவித்ததில்லை.

சண்டே லீடருக்கு அவர் தெரிவித்திருந்த செய்தி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணைகளுக்கமைவாக ஜெனரல் பொன்சேகாவை ஒரு சந்தேக நபராக ஆஜர் படுத்துவதற்கு புலனாய்வு பொலிஸார் விடுத்த கோரிக்கைகளுக்கு கடந்த 6 ஆம் திகதி நீதிமன்றம் இசைவு தெரிவித்தது.

புலனாய்வுப் பொலிஸாரின் இம் மாதிரியான கோரிக்கைகளை முன்னர் இரண்டு தடவைகள் நீதிமன்றம் நிராகரித்திருந்தது.

பொலிஸ் மா அதிபர் மார்ச் 10 ஆம் திகதி பொலிஸ் அத்தியட்சகர் அனுர சில்வாவிடம் வழங்கிய முறைப்பாடு ஒன்றையடுத்து இந்தப் புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சண்டேலீடர் நிறுவனத்தலைவர் லால்விக்கிரதுங்க, பிரதம ஆசிரியர் பெடரிக்கா ஜான்ஸ், பிரதி ஆசிரியர் ரக்னேஷ்விஜேவர்தன, படப்பிடிப்பாளர் துஷித குமார முதலியவர்களிடமும் வாக்கு மூலம் பெறப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக இது வரை மேற்கொள்ளப்பட்டுள்ள புலன் விசாரணைகளின்படி கோத்தபாய ராஜபக்ஷ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான கட்டளையொன்றை ஜெனரல் சிவேந்திர சில்வாவுக்கு பிறப்பிக்கவில்லையென்பது தெரியவந்துள்ளதாகவும் ஜெனரல் பொன்சேகா உண்மைக்குப் புறம்பான ஒரு கூற்றை பெடரிக்க ஜான்சிடம் தெரிவித்திருப்பதாகவும் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றுக்குத் தெரிவித்துள்ளனர்.

பொன்சேகா புதன்கிழமை நீதிமன்றில் ஆஜர் படுத்தபடுவார். பொய்யான அறிக்கையொன்றை பத்திரிகைக்கு அவர் விடுத்துள்ளார் என்று வழக்கு தொடரப்படவுள்ளது. அதன்மூலம் இனங்களுக்கிடையில் நெருக்கடியையும் வெறுப்பையும் ஏற்படுத்தி தேசத்தின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுத்த முயன்றிருக்கிறார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## சிங்களக் கற்கைநெறி முடிவுகள் வெளிவந்தன


இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் 2007/2008 கல்வியாண்டுக்கான அடிப்படைச்சிங்களச் சான்றிதழ் கற்கை நெறியின் இறுதிப்பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன. யாழ்.பிராந்திய நிலைய அறிவித்தல் பலகையில் முடிவுகளைப் பார்வையிடலாமென இணைப்பாளர் அறிவித்துள்ளார். (1)

## ஆசிரிய தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இன்று ஆளுநரைச் சந்திக்கின்றனர்

அச்சுவேலி,மே10

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆசிரியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் வடக்குமாகாண கல்வி அபிவிருத்தியும், ஆசிரியர்களின் பிரச்சினையும் தொடர்பாகஇன்று கலந்துரையாடுகின்றார்.

வடக்குமாகாண கல்வித்திணைக் களத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் வடக்குமாகாணத்திலுள்ள 5மாவட்டங்களினதும் ஆசிரியர் தொழிற்சங்கங்களின் மாவட்டப் பிரதிநிதிகள் மற்றும் தாய்ச் சங்க பிரதிநிதிகள், 12கல்விவலயங்களினதும் கல்விப் பணிப்பாளர்கள், மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர், வடக்குமாகாண கல்வித்திணைக்கள உயரதிகாரிகள், வடக்கு மாகாண கல்வி அமைச்சு அதிகாரி ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.




யாழ்ப்பாணம்,மே 10

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய பெரும் திருவிழா எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

மே 26ஆம் திகதி காலை 8 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திரு விழாவும் நடைபெறும்.

(1-207)

* * *

நவாலி,மே 10

நவாலி ஸ்ரீ சிந்தாமணிப் பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த 4 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்தும் 10 தினங்கள் இடம் பெறும் இவ் உற்சவத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (1-100)

* * *

யாழ்ப்பாணம்,மே 10

மட்டுவில் தெற்கு வேரக்கேணி கந்தசாமி ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

மே 27 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (1-207)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 28 | 11.05.2010 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி | : துவாதசி 06.34 வரை |
| நட்சத்திரம் | : ரேவதி பி.இ 01.12 வரை |
| [illegible] | : 10.24 - 11.54 |
| ராகுகாலம் | : 02.54 - 04.24 |

## மானிப்பாய் ஆஸ்பத்திரியில் பிறந்த முதலாவது குழந்தைக்கு அன்பளிப்பு

நவாலி,மே10

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலையில் பிறந்த ஆண் குழந்தைக்கு அடித்தது அதிர்ஷ்டம்.

இவ்வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட பிரசவ விடுதியில் முதற் தடவையாக கடந்த 4ஆம் திகதி பிறந்த மானிப்பாயைச் சேர்ந்த பால சுந்தரலிங்கம் நிதுஷன் என்ற ஆண் குழந்தைக்கு மானிப்பாய் இலங்கை வங்கி கிளையின் முகாமையாளர் க. இலட்சுமணசர்மா ஆயிரத்து 500 ரூபா பணத்தினைச் சிறுவர் சேமிப்புக் கணக்கிலிட்டுப் புத்தகத்தையும், அவரது பாரியார் பல பரிசுப் பொருள்களையும் வைத்தியசாலையில் வைத்துக் கையளித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையின் சார்பில் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி ஏகாம்பரமூர்த்தி பத்மராணி ஒரு தொகைப் பணத்தை அன்பளிப்புச் செய்துள்ளார்.

(1-100)

## குடாநாட்டிலிருந்து வன்னிக்கு ஆசிரியர்களை இடமாற்றத் திட்டம்

### விவரங்களை வலயரீதியாக மாகாணசபை திரட்டுகிறது


யாழ்ப்பாணம், மே 10

வன்னி மாவட்டப் பாடசாலைகளிலிருந்து யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுவரும் ஆசிரியர்களுக்குப் பதிலாக யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதற்கான விவரங்கள் அந்தந்தக் கல்வி வலயங்களால் திரட்டப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு பாடசாலையிலும் கடமையாற்றும் ஆசிரியர்களையும் அவரது பெயர், பாடவகை, கல்வித் தகைமை, பிறந்த திகதி, இடமாற்றத்தில் செல்ல விரும்புபவர்கள், மாவட்டத்தில் ஆறு வருடங்களுக்கு மேற்பட்ட சேவையைக் கொண்டவர்கள், வெளிமாவட்ட அல்லது வெளி மாகாண சேவை செய்யாதவர்கள், 45 வயதுக்கு உட்பட்டவர்கள், மாவட்ட கஷ்டப் பிரதேசத்தில் சேவை செய்தவர்கள், திருமணமாகாதவர்கள், விசேட நோய்களினால் பாதிக்கப்படாதவர்கள் போன்ற விவரங்களை அனுப்பிவைக்குமாறு மாகா ணக் கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரகாரம் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஆசிரியர்களின் விவரங்களை உடனடியாக வலயக் கல்வி அலுவலகத்தில் கையளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இசைஞான திலகம் உ.இராதாகிருஷ்ணனைக் கௌரவிக்கும் வகையில் இணுவில் மக்கள் ஏற்பாடு செய்த பாராட்டு விழா சிவகாமி அம்பாள் திருமண மண்டபத்தில் நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சார்யசுவாமிகள் உரையாற்றுவதை முதலாவது படத்திலும், யாழ். பல்க லைக்கழகத்துணை வேந்தர் பேராசிரியர் என்.சண் முகலிங்கன் விழா நாயகருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதை இரண்டாவது படத்திலும் நல்லை ஆதீன முதல்வர் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

இணுவில் சிவகாமி அம்மன் கோயில் பிரதம குரு சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேஷக்குருக்கள், கு.சரவணபவக்குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்குவதையும், செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், விழாத்தலைவரும் சமாதான நீதிவானு மாகிய பெ.கனக சபாபதி, நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் ஆகியோர் உரையாற்றுவதை கீழ்வரிசைப்படங்களிலும் காணலாம். (55)

# வடமராட்சிக்கான தனியார் பஸ் சேவையில் பெரிய பஸ்கள் அறிமுகம் செய்யப்படுகின்றன

வடமராட்சி, மே 10

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பாதையில் வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினால் நடத்தப்படும் பஸ் சேவையில் ஒற்றைக்கதவு கொண்ட பெரிய (பேருந்து) பஸ் வண்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.

பயணிகள் அதிகரிப்பு, பஸ் வண்டிகள் பற்றாக்குறை, போக்குவ்ரத்து நெருக்கடி என்பவற்றைக் கவனத்தில் கொண்டே இப்பாதையில் சேவையிலீடுபட ஒற்றைக் கதவு கொண்ட பெரிய பஸ் வண்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது ஒரே ஒரு ஒற்றைக்கதவு கொண்ட பெரிய பஸ் வண்டி இப்பாதையில் சேவையிலீடுபடுத்தப்பட்டு வருகிறது. அடுத்தடுத்த வாரங்களில் மேலும் சில ஒற்றைக்கதவு கொண்ட பெரிய பஸ் வண்டிகள் இப்பாதையில் சேவையிலீடுபடுத்தப்படவுள்ளன.

இப்பாதையில் சேவையிலீடுபடப் போதியளவு ஒற்றைக்கதவுப் பெரிய பஸ் வண்டிகள் வந்து சேர்ந்ததும், இப்பாதையில் மினி பஸ் வண்டிகள் சேவையிலீடுபடுத்தப்படமாட்டாது எனத்தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ்ப்பாணம் - வவுனியா, யாழ்ப்பாணம் - கிளிநொச்சி, யாழ்ப்பாணம் - முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் - துணுக்காய் ஆகிய பாதைகளில் பஸ் சேவைகளை நடத்த யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் சிற்றூர்திச் சேவைச்சங்க உரிமையாளர்கள் சிலருக்குச் சுழற்சி அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இரண்டு கதவுகளைக் கொண்ட பெரிய பஸ் வண்டிகளை வைத்திருக்கும் சங்கங்களில் பதிவு உரிமை கொண்ட தனியார் மினிபஸ் சேவைச்சங்க அங்கத்தவர்கள் சிலருக்கே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (1-236)

# செவ்வானம் வெளிவந்துள்ளது

வண்ணை,மே 10

செவ்வானம் இலவச இருமாத இதழ் (சித்திரை 2010) வெளிவந்துள்ளது.

குருநகர், சென்.ஜேம்ஸ்கல்விக் கழகத்தால் பிரான்ஸ் வாழ் பழைய மாணவர் சங்கத்தின் நிதியுதவியுடன் வெளிவந்து கொண்டிருக்கும் செவ்வானத்தின் 25 ஆவது இதழில் 'இது கதையல்ல கலைவானம் - 6' உள்ளூர் கலைஞர்களின் அறிமுகப் பகுதி மற்றும் எமது பல்லைக்குத்தி.., குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியும் அதன் அண்மைக்காலச் செயற்பாடுகளும், அல்லைப்பிட்டியில் வெண்புறவிநகர் ஆகிய கட்டுரைகள் பிரசுரம் ஆகியுள்ளன. (1-160)

# வேலணை பிரதேச நான்காண்டுத் திட்டங்கள்; நாளை திணைக்களத் தலைவர்கள் ஆராய்வர்

யாழ்ப்பாணம், மே 10

வேலணை பிரதேசத்திற்குரிய எதிர்வரும் நான்காண்டுகால அபிவிருத்தித் திட்டங்களை உள்ளடக்கிய மூல்வளத்திரட்டு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு வேலணை பிரதேசத்தில் இயங்கும் அரச திணைக்களங்களின் தலைவர்களும் தங்களது எதிர்வரும் நான்காண்டு கால திட்ட முன்மொழிவுகள், மற்றும் இப்போது நடைமுறைப்படுத்தல் திட்டங்களின் கணனிப் பிரதிகளுடன் சமுகந்தர வேண்டும் என வேலணை பிரதேச செயலர் திரு.மு.நந்தகோபாலன் கேட்டுள்ளார். (1-267)


## உடனடியாகத் தேவை

பருத்தித்துறையில் தங்கிநின்று வேலை செய்யக்கூடிய ஆண்/பெண் இருபாலாரும் தேவை.

★ சிறுவர் பராமரிப்பாளர்கள்
★ சமையல் அனுபவம் உள்ளவர்கள்
★ சுத்திகரிப்பாளர்கள்

நேரில் வரவும் நாளை (11.05.2010) செவ்வாய்க்கிழமை, நேரம்: பிற்பகல் 2 மணி

140,கோயில்வீதி,
யாழ்ப்பாணம். (யுனிசெவ் முன்பாக)

(பி/ 567527)


## 9 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



**அல்போன்ஸ் கிறிஸ்ரீனம்மா (தங்கம்)**

(வேற்றிலைக்கேணி)

தோற்றம் 16★01★1931

மறைவு 10★05★2001

அன்பை ஊட்டி அறிவைப் புகட்டி
அரவணைத்த எம் அம்மாவே!
அவனியிலே எம்மைத் தவிக்கவிட்டு
அம்மா நீங்கள் தனியே சென்றதேனோ?
ஒரு கூட்டுக் கிளிகளாக - ஒன்றாக
கூடியிருந்த நாம்
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்த பின்
தனிமரமாகிய மாயம் தான் என்னவோ
அம்மா நீங்கள் எமை விட்டுப் பிரிந்து
ஒன்பது ஆண்டுகள் சென்றாலும்
என்றென்றும் உங்கள் நினைவுடனே வாழ்கின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக பிரார்த்திக்கும்:

தும்பளை,
பருத்தித்துறை.

(93011)

A.வொலடிறீ


## காணி விற்பனைக்கு

நீர்வேலிவடக்கு,காமாட்சி அம்பாள் ஆலயத்துக்கு அருகாமையில் 8பரப்புக் காணி விற்பனைக் குண்டு.

தொ.பே.0771390328

## முகாமையாளராக ஓர்அரிய சந்தர்ப்பம்

வாழ்க்கையின் பிரகாசமான எதிர்காலத்தை எதிர்பார்க்கும் துடிப்புள்ள இளைஞர், யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். நீங்கள் O/L, A/L சித்திபெற்றவராயின் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எமது Canadian நிறுவனத்தில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் முகாமைத்துவப் பயிற்சி பெறுவதுடன் கவர்ச்சிகரமான சம்பளமும் பெற ஓர் அரிய சந்தர்ப்பம். பயிற்சிக்காலம் 6மாதமாகும்.

Contact.V.Udayarajan 0717494735


## தவறிவிட்டது

யாழ்ப்பாணத்துக்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் பயணத்தின்போது நேசுராசா-ரஞ்சினிதேவி (576063032V),செபரட்ணம் பிரதீபா (796094842V)ஆகிய இரண்டு அடையாள அட்டைகள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள், ரஞ்சினிதேவி,மூத்தவிநாயகர் கோயிலடி, ஆனைக்கோட்டை என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.


## விற்பனைக்கு

LCD T.V - 1 (DVD பிளேயருடன்), பொக்ஸ் செட் (2 சோடி), VDO டெக் - 1, அம்பிளிபயர் - 1, CD பிளேயர் - 1, VDO [illegible] CD பிளேயர் - 1, Sony [illegible] CD - 1

தொடர்பு: 0778449581


## மரண அறிவித்தல்

### கந்தையா பாலச்சந்திரன்



ஏழாலையைப் பிறப்பிடமாகவும், வேலணையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலச்சந்திரன் நேற்று (09.05.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பரமேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும், ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், விஜயகுமார், கவிதா, சோபனா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவநேசன் (ஏழாலை) மற்றும் ஸ்ரீகந்தராசா (சுவிஸ்), கருணாமூர்த்தி (ஏழாலை), காலஞ்சென்ற ஜெயக்கொடி (ஏழாலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், துரைராசா (சாவகச்சேரி), முத்துலிங்கம் (வேலணை), செல்வரத்தினம் (கல்வியங்காடு) ஆகியோரின் அன்பு மைத்துனரும், குமாரின் (தாவடி) மாமனாரும், சரண்ஜா, மதுஷங்கன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2010) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் வட்டாரம்,
வேலணை கிழக்கு.

(98007)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் 250 வைத்தியர்களை ஜூலையில் நியமிக்க நடவடிக்கை

## ஆளுநர் சந்திரசிறி தகவல்



யாழ்ப்பாணம்,மே 10

ஜூலை மாதத்தில் 250 வைத்தியர்களை வட பகுதியில் நியமிக்கப் வதற்கான நடவடிக்கை களை மத்திய சுகாதார அமைச்சு எடுத்து வருவதாக வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஆளுநர் தலைமையில் வடபகுதியின் சுகாதார நிலைமைகள் தொடர்பான கூட்டமொன்று நடைபெற்றபோதே அவர் இத்தகவலை வெளியிட்டார். இக்கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சந்திரகுமார், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் உட்பட சுகாதார அதிகாரிகள், வைத்தியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் ஆளுநரால் பின்வரும் தகவல்கள் வெளியிடப்பட் டன.

*ஆளணி தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

*தற்போது பயிற்சிகள் பெற்றுவரும் 300 தாதியர்களும் 200 மருத்துவ மாதுக்களும் இந்த ஆண்டில் தமது பயிற்சிகளை முடித்துக் கொள்வர்.

*மேலும் 200 பேருக்கு தாதிமார்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படும்.

*பொது சுகாதார பரிசோதகர்கள், மருந்துக்கலவையாளர்கள் ஆகியோருக்கான பயிற்சிகள் ஜூன் முதலாம் திகதி முதல் வழங்கப்படும்.

*புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட 9 வைத்திய நிலையங்கள் எதிர்வரும் மாதம் திறந்து வைக்கப்படும்.

*சாவகச்சேரி, தெல்லிப்பழை, பருத்தித்துறை, சங்கானை, ஊர்காவற்றுறை வைத்தியசாலைகளில் மரண விசாரணைகளை நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இக்கூட்டத்தில் உளநல வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.சிவயோகன் உளநல அபிவிருத்தி தொடர்பாக கருத்துரை வழங்கினார். (6-க-111)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர் சிரமதானம்

யாழ்ப்பாணம், மே 10

உலக செஞ்சிலுவைச் சங்க தினத்தையொட்டி இலங்கை செஞ்சிலுவைச் சங்க தென்மராட்சிக் கிளையினர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டதுடன் வைத்தியசாலை விடுதிகளில் தங்கியிருந்த ஆண்,பெண், குழந்தை நோயாளர்களுக்கு உடுபுடவைகளையும் நுளம்பு வலைகளையும் வழங்கினர்.

கிளைத் தலைவர் செ.மகேஸ்வரன், துணைத் தலைவர் கா.சற்குணதேவன் மற்றும் சங்க உறுப்பினர்களும் தொண்டர்களும் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். (1-207)

# யாழ். -நல்லூர் பிரதேச மத்தியஸ்தர்களுக்கு செயலகத்தில் நாளை விசேட பயிற்சி

யாழ்ப்பாணம்,மே.10

யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் பிரிவுக்காக ஸ்தாபிக்கப்படவுள்ள சனசமூக மத்தியஸ்த சபைகளின் தவிசாளர்கள், உப தலைவர்கள் மற்றும் சகல அங்கத்தவர்களுக்கும் விசேட பயிற்சி மற்றும் கலந்துரையாடல் நடத்த நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான செயற்திட்டம் தீர்மானித்துள்ளது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் மத்தியஸ்த சபைகளுக்கான பயிற்சி நாளை செவ்வாய்க்கிழமை காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 3மணி வரை யாழ்ப்பாண மாவட்ட செய லக கேட்போர் கூடத்தில் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு செயற்திட்ட ஆலோசகர் சட்டத்தரணி எம். திருநாவுக்கரசு கலந்து கொள்ளவுள்ளார்.

இதற்கான அழைப்புக் கடிதங்கள் கிடைக்கப்பெறாவிடினும் யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் மத்தியஸ்தர் சபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறும் யாழ்ப்பாண மத்தியஸ்தர்சபையின் தவிசாளர் வி.ஸ்ரீசக்திவேல் அறிவிக்கின்றார். (1)

# பனைவளத்தை மேம்படுத்துவதற்கு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 10

பனைவளத்தை நம்பி வாழும் குடும்பங்களின் வாழ்வு மேன்மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டு, வளப்படுத்தப்படும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதிமொழி வழங்கியுள்ளார்.

மானிப்பாயில் அமைந்துள்ள வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி கேட்போர் கூடத்தில் நடைபெற்ற வரவேற்பு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்:

பல்வேறு வகையான கோரிக்கைகளை இங்கு முன்வைத்துள்ள போதிலும் அவை பனந்தொழில்சார் விருத்திக்காக நிச்சயம் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.


உங்களது வளமான எதிர்காலத்தை அபிவிருத்தி செய்து உரமூட்டிப் பாதுகாப்பதும் எமது கடமையாக இருக்கிறது.

பனை அபிவிருத்திச் சபை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் நாட்டில் நிலவிய போர் காரணமாக அதன் அலுவலகம் கொழும்புக்கு மாற்றப்பட்ட நிலையில் அதை மீளவும் யாழ்ப்பாணத்தில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் பனந்தொழில்சார் நடவடிக்கைகளில் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த தொழில்துறைசார்ந்த அதிகாரிகளின் ஆலோசனைகள் பெறப்பட்டு அவற்றின் மூலமும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் அமைச்சர் கூறினார்.

கொத்தணியின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்ற முன்பள்ளி ஆசிரியைகளின் நிரந்தர நியமனம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும். உங்களது கோரிக்கைகள் எதிர்காலத்தில் நிச்சயமாகப் படிப்படியாக நிறைவு செய்யப்படும். முக்கியமாக ஒவ்வொரு பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்கள், கொத்தணிகள் உள்ளிட்ட பனை தென்னை வளங்களை நம்பி வாழ்ந்து வருகின்ற குடும்பங்களின் வாழ்வு எதிர்காலத்தில் நல்ல முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டு வளப்படுத்தப் படுமென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார்.

முன்னதாக மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் இசை அணிவகுப்புடன் பிரதான வீதியிலிருந்து வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி அலுவலகத்திற்குப் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலென்ரின் உதயன் ஆகியோரும் அழைத்துச் செல்லப்பட்டனர். (1)




# மண்டைதீவு - அல்லைப்பிட்டி வீதி மக்கள் போக்குவரத்துக்கு

நல்லூர்,மே 10

மண்டைதீவு அல்லைப்பிட்டிக்கான வீதி தற்சமயம் பொதுமக்களின் போக்குவரத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

தீவுப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து மூடப்பட்ட இந்த வீதி மழை, கடல் நீரின் தாக்கங்களுக்கு உட்பட்டு பலத்த சேதமடைந்துள்ளதாகவும் வீதியைப் புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் மண்டைதீவு மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதி போக்குவரத்திற்கு அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து இரு பகுதிக்கான போக்குவரத்தில் ஐந்து கி.மீற்றர் தூரம் வரை குறைவதும் குறிப்பிடத்தக்கது. (1-111)

# அரசறிவியலாளன் இதழ்-3 நூல் வெளியீட்டுவிழா இன்று

யாழ்ப்பாணம்,மே 10

யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறையின், அரசறிவியல் ஒன்றியத்தால் நடத்தப்படும் அரசறிவியலாளன்- இதழ்-3- நூல் வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாக அரசறிவியல் ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர்.

இன்று பி.ப 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை மண்டபத்தில், அரசறிவியல் ஒன்றியத் தலைவர் தி.விக்னேஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு ஆரம்பமாகவுள்ளது.

ஆசியுரையை யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல்துறைத் தலைவர் பேராசிரியர் ஆ.வே. மாணிக்கவாசகர் வழங்குவார். வாழ்த்துரைகளை துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், கலைப் பீடாதிபதி பேராசிரியர் என். ஞானக்குமாரன், உயர் பட்டப்படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன், முன்னாள் துணைவேந் தரும், வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை, சமூகவியல்துறைத் தலை வர் கே.ரீ.கணேசலிங்கம் ஆகியோர் வழங்குவர்.

நூலின் மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி வழங்குவதுடன், இந்த இதழின் ஆசிரியர் சி.திருச்செந்தூரன் நன்றியுரை வழங்குவர். (201-5)

# ஜெயக்குமாரின் சேவையை பாராட்டி அரசசார்பற்ற நிறுவனங்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,மே 10

கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்பணி சி.கே.ஜெயக்குமாரது சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அரசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வி.கேசவராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அங்கம் வகிக்கும் நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டு கௌரவிப்பு நாயகனின் சேவையைப் பாராட்டிப் பேசினார்கள்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் வளர்ச்சிக்கு சி.ஜே.ஜெயக்குமாரின் பங்களிப்பு காத்திரமானது. வடபகுதி தமிழ் பேசும் மக்களின் தேவையை அறிந்து சேவை செய்தவர். கியூடெக் கரித்தாஸ் நிறுவனங்களிலிருந்து விலகுவதானது பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதனை மீள நிரப்புவது கடினமானதாகும் என இணையத்தலைவர் தனது தலைமை உரையின்போது குறிப்பிட்டார்.

கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவினர் விழா நாயகனின் சேவையைப் பாராட்டி வாழ்த்துப்பா வழங்கியும் கௌரவித்தனர். மிகவும் எளிமையாக இடம்பெற்ற இந்தக் கௌரவிப்பு நிகழ்வின் இறுதியில் மதிய போசன விருந்துபசாரமும் இடம்பெற்றது. (1-14)




உலக புவி தினத்தையொட்டி நல்லூர் பிரதேச செயலகம் நடத்திய விழிப்புணர்வுக் கண்காட்சியும் கருத்தரங்கும் அண்மையில் தியாகிகள் அறக்கொடை நிறுவன மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நல்லூர்ப் பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ. சுரேந்திரநாதன் மங்கள விளக்கேற்றுவதையும் நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன் உரையாற்றுவதையும் புவிதினத்தையொட்டி நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவிக்கு யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் பரிசுச் சான்றிதழ் வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகம், அம்பன் பகுதிகளுக்கு தென்பகுதி வைத்தியர்களை நியமிக்க நடவடிக்கை

## ஆளுநர் சந்திரசிறி தெரிவிப்பு

நல்லூர்,மே10

நெடுந்தீவு, அனலைதீவு, அம்பன் பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளுக்கு நிரந்தர வைத்திய அதிகாரிகளை நியமிக்க நடவ டிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட சுகாதாரப் பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடல் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் பாரம்பரிய கைத்தொழில் சிறுகைத் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.சந்திரகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நெடுந்தீவு, அனலைதீவு, அம்பன் பகுதிகளில் நிரந்தர வைத்திய அதிகாரிகள் இன்மையால் இப்பகுதி மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக வைத்தியர்கள் சுட்டிக் காட்டினர்.

இதனையடுத்து இப்பகுதிகளில் தென் பகுதியில் இருந்து வந்து கடமையாற்ற விரும்பும் வைத்திய அதிகாரிகளிடம் விண்ணப்பங்கள் கோரப்படும் எனவும், இது தொடர்பாக கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் சலுகைகளை அறிவிக்கும் விளம்பரங்கள் தென்பகுதிப் பத்திரிகைகள் மூலம் பகிரங்கப் படுத்தப்படும் எனவும் ஆளுநர் சந்திரசிறி தெரிவித்தார்.

(க - 111)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

நந்தாவில் லேன் கொக்குவிலைச் சேர்ந்த
கிருஷ்ணரூபன்-நிரோஜா தம்பதியரின் செல்வப்புதல்வன்

### கிருஷிகன்



தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (10.05.2010) திங்கட்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார் இவரை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, அத்தைமார், மாமாமார், சித்திமார், மச்சாள்மார் மற்றும் அம்மம்மாமார், தாத்தாமார், பூட்டாச்சி, பூட்டத்தாத்தா, கொள்ளுப்பாட்டி ஆகியோர் பல்லாண்டுகாலம் சீரும் சிறப்புடன் வாழ்க என வாழ்த்துகின்றனர்.

நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு.

(சி/567525)

வாழ்த்துவோர்:
குடும்பத்தினர்.



## வாழ்த்துகின்றோம்



பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் பதவி யைப் பொறுப்பேற்று, யாழ்.மாவட்டத்திற்கு வருகை தந்துள்ள

கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா

அவர்களை வருக, வருக வளமுடன் வாழ்ந்து சேவையாற்ற என வரவேற்கின்றோம்.

சங்கானை மரக்கறிச் சந்தை
குத்தகைக்காரரும், ஊழியர்களும்.


## வேலணைப் பிரதேச விளையாட்டு விழா இன்று.

யாழ்ப்பாணம்.மே.10

வேலணைப் பிரதேச செயலகத்தின் விளையாட்டுப் பிரிவின் விளையாட்டு விழா இன்று துறையூர் ஐயனார் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கின்றார்.

கடற்படை கட்டளை அதிகாரி கப்டன் அஜித் சமரசிங்க, பிரதேச செயலாளர் கெ. தவராசா, விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எப்.ஜே.ரூபசிங்க, ஈ.பி.டி.பி தீவக அமைப்பாளர் சி.சிவராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

(1-267)

## சுற்றுலாப் பயணிகள் வருகை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், மே 10

தென்னிலங்கையிலிருந்து யாழ்ப் பாணத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை நாளுக்குநாள் குறைவடைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

நாளொன்றுக்கு நூற்றுக்கு மேற்பட்ட வாகனங்களில் யாழ்ப்பாணத்துக்கு வந்து திரும்பிச் சென்றுகொண்டிருந்தனர். கடந்த சில நாள்களாக மக்கள் வருவது குறைந்து காணப்படுகின்றது.

யாழ்.நகரப் பகுதியில் குறைந்த அளவிலான சுற்றுலாப் பயணிகளைக் காண முடிகிறது.

(1-135)

## முல்லைத்தீவு வைத்தியசாலை புனரமைப்பு

முல்லைதீவு அரசினர் வைத்திய சாலையின் சத்திரசிகிச்சைக்கான அறை, தொழிலாளர்களுக்கான அறை, சிறுவர்களுக்கான சிகிச்சை அறைகள் என்பன அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.இரவீந்திரன் தெரிவித்தார்

முல்லைத்தீவு வைத்தியசாலையின் முழுமையான புனரமைப்புப் பணிகளுக்கென ரூபா 30 மில்லியன் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-111)


## நாஹா மருத்துவ நிலையம்

நீண்ட காலத்திற்கு அதிக வேதனை தரும் பாரிச வாதம், ஆஸ்துமா, எலும்புகள் அதிகளவு பாதிப்பு, பெண்ணியல் நோய்களுக்கானவிசேட சிறப்பு வைத்தியம்.

கிழமை நாள்களில் - 3.30 pm. - 7 pm.
சனி, ஞாயிறு - 8.30 am. - 1 pm.

பெற்றோல் செற் அருகாமை
பலாலி வீதி, உரும்பிராய்.



## 7ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் வேலன் சின்னையா

தோற்றம் 03.08.1911
மறைவு 15.03.2003

திதி - துவாதசி

ஆண்டுகள் ஏழு சென்றாலும்
உம் நினைவுகள் என்றும்
மறையாது அப்பா.

நாகம்மாள் கோயில் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(98004)

இராசரத்தினம்
குடும்பம்.



## தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில் தரும பரிபாலன சபை

### வெளிமடை உற்சவகால கடைகள்-2010

தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோயில் வெளிமடை உற்சவகால (2010.05.14 ஆம் திகதி) கடை நிலங்களை வாடகைக்கு எடுக்கவிரும்பும் வியாபாரிகள் எதிர்வரும் 2010.05.12ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு சபை அலுவலகத்துக்கு நேரில் சமூகமளித்து பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

| கா.புஸ்பராசா | சு.முருகையா | இ.கணேசநாதன் |
|---|---|---|
| செயலாளர் | பொறுப்பாளர் | பொருளாளர் |



திறனுள்ள,அலுவலக நிர்வாகம் கற்ற

## அலுவலக ஊழியர் தேவையா?

### We Have Workforce with Good Attitudes

Fresh & experienced candiadates Trained for 20 Days by the Trainers who worked in Multi National Companies in higher level management.

Call Us-0777-302882 (Working Hrs only -9AM to 5 PM)

## Knowledge Universe

Malaysian ICT & Skills Development Centre

No 75,Temple Road,Jaffna. | enq@kugroup.info | www.kugroup.info



## நெஞ்சை நெகிழ்த்தும் 11ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 26 ★ 10 ★ 1931



மறைவு 30 ★ 04 ★ 2010

### அமரர் வேலுப்பிள்ளை இளஞ்சிங்கம்

எமது நிதியத்தின் பொருளாளர் திரு.இளஞ்சிங்கம் செல்வரஞ்சன் அவர்களின் பாசமிகு தந்தையும் புலோலி தெற்கினை (புற்றளையை) வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய அமரர் வேலுப்பிள்ளை இளஞ்சிங்கம் அவர்களின் மறைவை யொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது இதயம் நெகிழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தனை செய்கின்றோம்.

(சி/567523)

"சாந்தி"
நெல்லண்டை , பருத்தித்துறை.

அமரர் மணியம்
கணபதிப்பிள்ளை ஞாபகார்த்த நிதியம்.



## கார் வாடகைக்கு

திருமணத் தேவைகளுக்கான முற்றிலும் குளிரூட்டப்பட்ட சொகுசுக்கார் வாடகைக்கு விடப்படும்.



தொடர்புகளுக்கு:
0212228984,
0773747825, 0776152992.

இல.45, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.



## காணி விற்பனைக்கு இல்லை

நீர்வேலி வடக்கில், அரசொல்லை என்ற 11 பரப்பு ஆதனமும் வீடும், கிணறும் விற்பனைக்கு இல்லை என அறியத் தருகின்றேன். எவரும் தவறான அறிவித்தலைப் பெற்று ஏமாற வேண்டாம் எனவும் அறியத்தருகின்றேன்.

உறுதி பதிவு இல. K 404/125.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில்
க.பொ.த (சா/த) பரீட்சை 2009 இல்
திறமையாகச் சித்தியெய்திய மாணவர்கள்

தமிழ் மொழிமூலம்

| | |
|---|---|
| ★ சுபேந்திரன் ஜெயந்தினி | 7ஏ, 1பி, 1எஸ். |
| ★ தியாகராஜா ரஜிதா | 6ஏ, 1பி, 1சி, 1எஸ். |
| ★ தில்லைநாதன் சரூபி | 5ஏ, 3பி, 1சி. |
| ★ மெய்கண்டதேவர் சோபனா | 4ஏ, 1பி, 3சி, 1எஸ். |
| ★ அரியரட்ணம் ஆரணி | 3ஏ, 5பி, 1எஸ். |
| ★ தேவகுமார் கௌசிகா | 3ஏ, 3பி, 2சி, 1எஸ். |
| ★ நாகேந்திரன் துர்க்கா | 3ஏ, 2பி, 2சி, 2எஸ். |
| ★ தவராஜா சாத்வீகா | 3ஏ, 2பி, 2சி, 2எஸ். |
| ★ புஸ்பராசா பௌஸ்ரீனா | 3ஏ, 1பி, 5சி. |
| ★ பத்மநாதன் சரண்யா | 3ஏ, 1பி, 2சி, 2எஸ். |
| ★ தர்மராஜா தரண்யா | 3ஏ, 1பி, 1சி, 3எஸ். |

ஆங்கில மொழிமூலம்

| | |
|---|---|
| ★ சந்திரவேல் சாருசா | 8ஏ, 1பி. |
| ★ செல்வராசா தர்சிகா | 8ஏ, 1பி. |
| ★ மகேந்திர ராசா கௌசிகா | 6ஏ, 3பி. |
| ★ சுபேந்திரன் சுகண்யா | 6ஏ, 2பி, 1சி. |
| ★ கோபாலகுமாரன் தேனிகா | 6ஏ, 1பி, 2சி. |
| ★ ஜெகதீசன் கீர்த்தனா | 6ஏ, 1பி, 2சி. |
| ★ அருட்பிரகாசம் யஸ்மின் | 5ஏ, 2பி, 1சி, 1எஸ். |
| ★ பத்மநாதன் ஜனனி | 5ஏ, 1பி, 1சி, 2எஸ். |
| ★ சின்னராசா மிசியானா | 3ஏ, 3பி, 1சி, 2எஸ். |
| ★ கஜேந்திரலிங்கம் கஜேந்தினி | 3ஏ, 2பி, 3சி, 1எஸ். |

மேற்படி மாணவர்கள் எதிர்காலத்திலும் சிறப்பான சித்திகளைப் பெற்று வளமாக வாழ வாழ்த்துவதுடன் இவர்களுக்கு உறுதுணையாக இருந்து சிறப்பாகச் செயற்பட்ட அதிபர், ஆசிரியர்களையும் மனமாரப் பாராட்டி நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி,
பருத்தித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளங்கள் இருந்தும் உற்பத்தி முதலீடுகள் வடக்கில் இடம் பெறக்காணோம்!

## போருக்குப் பின்னரான அபிவிருத்தி கருத்தரங்கில் பல்கலை. பொருளியல் துறை தலைவர் கவலை

யாழ்ப்பாணம்,மே10



வடபகுதியில் போதுமான வளங்கள் உள்ள போதிலும் அவற்றைப் பயன்படுத்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. தற்போது அபிவிருத்தி என்னும் பெயரில் வர்த்தக முதலீடுகள் மேற்கொள்ளப்படுகிறதே தவிர உற்பத்தி முதல்கள் எதுவும் இடம்பெறவில்லை என யாழ்.பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் வி.பி. சிவநாதன் தெரிவித் தார்.

'போருக்கு பிந்திய வடக்கு - கிழக்கில் பொருளாதார அபிவிருத்தி அணுகுமுறை எவ்வாறு உள்ளது? என்னும் தலைப்பிலான கலந்துரையாடல் கடந்த முதலாம் திகதி கலைக் கோட்டம் மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் வளவாளராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடமாகாணம் தவிர அனைத்து மாகாணங்களிலும் பிரதேச அபிவிருத்தி இடம் பெற்று வருகின்றது. போருக்குப் பின்னரான அபிவிருத்தியை எவ்வாறு நோக்குவது என்பது அவசியமானதே. போரை நடத்தியவர்களா அல்லது போரில் பாதிக்கப்பட்டவர்களா அல்லது அரசா எனும் கேள்வி எழுகிறது. வடக்கு, கிழக்கு அபிவிருத்தி தொடர்பான ஏதேனும் பேரின பொருளாதார கொள்கையை அரசாங்கம் கொண்டிருக்கிறதா?

மொத்தத் தேசிய உற்பத்தியில் 7 அல்லது 8 வீதம் மட்டுமே வடக்குக் கிழக்குப் பகுதியிலிருந்து- பங்களிக்கப்படுகிறது அப்படி என்றால் என்ன காரணம்?

எமது பகுதியில் போதுமான வளம் இருக்கிறது. எனினும் அந்தப் பகுதிகளுக்கான பேரின பொருளாதாரக் கொள்கை அரசிடம் இல்லை என்பதே உண்மை, சங்கிலி மன்னன் காலத்தில் கூட வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

சேமிப்புப் பழக்க வழக்கமுள்ள எமது பகுதிகளில் ஏன் முதலீடு செய்யப்பட வில்லை? மூலதனம் தொடர்பான கொள்கை இல்லை முரண்பாடான கொள்கையே உள்ளது.

மனித மூலதனக் கொள்கை வகுக்கப் படவில்லை. பொருண்மிய முன்னேற்ற செயன்முறை இல்லை. சமூக பொருளாதார சுதந்திரம் இல்லை. தொழில் முயற்சியாளர்களிடமிருந்து நேரடி, மறைமுக வரி செலுத்தப்படுகிறது எனினும் தொழிலை மேம்படுத்தும் திட்டங்கள் ஏதும் இல்லை.

கடல் வளம், விவசாயத்துறை, போக்குவரத்துதுறை வங்கிச் சேவைகளில் எவ்வாறான முன்னேற்றம் இருக்கிறது? கல்வி ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. கல்விக் கொள்கைகள் கல்வி அமைச்சினால் தீர்மானிக்கப்படுகிறதே தவிர பிரதேச மட்ட தீர்மானமாகவில்லை.

வர்த்தக .முதல்கள் மேற்கொள்ளப்படுகிறதே தவிர உற்பத்திக்கான முதலீடுகள் எதுவும் இடம்பெறவில்லை.

எமது பகுதியின் அபிவிருத்தி அணுகுமுறைக்குத் தடையாக வெளிவாரி காரணிகளும் உள்ளன. குறிப்பாக இயற்கை அனர்த்தங்கள். அத்துடன் உலகமயமாதலின் ஊடான விளைவுகளும் தடையாக அமையலாம். உதாரணமாக எமது பகுதிக்கு இந்திய வர்த்தகர்களின் படையெடுப் பைக் குறிப்பிடலாம்.

### கைத்தொழில் முடக்கம்

மேலும், எமது பகுதிக்கான அபிவிருத்தி அணுகுமுறைகளில் வளப்பிரதேசங்கள் இராணுவ தளமையங்களாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். இதனால் பாரிய கைத்தொழில்கள் முடக்கப்பட்டிருக்கின்றன.

அரசின் உறுதியற்ற பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகள் முதலிடுவதற்கு நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தியிருக்கிறது.

விவசாயம், மீன்பிடித்துறை வளங்கள் எமக்குப் போதுமானது அவற்றைப் பயன்படுத்த அனுமதி கிடைத்தால் முன்னேற முடியும். யாழ்ப்பாண மக்கள் மீளமீள எழக் கூடியவர்கள். சந்தர்ப்பம் கிடைத்தால் முன்னேறிவிடுவார்கள்.

தொழில்துறைகள் பன்முகப்படுத்தப் பட வேண்டும். அத்துடன் வளத்தை அடிப்படையாகக் கொள்ளாத தொழில் துறை தந்திரோபாயங்கள் தேவை. அதன் மூலம் புதிய துறைகள் உருவாக்கப்பட வேண்டும். அத்துடன் சிவில் சமூகத்தின் தேவை நிறைவேற்றப்படவேண்டும்- என்றார். (ப-14)

# 1 வருடத்துக்கு முன்னர் கடித்தது விசர்நாய்; குரைத்தபடியே இளைஞன் பரிதாப மரணம்

யாழ்ப்பாணம்,மே 10

கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் விசர் நாய் கடிக்கு இலக்கான இளைஞர் ஒருவர் நாயை போன்று குரைத்தபடியே மரணமானார். இச்சம்பவம் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

ஒரு வருடத்துக்கு முன்னால் நாயினால் கடியுண்ட இந்த இளைஞருக்கு திடீரென ஏற்பு வலி உண்டானதால் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பயனளிக்காத நிலையில் சம்பந்தப்பட்ட இளைஞன் நாயைப் போன்று குரைத்தபடியே மரணமானார். உடுவிலை சேர்ந்த சு.தனுஷன் (வயது -18) என்பவரே இவ்வாறு பரிதாபமாக மரணமடைந்தவர்- ஆவார்.

விசர் நாய்க் கடிக்கான ஏ.ஆர்.வி. ஊசி மருந்தினை உரிய முறையில் இவர் உள்ளெடுக்காமையாலேயே இவ்வாறு இளைஞரின் மரணம் சம்பவித்ததாகவும், எனவே விசர்நாயால் கடியுண்டவர்கள் அலட்சியமாக இராது தகுந்த சிகிச்சையை அருகி லுள்ள வைத்தியசாலைகளில் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (04-224)

# போதனா வைத்தியசாலையில் பின்வாசலூடாக சடலங்களை கொண்டு செல்ல வசதி

யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மரணமாகும் நோயாளரின் சடலங்களை இப்போது வைத்தியசாலையின் பின்புற வாசலினூடாக எடுத்துச் செல்லக்கூடியதாக இருப்பதால் பொது மக்கள் நன்மை அடைந்துள்ளதாகக் கூறப் படுகிறது.

வெலிங்டன் வீதி, மக்களின் பாவனைக்குத் திறந்து விடப்பட்டதை அடுத்தே வைத்தியசாலையில் மேற்படி வீதியில் இருக்கும் பின்புற வளவு அத்தியாவசிய சேவைக்கென திறக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் மரணமாகும் நோயாளர்களின் சலடங்களை இதுவரை காலமும் முன்பக்க நுழைவாயிலூடாகவே கொண்டு செல்லப்பட்டு வந்தது குறிப் பிடத்தக்கது. (04 -224)

# வடமாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக அருள்ராஜ் பதவியேற்பு

யாழ்ப்பாணம்,மே 10

வடமாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக எஸ்.அருள்ராஜ் பதவி ஏற்றுள்ளார். இதுவரை காலமும் வடமாகாண சமூக சேவைகள் பணிப்பாளராக இவர் கடமையாற்றினார்.

இதேசமயம் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக இது வரையும் பணியாற்றிய சுப்பிரமணிய சர்மா கடந்த 30 ஆம் திகதியுடன் தனது பணியிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்றுள்ளார்.

அதேசமயம் வடமாகாண சமூக சேவைகள் பணிப்பாளராக எஸ். சிவகரன் பதவியுயர்த்தப்பட்டுள்ளார். (04-224)

# புதிதாக நியமனம் பெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் திருமலையில் இன்று ஆளுநருடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே10

வடமாகாணத்தில் புதிதாக நியமனம் பெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோத்தர்கள் இன்று வடமாகாண ஆளுநரை சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

இந்த சந்திப்பு திருகோணமலையில் இடம்பெறவுள்ளது.

புதிதாக நியமனம் பெற்று கடந்த வாரத்தில் தத்தம் பதவிகளை ஏற்ற பின்னர் ஆளுநரை சந்தித்துக் கலந்துரையாட வுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொள்வதற்காக யாழ். மாவட்டத்தில் இருந்து நியமனம் பெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் திருமலைக்கு புறப்பட்டு சென்றுள்ளனர். இச்சந்திப்பில் வடமாகாண கூட்டுறவு திணைக்கள உயரதிகாரிகளும் கலந்து கொள்வார்கள். (1-224)




# வடமாகாணத்தின் 3 தபாலகங்களின் பாவனைக்கென புதிய வாகனங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம் ,மே 10

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் உள்ள மூன்று தபாலகங்களுக்கு வாகனங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

யாழ்.பிரதம தபாலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாணப் பிரதி அஞ்சல் மா அதிபர் வி.குமரகுரு இந்த மூன்று வாகனங்களையும் உத்தியோகபூர்வமாக வழங்கினார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய தபாலகங்களுக்கே இந்த மூன்று வாகனங்களும் விநியோகிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ். பிராந்திய அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஜெபரெட்ணம், வவுனியா பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் கே.புஸ்பநாதன், யாழ்.பிரதம தபால திபர் எஸ்.யோகஞானம், பிரதேசக் கணக்காளர் திருமதி எஸ்.கலைச்செல்வன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த மூன்று புதிய வாகனங்களும் அஞ்சல் மா அதிபர் கே.திசநாயக்காவின் அயராத முயற்சியின் பயனாகவே இங்கு கொண்டு வரப்பட்டதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (04-224)

# மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தாவில் பவள விழா நிகழ்வு சிறப்பாக நடந்தது

யாழ்ப்பாணம்,மே 10

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தின் 75 ஆவது வருட பவள விழா கடந்த வெள்ளிக்கிழமை நடை பெற்றது.

வித்தியாலய அதிபர் மு. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை தலைவர் பேராசிரியர் மா. சின்னத்தம்பி முதன்மை விருந்தினராகவும் தென்மராட்சி கல்வி வலய முறைசாராப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. ஸ்ரீஸ் கந்தமூர்த்தி, சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலர் கு.சிவானந்தம், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

கடந்த வருட ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற வித்தியா லயத்தில் கற்கும் மகாதேவா ஐங்கரன் என்னும் மாணவனுக்கு மிதிவண்டியும் வித்தியாலய மாணவர்களுக்கு சீருடைகளும் அமரர் விஸ்வலிங்கம் சசிகலா நினைவாக அன்னாரது குடும்பத்தினரால் விநியோகிக் கப்பட்டன.

பவள விழாவை முன்னிட்டு 'கந்தவரோதயம்' என்னும் நூல் வெளியிடப்பட்டது.

# அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடும் பணி

யாழ்ப்பாணம், மே 9

கரைநகர் பிரதேசத்தில் நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடும் பணிகள் இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க்கிழமையும் நடைபெறவுள் ளன.

இந்த நிகழ்வு காரைநகர் பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும் என்று செயலக நிறுத்தல் அளவைப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இதன்போது காரைநகர் பகுதி வர்த்தகர்கள் தமது நிறுத்தல் கருவி களுக்கு முத்திரையிட்டுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

(4-224)



மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய 75 ஆவது ஆண்டு பவள விழா மலர் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
நிகழ்வில் ' கந்தவரோதயம்' பவள விழா மலரை தென்மராட்சிக் கல்வி வலய முறைசாராப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி வெளியிட்டு வைப்பதையும் மாணவர்களுக்கு அமரர் திருமதி சசிகலா விஸ்வலிங்கம் நினைவாக அவரது உறவினர் திருமதி இ. இராஜசேகரன் சீருடைகள் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: தென்னவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண ஒலிம்பியாட் பயிற்சிநெறிக்கு தெரிவான மாணவர்களின் விவரங்கள்

## பரீட்சைக் கட்டணங்களும் மீளளிக்கப்படும்

யாழ்ப்பாணம், மே10

தரம் 6 கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் வடமாகாண மட்டப் பயிற்சி நெறிக்கான தெரிவுப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களிடம் பரீட்சைக் கட்டணத்தை அறவிடுவதில்லையென மத்திய கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இதற்கமைய பரீட்சைக்காக அறவிடப்பட்ட கட்டணங்களை மீளளிக்குமாறும், மீளளிக்கப்பட்ட கட்டண விவரங்களையும் மாணவர் பெயர் விவரங்களையும் இன்றைய தினம் வடமாகாண கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர்களை வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இதனிடையே மார்ச் மாதம் 20ஆம் திகதி யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்ற தெரிவுப் பரீட்சையின் அடிப்படையில் வட மாகாண மட்டத்தில் நடைபெறவுள்ள பயிற்சி நெறிக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் விவரங்கள் வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான பயிற்சி நெறிகள் இந்தமாதம் எதிர்வரும் சனிக்கிழமை யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகம், வவுனியா தமிழ் மகா வித்தியாலயம் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட மாணவர்களை அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு யாழ்.வலயக் கல்வி முகாமைத்துவ மண்டபத்திற்கு சமுகம் தருமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

### கணிதம்

சச்சிதானந்தம் கௌரீசன் - வவுனியா விபுலானந்தா கல்லூரி, தேவபாலன் கஜவதனன்- ாவகச்சேரி இந்துக் கல்லூரி, நந்தகுமார் குமரன் - வவுனியா தமிழ் மத் திய மகா வித்தியாலயம், புஸ்பாகரன் பிருந்தாபன் - கரவெட்டி, விக்னேஸ்வராக் கல்லூரி, தருமராசா சஜீபன் - தெல்லிப் பழை மகாஜனாக் கல்லூரி, தெய்வேந்திரன் கிருசன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

பாஸ்கரக்குருக்கள் யதுநந்தன சர்மா - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, சபேசன் பூஜா - வவுனியா றம்பைக்குளம் ஜி.எம்.வி, ஸ்ரீஸ்கந்தராஜா அபிராமி - வவுனியா றம்பைக்குளம் ஜீ.எம். வி, றேமன் ரவீந்திரன் ஸ்ரெலின்டிநோசன் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, செல்வகுணாளன் ஜோஎல் பிவீன் - யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி, ஸ்கந்தராஜா டர்மிகா - யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் கல்லூரி.

செந்தில்குமரன் செல்வராஜா - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, ரவிச்சந்திரன் தவதன்ஜா - வவுனியா றம்பைக்குளம் ஜீ.எம்.வி, அன்னலிங்கம் கௌசிகன் - மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், சிவகுமார் லக்ஸ்சிகா - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், புவனேஸ்வரன் தர்மிகா - யாழ்ப்பாணம் - வேம்படி பெண்கள் கல்லூரி.

சபாபதிப்பிள்ளை கோபிதன் - ஹாட்லிக் கல்லூரி பருத்தித் துறை, செல்வராஜ் டசிகரன் - ஹாட் லிக் கல்லூரி, பருத்தித்துறை, யோகலிங்கம் றசீசன் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், ஈஸ் வரன் நந்தலக்ஸன் - யாழ்ப்பாணம் - இந் துக் கல்லூரி, செல்வம் அன்றூ பேர்டினன்- மன்னார் சென்சேவியர் ஆண் கள் கல்லூரி.

நாகேந்திரராசா கரன்ராஜ் - ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை, யோகராஜா நிரோஜன்- ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை, தயாநந்தன் றதீபன் - கொக்குவில் இந்துக் கல்லூரி.

அட்சயன்ராஜேந்திரன் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, அலெக்ஸ்சாண் டர் கஸ்ரோ டிரோன் - யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, சத்தியநாதன் புகலோன் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யோகநாதன் தருணன் - வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்.

### விஞ்ஞானம்

லோகேஸ்வரன் ஸ்ரீகர்ஷன் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, மகேந்திரராஜா ஜனகன் - யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரி, கிருபாகரன் வினோஜன் - தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, கருணாநிதி வாகீசன் - வவுனியா விபுலானந்தா கல்லூரி, ராஜசேகரன் தாட்ஷாயினி - யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி.

தங்கவேலாயுதம் வேல்கஜா- பருத்தித்துறை - ஹாட்லிக் கல்லூரி, அருள் பிரகாசம் அன்புச்செல்வம் - யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரி, பாலச்சந்திரன் அபியுக்தன் - வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், தினகரன் ஆகாஷ் - மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி, அன்னலிங்கம் ஜதுஷன் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கனிஷ்கா மதுசங்க விஜேசிங்கே - வவுனியா (சிங்கள) பெரகும் மகா வித்தியாலயம்.

அருச்சுனன் சுவேந்திரா - யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி, விக்டர் ஆன் கில்டா - மன்னார் தோட்டவேலி ஜி.ரி.எம்.எஸ், சுசீந்திரன் கஜவாகினி - மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி, முருகையா பிருந்தாபன் - இடைக்காடு மகா வித்தியாலயம், பவள சீலன் சர்மிகன் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, பரமானந்தன் கஸ்தூரி - யாழ்ப் பாணம் வேம்படி மகளிர் கல்லூரி, சிறிதரன் குமாரகுலன் - யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரி, நீலலோகன் தவபாலசுந்தரம் - யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரி.

புலேந்திரன் தயாபரன் - பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, ரவிக்குமார் நர்மிகா - மெதடிஸ்த மகளிர் உயர்த ரப் பாடசாலை - பருத்தித்துறை, கணேச மூர்த்தி கஜவரன் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, ஜெயபாலன் ஜனார்த்தனன் - வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், விஜேந்திரன் அனுஷாந்தன் - யாழ்ப்பாம் இந்துக் கல் லூரி, சந்திரலிங்கம் கிவஹரனி - மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி.

## தவறி விட்டது

906/23, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய குலசிங்கம் வசீகரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (762592673V) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம், தொழில் அடையாள அட்டை, வங்கி அட்டை மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கறுப்பு நிற பேஸ் கடந்த 06.05.2010 அன்று யாழ்.ஸ்ரான்லி வீதிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்தயவுசெய்து 0773865475 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது மேற்குறிப்பிட்ட விலாசத்தினுடனோ தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (95003)


a member of exp

## பணியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் வெகுவிரைவில் ஆரம்பமாக இருக்கும் பழங்களைப் பதனிட்டு ஏற்றுமதி செய்யும் நிறுவனத்திற்கு

✱18 வயது முதல் 35 வயதுக்கு இடைப்பட்ட பெண் பணியாளர்கள் (நாள் கொடுப்பனவுக்குத்) தேவை. யாழ்.கச்சேரியடியை சூழ்ந்த பகுதியில் வசிப்பவர் விரும்பத்தக்கது.

✱ மேற்பார்வையாளர் பதவிக்கு (Food Technologist) விவசாயத்துறை பட்டதாரியாக இருத்தல்வேண்டும்.

சுயவிவரக்கோவையுடன் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

EXPO PAVILION,
No.: 40, KANDY ROAD,
CHUNDIKULI, JAFFNA.

மேலதிக தொடர்பு: 0773865475. (சி/567520)


## கேரதீவு- பூநகரி பாதை புனரமைப்பு

யாழ்ப்பாணம், மே10

கேரதீவு- பூநகரி இணைப்பு மகாதேவா தாம்போதி வீதி வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வேலை ஆரம்பிப்பதற்கான உபகரணங்கள் கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் சாவகச்சேரி ஊடாக வாகனங்களில் கொண்டு செல்லப்பட்டன.

## யோகாசன வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே10

சிவானந்த மகரிஷி யோக நிலையத்தினால் புதிய யோகாசன வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 6 மணியளவில் வேதாந்த மட தியான மண்டபத்தில் ஆரம்பமாகும். இந்தப் பயிற்சி வகுப்புகள் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய தினங்களில் தொடர்ந்து நடைபெறும். ஏற்கனவே வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் இந்த வகுப்புகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இதில் ஆண்கள், பெண்கள், சிறியவர்கள், பெரியோர் என அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம். (க)

## சீரற்ற மின் விநியோகத்தால் பொதுமக்கள் அவதி

கைதடி, மே10

தென்மராட்சிப் பிரதேசத்திற்கான மின் விநியோகம் கடந்த சில நாள்களாக சீரற்ற நிலையில் இருப்பதாக மின் பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி இரவு வேளைகளில் ஒருமணிக்கொருமுறை என மூன்று நான்கு தடவைகள் மின்சாரம் தடைப்படுவதாகவும் இதனால் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்கள் பெரும் அவலங்களையும் அசௌகரியங்களையும் அனுபவிப்பதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை மின்சாரசபைக்கு தொலைபேசி மூலம் மின் எப்போது கிடைக்கும் எனப் பலராலும் கேட்கப்படும்போது அவர்களிடம் இருந்து மரியாதையற்ற பதிலே கிடைப்பதாகவும் பொதுமக்கள் பலராலும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இவ்விடயத்தில் மின்சார சபை அதிகாரிகள் உயரிய கவனமெடுத்து தென்மராட்சிக்கான மின் விநியோகத்தைச் சீர்படுத்த வேண்டும் எனவும் பொதுமக்களாலும், சன சமூக நிலையங்களாலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (288)


ජාතික සම්පත

சீட்டிழுப்பு இலக்கம் - 19
திகதி - 08.05.2010

ஜாதிக சம்பத Jathika Sampatha — உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து K — அதிர்ஷ்ட இலக்கம் 9 — வெற்றி இலக்கம் 1 7 5 6 7

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | K 9 1 7 5 6 7 | ரூ. 23,402,861.00 | - |
| 1 பரிசு | 9 1 7 5 6 7 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 1 7 5 6 7 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | 7 5 6 7 | ரூ. 10,000.00 | 25 |
| 4 பரிசு | 5 6 7 | ரூ. 1,000.00 | 236 |
| 5 பரிசு | 6 7 | ரூ. 50.00 | 2407 |
| 6 பரிசு | 7 | ரூ. 20.00 | 23072 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசு | 1 7 5 6 | ரூ. 1,000.00 | 22 |
| 8 பரிசு | 1 7 5 | ரூ. 100.00 | 241 |
| 9 பரிசு | 1 7 | ரூ. 50.00 | 2399 |
| 10 பரிசு | K | ரூ. 20.00 | 9475 |
| 11 பரிசு | K 9 | ரூ. 100.00 | 1062 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,829,540.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு 2473360, 2433631
இணையத்தளம் www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு ரூ. 23,811,042.00



சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2119 திகதி 08-05-2010

ஆங்கில எழுத்திற்கும் U

வெற்றி எண்கள் 21 28 32 65 — போனஸ் இல: 27

ஜக்பொட் பரிசு ரூ. 18,101,125/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 169686 | 20/- | 3,393,720/- |
| 2 இல | 12180 | 100/- | 1,218,000/- |
| 3 இல | 261 | 1,000/- | 261,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 6707 | 40/- | 268,280/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 464 | 1,000/- | 464,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 07 | 10,000/- | 70,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 18,101,125/- | - |
| 1 இல + போனஸ் இல | 8100 | 100/- | 810,000/- |
| 2 இல + போனஸ் இல | 362 | 500/- | 181,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 327 | 200/- | 65,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 17 | 1,500/- | 25,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,156,900/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 198126 | | 8,756,900/- |

ஆலிந்தயே வாசனாவின் மூலம் "லக்கி 7" தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்காக தகுதி பெற்ற அதிஷ்டசாலிகள்
G.B. ஜகத் சமன்த பிரியதர்ஷன - ஹோமகம
A.A. ஆரியரத்ன - பியகம

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மொணராகலை | 301892474-5-34 |
| திருகோணமலை | 301894634-0-11 |
| கண்டி | 301902177-7-34 |
| குருணாகல் | 301890660-8-23 |
| கேகாலை | 301906041-4-37 |
| புத்தளம் | 301899679-4-48 |
| கொழும்பு | 301909963-8-44 |
| அம்பாந்தோட்டை | 301895806-0-28 |
| நுவரேலியா | 301894208-0-32 |
| கொழும்பு | 301904485-8-04 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 18,564,375/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தோட்டப் பிரதேசங்களில் அன்னையர் தினம் கொண்டாடும் கலாசாரம் தற்போது இல்லை!

## நுவரெலியா மாவட்ட சிறுவர் ஒன்றியம் தெரிவிப்பு

நுவரெலியா, மே 10

"பெருந்தோட்ட பிரதேசங்களில் அன்னையர் தினம் கொண்டாடும் கலாசாரம் காணப்படவில்லை.எனவே, அன்னையரை கௌரவப்படுத்த வளர்ந்தோர் சமூகம் முன்வர வேண்டும்.''

- இவ்வாறு பிரிடோ நுவரெலியா மாவட்ட சிறுவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து அந்த ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பவை வருமாறு:-

பெருந்தோட்டப் பகுதிகளில் அன்னையர் தினத்தை கொண்டாடும் கலாசாரம் காணப்படவில்லை. பெருந்தோட்ட பகுதிகளில் அன்னையர்கள் மற்றையப் பகுதிகளில் உள்ள அன்னையரைவிட தங்களுடைய பிள்ளைகளுக்காக அதிக சிரமங்களையும், துன்பங்களையும் அனுபவிக்கின்றனர். அதிகாலையில் எழும்பி பிள்ளைகளினதும் வீட்டாரினதும் தேவைகளை நிறைவுசெய்து வேலைக்குச் சென்று வருவது முதல் படுக்கைக்குச் செல்லும் வரையில் ஓயாமல் வேலை செய்பவர்களாக உள்ளனர். அவர்களுக்கு ஓய்வு கிடைப்பதில்லை. பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவது முதல் பிள்ளைகள் தொடர்பான அனைத்து காரியங்களையும் அவர்களே செய்ய வேண்டி உள்ளது. சமய கடமைகள் செய்வதிலும் பிள்ளைகளை அவற்றில் ஊக்குவிப்பதிலும் கூட தாய்மார்களே அதிக அக்கறை எடுத்துக் கொள்கின்றார்கள். பிள்ளைகள் தொடர்பாக நடத்தப்படும் நிகழ்ச்சிகள், கூட்டங்கள் என்பவற்றிலும் தாய்மார்களே பங்கு பற்றுகின்றார்கள். ஆனால், பிள்ளைகளுக்காக இவர்கள் எத்தனை காரியங்கள் செய்தாலும் அவர்களுடைய தியாகமும் அர்ப்பணிப்பும் மதிக்கப்படுவதில்லை. வயதான காலத்திலும் அவர்கள் தங்கள் பேரப்பிள்ளைகளை கவனித்துக்கொள்கின்றார்கள்.

ஆனால், பிள்ளைகள் வளர்ந்த பின்னர் தமது பெற்றோர்களை விசேடமாக தாய்மார்களை கவனிக்காமல் அநாதரவாக விடும் பல சம்பவங்கள் பெருந்தோட்டப் பகுதிகளில் நடக்கின்றன.

இந்தப் பின்னணியில் ஒவ்வொருவரும் மே மாதம் 9 ஆம் திகதி அன்னையர் தினம் கொண்டாடப்பட இருப்பதால் அன்னையரை மதித்து அவர்களுடைய தியாகத்தையும் அர்ப்பணிப்பையும் கௌரவிப்பதற்காக நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம் அன்னையரின் முக்கியத்துவத்தை சமூகத்திற்கு எடுத்துக்காட்டுவது அவசியமாகும்.

இந்தக் கருத்தை வலியுறுத்துவதற்காகப் பிரிடோ நிறுவனத்தின் கீழ் உள்ள அனைத்து சிறுவர் கழகங்களும் தத்தமது தோட்டங்களில் விசேட நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளனர். தாய்மார்களுக்காக பூஜை நடத்துதல், அவர்களுக்கு மலர்களை வழங்கி வாழ்த்து சொல்லுதல், இனிப்பு வழங்குதல், சிறுவர் கழகக் கூட்டங்களில் தாய்மாரை கௌரவித்தல் உட்பட வேறு பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளனர். விசேடமாக அன்னையரை மதிக்க வேண்டிய அவசியம் குறித்த கருத்துக்கள், சுவ ரொட்டிகள் மூலம் அனைவரின் பார்வைக்கும் வைக்கப்படும்.

சிறுவர் கழகங்கள் இல்லாத தோட்டங்களிலும் இவ்வாறான நிகழ்வுகளை நடத்தி அன்னையரை கௌரவப்படுத்துவதற்கு வளர்ந்தோர் சமூகம் முன்வர வேண்டும் என பிரிடோ சிறுவர் கழக ஒன்றியம் வேண்டுகோள் விடுக்கின்றது.

இதேவேளை, வீடுகளில் ஆண்களும் வீட்டு வேலைகளில் பங்களிப்பு செய்வதன் மூலம் அன்னையருக்கு ஓய்வுநேரம் கிடைப்பதற்கும், தந்தைமாரிடமும், ஆண்களிடமும் வேண்டுகோள் விடுப்பதுடன், தத்தமது வீடுகளில் உள்ள வயதான தாய்மாரை கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடத்துவதன் மூலம் தமது பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக வாழ பெற்றோர்கள் முன்வரவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறது - என்றுள்ளது.

# மரை, பன்றி இறைச்சிகளை விற்பனை செய்த நபர் கைது!

நுவரெலியா, மே 10

மஸ்கெலியா நகரில் சில தினங்களுக்கு முன் மரை இறைச்சி மற்றும் பன்றி இறைச்சி விற்பனை செய்வதற்காக வைத்திருந்தார் என்றச் சந்தேகத்தின் பேரில் வியாபாரி ஒருவரை வனபாதுகாப்பு அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவரை ஹட்டன் நீதிமன்ற நீதிவான் சந்துன் வித்தான முன்னிலையில் ஆஜர் செய்தபோது நீதிவான் சந்துன் வித்தான, சந்தேக நபருக்கு ரொக்கப் பிணையாக ஆயிரம் ரூபாவும், சரீரப் பிணையாக ஒரு லட்சம் ரூபாவும் செலுத்துமாறு பணித்துள்ளார்.

வனப்பகுதிக்குப் பொறுப்பு வாய்ந்த உயர் அதிகாரி என்.பி. புஸ்பகுமாரவால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ரொக்கப் பிணை யிலும், சரீரப்பிணையிலும் விடுவிக்கப்பட்டார். அத்துடன், இறைச்சி வைத்திருந்த இரு அதி கூடிய குளிரூட்டிகளை நீதிமன்றத்தின் கட்ட ளையின் படி தடுத்து வைத்துள்ளனர். தற்போது இறைச்சிகளுடன் இக்குளிரூட்டிகளும் நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

# ஹப்புத்தளையில் கஞ்சாப்பயிர் செய்கை; ஐந்து சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது

பதுளை, மே 10

ஹப்புத்தளை, நூறு ஏக்கர் என்ற பிரதேசத்தில் கஞ்சாப் பயிர் செய்கையில் ஈடுபட்ட ஐவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐம்பத்து நான்கு கிலோ கிராம் கஞ்சாவும் மற்றும் சுமார் ஒன்றரை ஏக்கரில் கஞ்சாப் பயிர்செய்கை இடத்தையும் பொலிஸால் கைப்பற்றியுள்ளனர்.

ஹப்புத்தளை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றையடுத்து கடந்த மூன்றாம் திகதி அதிகாலையில் குறித்த இடத்தைப் பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர்.

இதன்போது கஞ்சாப்பயிர்களுக்கு பராமரிப்புகளை மேற்கொண்டிருந்தபோது குறித்த நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை பண்டாரவளை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியங்கர குமார தெரிவித்தார்.

## பொல்லால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை!

நுவரெலியா, மே 10

நிவித்திகலைப் பிரதேசத்தில் பொல்லால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

உயிரிழந்தவர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தனது மனைவி மீது அசிட் திராவகம் வீசிக் காயமேற்படுத்த முனைந்தபோது இந்தக்கொலை இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக உயிரிழந்தவரின் மனைவியை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# மலையகத்தில் மழை ஓய்ந்தது இயல்பு நிலை மீண்டும் திரும்பியது

கண்டி, மே 10

மலையகப் பகுதியில் சில தினங்களாகப் பெய்துவந்த இடியுடன் கூடியமழை தற்போது ஓய்துவிட்டது. இதனால் மலையம் இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது.

இதன் காரணமாக மஸ்கெலிய பகுதியிலுள்ள மவுசாகல்ல நீர்தேக்கத்தின் அடியில் புதைந்துள்ள மஸ்கெலிய பழைய நகரத்தின் கோயில் முழுமையாக தெரிகின்றது. அத்துடன், நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் பாரிய அளவு குறைந்துள்ளது.

கடந்த சில நாள்களாகப் பெய்துவந்த மழைகாரணமாக மலையகத்தில் பல் வேறுப் பகுதிகளில் மண்சரிவுகள் ஏற்பட்டன. இதனால் போக்குவரத்து,மின்சாரம் பாதிக்கப்பட்டிருந்தன.

அத்துடன், இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக பெரும் எண்ணிக்கையிலான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். தற்போது அப் பிரதேசங்களில் மழை குறைவடைந்துள்ளதால் மக்களின் போக்குவரத்து தொடர்ந்துள்ளதுடன்,மின்சாரமும் இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது.

# கட்டுகஸ்தோட்டை பாடசாலைக்கான ஆசிரியர் விடுதிகள் பழுதடைந்துள்ளன

கண்டி, மே 10

கட்டுகஸ்தோட்டை கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்குச் சொந்தமான பெரும்பாலான ஆசிரியர் விடுதிகள் பழுதடைந்துள்ளன.

இவை கூரைகளுடைந்து, மழைநீர் ஒழுகி, சுவர் கள் இடிந்துவிழும் நிலைக்கு உட்பட்டுள்ளதாக அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக ஏற்கனவே உரிய அதிகாரிகளுக்கு பல அறிவித்தல்கள் விடுக்கப்பட்டும்கூட எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளாது விட்டிருந்தமையே இந்நிலைமைக்குக் காரணம் எனவும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

தொலை தூரங்களிலிருந்து பாடசாலைக்கு வருகை தரும் அதிபர், ஆசிரியர் ஆகியோர் தங்குமிட வசதியின்றி பெரும் கஷ்டங்களையும் மேலதிக செலவுகளையும் எதிர்கொள்ள நேரிடுவதை தவிர்த்து, அவர்களது மனோநிலையை சீராக்கி கடமைகளை செவ்வனே புரிய மேற்படி விடுதிகளைப் புனரமைக்க உதவுமாறு பாடசாலை அபிவிருத்தி சங்கங்களின் கோரிக்கையும் சம்பந்தப்பட்ட நிர்வாகங்கள் புறக்கணித்து நடந்துகொண்டதால் இன்று அவை எவருக்கும் பயன்னடாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன எனவும் அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (10-188)




# கண்டி பஸ்நிலையத்தை அதிகாலை நேரத்தில் பார்வையிட்டார் போக்குவரத்துப் பிரதி அமைச்சர்

வத்துகாமம், மே 10

போக்குவரத்து பிரதி அமைச்சர் ரோஹண திஸாநாயக்க அதிகாலை வேளை யில் திடீரென கண்டி நகருக்கு வந்து பஸ் நிலையங்களில் நிலவும் குறைபாடுகளைக் கண்டறிந்தார்.

கண்டி 'குட்செட்' பஸ்நிலையம், மணிக்கூண்டு பஸ் நிலையம் என்பவற்றிற்கு நேரில் வந்து பயணிகளுடனும் இ.போ.ச. ஊழியர் களுடனும் கதைத்து நிலைமைகளை அறிந்துகொண்டார்.

# கம்பளையில் பொலிஸார் மீது தாக்கு: இரண்டுபேர் வைத்தியசாலையில்

கண்டி, மே 10

கம்பளையில் அவசர அழைப்பொன்றில் கிடைத்த முறைப்பாட்டை விசாரிக்கச் சென்ற பொலிஸார் மீது இனம் தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மூன்றாம் திகதி (திங்கட்கிழமை) கம்பளை மரகச்சந்தியில் வைத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சம்பவத்தில் காயமடைந்த இரு பொலிஸார் கம்பளை போதனா வைத்தியசாலையில் சேக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சம்பவம் தொடர்பாக கம்பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மஹியங்கனையில் விபத்து: பத்துபேர் படுகாயம்!

பதுளையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலாச் சென்றுவிட்டு திரும்பிக்கொண்டிருந்தவர்கள் பயணித்த தனியார் பஸ் ஒன்று மஹியங்கனைப் பகுதியில் வைத்து விபத்துக்குள்ளானதில் பத்துபேர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மேற்படி விபத்தில் பதுளை, அட்டாம்பிட்டியைச் சேர்ந்தவர்கள் காயமடைந்த நிலையில் மஹியங்கனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சிவனொளிபாதமலை யாத்திரை காலம் எதிர்வரும் 27 ஆம் திகதியுடன் நிறைவு

நுரெலியா, மே 10

எதிர்வரும் 27 ஆம் திகதி பௌர்ணமி தினமான வெசாக் தினத்துடன் கடந்த 6 மாத காலமாக இடம்பெற்றுவந்த சிவனொளிபாதமலை யாத்திரைக் காலம் நிறைவு பெறுகின்றது.

28 ஆம் திகதி சிவனொளி பாதமல்லயின் உச்சியில் இருந்து சமன் தெய்வம் எமடத்தில் வைக்கப்பட்டு, பிரித் ஓதப்பட்டு மீண்டும் சித்தாலேப நிறுவனத்தின் வாகனத்தின் மூலமாக வாகன தொடர் அணியுடன் நோட்டன் வழியாக கினிகத்தேனை, கித்துல்கல, எட்டியாந்தோட்டை, அவிசாவளை, இரத்தினபுரி பெல்மடுல்லயில் உள்ள கல்பொ[illegible] மகா விகாரைக்கு எடுத்துச் செல்லப்பட உள்ளது என சிவனொளி பாதமலைக்குப் பொறுப்பான தேரர் தம்பால சீலனந்த தெரிவித்தார்.

# மத்திய மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவரின் நியமனத்தை ஏற்க மறுத்தார் சபைத் தலைவர்

கொழுப்பு,மே 10

மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராக கே.கே. பியதாஸ நியமனம் செய்துள்ளதாக ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும்,செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவும் கையொப்பம் இட்டு அனுப்பியுள்ள கடிதத்தை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாதென அச்சபையின் [illegible] பண்டார கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த சபை அமர்வின் போது தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் 11 பேர் கே.கே.பியதாஸ நியமனத்துக்கு ஆட்சேபம் தெரிவித்து கையெழுத்திட்ட கடிதம் தன்னிடம் சமர்பிக்கப்பட்டிருப்பதாலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட் டுள்ளது என அவர் சுட்டிக்காட்டினார்.

இச்சமயம் கருத்து தெரிவித்த முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, வரலாற்றில் முன்னெப்போதும் நடந்திராத சம்பவம் இது எனவும் கட்சித் தலை வரின் தீர்மானப்படி சரியான முடிவு எடுக்கப்பட வேண்டுமெனவும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 152 வருடங்களுக்கும் மேலாக நின்று நிலைத்துள்ள யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்



யாழ்.நகரின் மத்தியிலே "அறன் எனப்பட்டதே வாழ்க்கை" எனும் சீரிய கருத்தினைத் தனது கல்விச் செயற்பாடுகளினாலும் இழுக்கிலா ஒழுக்கம் வளர்க்கும் செயல்களினாலும் மாண்புறு கருத்துக்களினாலும், போதித்துச் சிறந்த ஒரு சமுதாயத்தை உருவாக்கும் நோக்கோடு தோற்றுவிக்கப் பட்டதே வண்ணை நாவலர் ம.வி. ஆகும். அக்காலத்தில் அழிவுப்பாதை நோக்கிப் பயணிக்க எத்தனித்த எமது சைவ சமயத்தையும் அதனுடைய அளப் பரிய பாரம்பரியங்களையும் பேணிக்காத்து, வளர்த்து வரும் நல்லெண்ணத்துடன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களால் பல்வேறு இன்னல்களுக் கும் மத்தியில் உருவாக்கப்பட்ட மிகப் பெரிய கல்விப் பொக்கிஷமே யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயமாகும். அந்த வகையிலே இற்றை வரை சுமார் 152 வருடங்களுக்கு மேலாக எமது சைவத்துக்கும் தமிழுக்கும் சிறந்த சேவையாற்றி வருகிறது என்றால் மிகையாகாது.

இத்தனை முக்கியத்துவம் மிக்க இவ்வித்தியாலயத்தின் ஆரம்ப காலவரலாற்றைப் பார்ப்போமானால்;

சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகப் போற்றிய ஆறுமுக நாவலர் அவர்களால் 1848 ஆம் ஆண்டில் " சைவப்பிரகாச வித்தியாசாலை" என்ற நாமம் இடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டதே இப்பாடசாலை ஆகும்.

இவ்வித்தியாலயத்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் ஆறுமுக நாவலர் அவர்களின் மனதில் வேரூன்றக் காரணமான சம்பவமாக அக் காலத்தில் வெஸ்லியன் கல்லூரியில் கல்வி பயின்ற சைவ மாணாக்கர்கள் விபூதி தரித்துச் சென்றமை குற்றமாகக் கருதப்பட்டுத் தண்டனை வழங் கப்பட்ட செய்கையே. நாவலர் பெருமானால், சைவ மாணவர்களுக்கென இச்சைவவித்தியாலயத்தை நிறுவுவதற்கும் இதுவே காரணமாக அமைந் திருந்தது. "வேட்டைக்காரன் வளவு" எனப் பெயர் உடைய நிலத்தில் அமைந்த சைவப்பிரகாச வித்தியாசாலை1864 ஆம் ஆண்டில் உதவி




நன்கொடை பெறும் பாடசாலையாகப் பதிவு செய்யப்படும்வரை நாவலர் பெருமான் இப்பாடசாலையைப் "பிடியரிசி" தண்டியே பரிபாலித்து வந்துள்ளார்.

"கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே' என்ற கூற்றிற்கும் மேலாக மற்றவர்க ளுக் குக் கல்வி அறிவை ஊட்ட வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக உழைத்தவர் அப்பெருமகன்.

இப்படியாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை 1961 ஆம் ஆண்டளவில் கல்வி அதிபதியின் பரி பாலனத்துக்குட்பட்டது. பின்னர் இந்த ஆண்டின் பிற்பகுதியில் இப்பாடசாலையை அரசாங்கம் கையேற்றது.




பின்னர் 1966 ஆம் ஆண்டளவில் இப்பாட சாலை மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட் டது. இவ்வாறு தரமுயர்த்தப்பட்டு யாழ். வண் நாவலர் மகாவித்தியாலயமாகப் பெயர் சூட்டப்பட்டது. இக்காலப் பகுதியில் 16 ஆசிரியர்களின் சேவையின் கீழ் 425 மாணவர்கள் கல்விபயின்றனர்.

பின்னர் 1990 ஆம் ஆண்டளவில் 20 ஆசிரியர்களுடன் 600 மாணவர்கள் கல்வி கற்றனர். இவ்வாறாக மிக நிறைவுடன் தனது பணியை ஆற்றி வந்த பாடசாலைக்கு 1995 ஆம் ஆண்டளவில் பாரிய பின்ன டைவை நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் ஏற்படுத்தியது. இந்த யுத்த சூழ்நிலையால் பாடசாலையின் பிரதான மண்டபமும் நாவலர் கோயிலும் சேதமடைந்து புனருத்தாரணம் செய்ய வேண் டிய நிலையில் காணப்பட்டன.

1996 ஆம் ஆண்டில் மக்கள் மீளக்குடியமர்ந்தபோது பாடசாலை வளங்கள் சூறையாடப்பட்ட நிலையிலும் முக்கிய ஆவணங்கள் பயன்பாட்டுக்கு உதவாத நிலையிலுமே மிஞ்சின. அத்துடன் ஆளணி வளமும் புலம் பெயர்ந்த நிலையில் இப்பாடசாலையை மீளக்கட்டியெழுப்பும் மிகப் பெரிய பொறுப்பு அப்போது அதிபராகப் பொறுப்பேற்ற ஐயாத்துரை துரைராஜாவைச் சார்ந்தது.

அப்பொறுப்பைத் தன் கடமையென ஏற்று பாடசாலையைப் புனரமைக்கும் பணியை ஆரம்பித்தார் அதிபர் துரைராஜா.

அந்த வரிசையில் பிரதான மண்டபம், நால்வர் கோயில் என்பன மீளப்புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவு பெற்றது. பின்னர் பாடசாலையின் முகப்புத் தோற்றம் மாற்றி அமைக்கப்பட்டுப் பின்னர் 1998.04.03 அன்று நால்வர் கோயில் கும்பாபிஷேகமும் நடத்தப்பட்டது.

இப்படியாக இப்பாடசாலை மிகச் செவ்வனாகத் தனது கல்விப் பணியையும், சமயப் பணியையும் ஆற்றிவருகின்றது என்றால் மிகையாகாது. இப்பாடசாலையின் அதிபர் பொறுப்பை ஏற்று வழி நடத்திவந்த அதிபர்களை இனிப் பார்ப்போமானால் 1848 ஆண்டிலிருந்து வித்தியாலய ஸ்தாபகரான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரும் பின்னர் 1858 ஆம் ஆண்டிலிருந்து மு.தில்லைநாத பிள்ளையும், 1864 இலிருந்து வித்வசிரோன்மணி பொன்னம்பலம் பிள்ளையும், 1866 ஆம் ஆண்டிலிருந்து மா.வைத்திலிங்கபிள்ளையும், 1917 ஆம் ஆண்டிலிருந்து அ.குமாரசுவாமிப்புலவரும், 1925 இற்கு முன்னர் கா.இளையதம்பியும், 1925 இற்குப்பின்னர் மா.வைத்திலிங்கமும், 1928 ஆம் ஆண்டிலிருந்து ந.சுப்பையாபிள்ளையும், 1960 ஆம் ஆண்டிலிருந்து இ.திருநாவுக்கரசுவும், 1966 இலிருந்து பண்டிதர் க.இராசையாவும், 1968 ஆம் ஆண்டிலிருந்து த.வேலுப்பிள்ளையும், 1972 ஆம் ஆண்டிலிருந்து க.இரத்தினவேலும், 1973 ஆம் ஆண்டிலிருந்து சி.வைத்திலிங்கமும், 1981 ஆம் ஆண்டிலிருந்து . கு.உதயகுமாரும், 1983 ஆம் ஆண்டிலிருந்து ப.சிவஞானசுப்பிரமணியமும், 1991 ஆம் ஆண்டிலிருந்து ஐ.துரைராஜாவும், 2001 ஆம் ஆண்டிலிருந்து ந.சிவராஜாவும் பின்னர் தற்போது சு.சிவபாதசுந்தரமும் தமது பணியைச் செவ்வனே ஆற்றியுள்ளனர்.

தற்போது இப்பாடசாலையில் 21 ஆசிரியர்களும், 329 மாணவர்களும் உள்ளனர். இப்பாடசாலையிலேயே இந்து மாமன்றம், தமிழ் மன்றம், விஞ்ஞமன்றம்,கணிதமன்றம் ,சமூக விஞ்ஞானமன்றம், தொழில் நுட்ப மன்றம், கவின் கலை மன்றம், ஆங்கில மன்றம் என்பன மிகச் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றன. இப்பாடசாலைக்குத் தனியான விளையாட்டு மைதானம் இல்லாதது பெரும் குறையாகவே விளங்குகின்றது. பல புகழ்பூத்த சைவப்பெரியார்களையும் அறிஞர்களையும் மாணவர்களாகக் கொண்ட இப்பாடசாலை வருங்காலத்திலும் தனது பணியைச் செவ்வனே மேற்கொள்ளும் என்பதில் ஐயம் இல்லை.

(தொகுப்பு: சுகந்தன்)

# சாதாரணப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று யாழ்.மாவட்டக் கல்வித்துறையில் புகழ்சேர்த்த மாணவர்கள்

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண் மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனைபுரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களின் கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## ரூத் ஸ்ரெபாணி அன்ரன் தவராஜா
## சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

"உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து அவர் மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்-[சங்:37:5]

எனது பெயர் ரூத் ஸ்ரெபாணி அன்ரன் தவராஜா. நான் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் தரம் ஐந்து முதல் இன்றுவரை கல்வி கற்று வருகிறேன். நான் ஜீ.சி.ஈ சாதாரண தரப் பரீட்சையில் 8ஏ,பி யைப் பெறுபேறாகப்பெற்றுக் கொண் டேன். நான் ஊக்கமாகக் கல்வி கற்றதன் பயனாக இப்பெறுபேற்றைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. பரீட்சைக்கு முன்னர் மாதிரி வினாத்தாள்களையும், கடந்தகால வினாத்தாள்களையும் செய்து பார்த்து பரீட்சைக்குத் தயாராகினேன். அவற்றில் ஏற்படும் சந்தேகங்களை ஆசிரியர்களிடமும் எனது நண்பிகளிடமும் கேட்டு விளங்கிக்கொண்டேன். பரீட்சை எழுதும் போது சற்றுப் பதற்றமாக இருந்தாலும் அதைத் திருப்தியாக எழுதி முடித்தேன். பரீட்சை எழுதிய பின்பு நான் பரீட்சையில் சித்தியடைவேன் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது.

இப்பெறுபேற்றை நான் பெறுவதற்குதவிய என்னுடைய தேவனாகிய கர்த்தருக்கு முதலில் நன்றியைத் தெரிவித்து மேலும் என்னை ஊக்குவித்த எனது பாடசாலை அதிபர், வகுப்பாசிரியர், பாட ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரி வித்துக் கொள்கிறேன். இப்பெறுபேறானது எனது பாடசாலைக்கு பெருமையைத் தேடித் தருவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எனது பெறுபேறானது எனது தாயாருக்கும் எனது உறவி னர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. க.பொ.த உயர்தரத்திற்கு வர்த்தகத்துறையைத் தெரிவு செய்துள்ளேன். எதிர்காலத்தில் மக்களுக்குச் சேவை செய்யக்கூடிய ஒரு தொழிலில் பணி புரிய வேண்டும் என்பதே எனது இலட்சியமாகும். எல்லாவற்றிற்கும் மேலாக என் தேவன் என்னோடு கூட இருந்து ஞானத்தைத் தந்து இப்பெறுபேற்றைப்பெற கிருபையளித்தார்.



## பரஞ்சோதி நளாயினி
## புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்

எனது பெயர் பரஞ்சோதி நளாயினி . நான் புனித சாள்ஸ் மகா வித்தியால யத்தில் கல்வி கற்று வருகின்றேன். சாதாரண தரத்தில் பெறுபேறுகளாக 3ஏ,2பி,2சி,எஸ். எதிர்பார்த்த பெறுபேறுகள் கிடைக்கவில்லை. பரீட்சை எழுதுமுன்னர் என்னுடைய மனநிலை பரீட்சை வினாத்தாள்களில் வினாக்கள் எவ்வாறு வருமென்று மிகவும் குழப்பமாக இருந்தது. பரீட்சை மண்டபத்தில் எனது மனநிலை நன்றாக வினாத்தாள்களை எதிர் கொள்ளவேண்டும். நல்லபெறுபேறுகளைப் பெறவேண்டும் என்ற எண்ணம் இருந்தது. பரீட்சையை எழுதி முடித்த பின்னர் என்னுடைய மனநிலை வினாத்தாள்களை நன்றாக எழுதி விட்டேன் என்ற திருப்தி உண்டானது. பெறுபேறுகிடைக்கக் காரணமாக இருந்தவர்கள் மதிப்பிற்குரிய அதிபர், ஆசிரியர்களும் உறவினர்களும் என்னைச் சார்ந்தவர்களுடைய மனநிலையும் ,எனது மனநிலையும் கவலையாகக் காணப்பட்டது. உயர்தரத்தில் கணிதத் துறையில் கல்விகற்க உத்தேசித்துள்ளேன். எனது எதிர்கால இலட்சியம் ஆசிரியராக வருவது ஆகும்.



## மகேந்திரன் சியாம்
## புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்

மகேந்திரன் சியாமாகிய நான் புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் ஏ,பி,3சி,4எஸ் ஆகிய அனைத்துப் பாடத்திலும் இப்பெறுபேறைப் பெற்றுள்ளேன்.

நான் விரும்பி எழுதிய பாடங்களில் எதிர்பார்த்த பெறுபேறு எனக்குக் கிடைக்கவில்லை. எனினும் சித்தியடைந்ததை எண்ணி எனக்கு மகிழ்ச்சி. இதற்காக முதற்கண் இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

இப்பெறுபேறுகள் அனைத்தையும் பெறுவதற்காக எனது அதிபர், ஆசிரியர்கள், பெற் றோர்கள், என் சக நண்பர்கள் கூறிய ஆலோசனைகளின்படி கல்வி பயின்றேன். இதற்காக R.J.I தனி யார் நிறுவனத்திலும் கல்வி பயின்றேன். இச்சித்தியைப் பெறுவதற்காக எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் அனைவரும் என்றும் துணையாக நின்றனர். அவர்களுக்கு எனது வார்த்தை களால் நன்றி சொல்ல முடியாது. எனினும் எனக்கு பரீட்சைக்குப் போவதற்கு முன் ஒரு விதமான மனப் பயம் இருந்து கொண்டே இருந்தது. எனினும் எனது பெற்றோர்கள் காட்டிய அன்பினாலும் ஊக் கத்தினாலும் என்னால் பயமின்றி பரீட்சை எழுத முடிந்தது.

அனைத்துப் பாடத்திலும் சித்தியடைந்ததை எண்ணி நான் மகிழ்ந்ததைவிட என் உயிரிலும் மேலான எனது பெற்றோர் மகிழ்ச்சியடைந்ததைப் பார்த்து நானும் மகிழ்ச்சியில் பூரிப்படைந்தேன். மேலும் எனது ஆசிரியர்கள்,எனது நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் என்னைவிட ஆனந் தத்தில் மூழ்கினர்.எனது வெற்றிக்கு காரணமாக இருந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி யைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயர்தரத்தைப் பொறுத்தவரையில் கலைப்பிரிவு பாடத்தைத் தெரிவு செய்துள்ளேன். எனது குறிக்கோளாக உயர்தர வகுப்பில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்று பல்கலைக்கழகத்திற்குள் நுழைவதே எனது விருப்பம். என்றாலும் எனது பெற்றோரை கண்கலங்காமல் வைத்திருப்பதே எனது ஆசையாகும். இதற்குப் பக்கபலமாகவும், உறுதுணையாகவும் இருக்கும் எனது பாடசா லைக்கு எனது அன்பு கலந்த நன்றியை பணிவாகத் தெரிவிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடலுக்குள் மூழ்கும் விமான நிலையத்தை மேலே தூக்கி நிறுத்தும் ஜப்பானியர்கள்!

**இலங்கை மற்றும் ஜப்பான் அரசுகளின் ஏற்பாட்டில் 'சமாதான முன்னெடுப்பு பயணம்' என்ற திட்டத்தின் கீழ் இலங்கையிலிருந்து ஐவர் சமீபத்தில் ஜப்பானுக்கு ஒருவார சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவரான 'உதயனின்' சகோதரப்பத்திரிகையான 'சுடர்ஒளி' யின் உதவி ஆசிரியர் செ.அற்புதன் தமது அனுபவத்தை இங்கு தொடராகப் பகிர்ந்து கொள்கிறார்.**

நாடகத்திலும் அப்படியொரு நவீனத்துவத்தைப் புகுத்தியிருக்கிறார்கள். ஜப்பானிய மொழி புரியாதவர்களுக்கு மொழிபெயர்ப்பு சாதனம் வழங்கப்படுகிறது. அதனைக் காதிலே பொருத்தியிருந்தால் நாடக வசனங்களை ஆங்கிலத்திலே நாங்கள் கேட்கமுடியும்.

**மிதக்கும் விமான நிலையம்**

கடலுக்கு நடுவே மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு செயற்கைத் தீவில் அமைந்திருக்கிறது கன்சாய்(Kansai) விமான நிலையம். இதனை 'மிதக்கும் விமான நிலையம்' என்றும் அழைக்கிறார்கள். நடுக்கடலில் ஒரு சர்வதேச விமான நிலையத்தை அமைக்கக்கூடியளவுக்கு ஒரு தீவை செயற்கையாக உருவாக்குவதென்றால் சும்மாவா....! ஆனால் ஜப்பானியர்கள் அதைச் செய்து முடித்திருக்கிறார்கள். நகரங்களுக்கு மத்தியில் விமான நிலையத்தை அமைக்கும்போது விமானங்களின் இரைச்சலினால் சூழல் மாசுபடுவத்கான சாத்தியம் உண்டு. அதனைத் தவிர்ப்பதற்காகத்தான் ஆள் நடமாட்டமே இல்லாத கடலுக்கு

ஜப்பானிலுள்ள இலங்கைத் தூதர் மற்றும் தூதரக அதிகாரிகளுடன் இலங்கைக் குழுவினர்.



நடுவே இதனை அமைத்திருக்கிறார்கள். சுமார் 5 கிலோமீற்றர் தூரத்துக்கு கடலுக்கு மேலாகப் போடப்பட்டிருக்கும் பாலத்தில் பயணித்து கன்சாய் விமான நிலையத்தை அடைய வேண்டும். மிகவும் பிரமாண்டமான பரந்த பிரதேசத்தில் அமைந்திருக்கும் இந்த விமான நிலையத்தில் ஒன்றன்பின் ஒன்றாக விமானங்கள் வந்து இறங்குவதும் எழும்புவதுமாக இருக்கின்றன.

இந்த விடயத்தில் குறிப்பிடக்கூடிய இன்னொரு விடயம் என்னவென்றால், 1996 ஆம் ஆண்டு இந்த விமான நிலையத்தை ஆரம்பிக்கும்போது, அது ஒரு வருடத்துக்கு ஒரு அங்குலம் கடலில் மூழ்கும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஆனால், துரதிஷ்டவசமாக கடந்த 14 வருடங்களில் 12 மீற்றர் தூரம் இந்த விமான நிலையம் கடலில் மூழ்கிவிட்டது. இப்படியே போனால், இன்னும் சில வருடங்களில் ஓடுபாதைக்குள் கடல்நீர் புகுந்துவிடும். அதனால் கடலில் மூழ்கிய விமான நிலையத்தை மேலே தூக்கி நிறுத்துவதற்கான வேலைத்திட்டம் இப்போது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அட....., கடலுக்குள் மூழ்கிய கப்பலை மேலே தூக்குவதுபோல விமான நிலையத்தை, ஓடுபாதையோடு சேர்த்து மேலே தூக்குகிறார்கள். கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள்.....! இதிலே இன்னொரு விஷயம் என்ன தெரியுமா? மூழ்கிய விமான நிலையத்தை மேலே தூக்கி நிறுத்தும் நடவடிக்கையின்போது ஒருநாள் கூட விமானநிலையத்தின் அன்றாடப் பணிகளில் எந்தத் தடங்கலும் ஏற்படாது என்றும் உறுதியளித்திருக்கிறார்களாம்....!

**ஹிரோஷிமா!**

உள்ளூர் விமானம் ஒன்றில் டோக்கியோவிலிருந்து ஹிரோஷிமாவுக்குச் சென்றோம். இரண்டாம் உலகப் போரில் அமெரிக்காவால் அணுகுண்டு வீசி அழிக்கப்பட்ட நகரங்களில் ஒன்று ஹிரோஷிமா. ஆனால் இப்போது ஹிரோஷிமாவைப் பார்த்தபோது அதுவும் ஒரு டோக்கியோ போலத்தான் காட்சியளித்தது. அடுக்கு மாடிக் கட்டடங்கள், ஆரடம்பர ஹோட்டல்கள், பளிங்கு போன்ற பெருந்தெருக்கள் என்று அழகாக இருக்கிறது ஹிரோஷிமா. அணுகுண்டு வீசப்பட்ட இடம் என்பதால் அது அப்படியிருக்குமோ, இப்படியிருக்குமோ என்று எங்களுக்குள் இருந்த கற்பனைகளுக்கு எதிர்மாறாக இருந்தது அந்த நகரம். எங்களது ஹிரோஷிமா விஜயத்தின் பிரதான நோக்கம் அணுகுண்டு வீசப்பட்ட இடத்தையும், அங்குள்ள நூதனசாலையையும் பார்ப்பதும், அணுகுண்டுவீச்சில் நேரடியாகப் பாதிக்கப்பட்டு இன்றும் உயிரோடிருக்கும் சிலருடன் உரையாடுவதும்தான். (அதைப்பற்றி நாளை விரிவாக எழுதுகிறேன்) அதற்கு முன்னர், ஹிரோஷி மாவில் ஒருநாள் நாங்கள் ஒவ்வொரு வரும் தனித்தனியாக ஒவ்வொரு ஜப்பானியக் குடும்பங்க ளுடன் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எங்களைப் பற்றிய விவரங்கள் ஏற்கனவே அந்தந்தக் குடும்பங்களிடம் கொடுக்கப்பட்டிருந்தன. ஹிரோஷிமாவில் நாங்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்கு வந்து அவர்கள் தங்களது வாகனங்களில் எங்களை ஏற்றிக்கொண்டு சென்றனர்.

திருமதி கியோகிடோ(Kiyokito) என்ற பெண் காரில் வந்து என்னைத் தமது வீட்டுக்கு அழைத்துப் போனார். அவருக்கு வயது - 72. வயதை வைத்துக்கொண்டு தோற்றத்தைக் கற்பனை செய்துவிடாதீர்கள். ஏனென்றால், பார்ப்பதற்கு அவர் ஒரு நடுத்தர வயது 'அன்ரி' ரகம்! காரை அவரே செலுத்தினார். அதுவும் மணிக்கு 120 கிலோமீற்றர் வேகத்தில் பறந்தது கார். ஒரு மணித்தியாலப் பயணத்திற்குப் பிறகு அவர்களது வீட்டை அடைந்தோம். அங்கு 'அங்கிள்'(அவருக்கு வயது - 78) எங்களை வரவேற்கக் காத்திருந்தார். தங்கள் ஊரில் பிரபலமான இடங்களுக்கு என்னை அழைத்துப் போனார்கள். எங்களோடு உரையாடுவதிலும் எங்களை உபசரிப்பதிலும் அவர்கள் அலாதிப் பிரியம் காட்டுவதைப் பார்க்க வியப்பாக இருந்தது.

**மியாஜிமா தீவு!**

ஹிரோஷிமாவில் பிரபலமான சிறிய தீவு ஒன்றுக்கு என்னை அழைத்துப் போனார் அந்த 'அன்ரி'. அந்தத் தீவின் பெயர் மியாஜிமா(Miyajima). 45 நிமிடங்கள் கார்ப் பயணம். பிறகு 10நிமிடங்கள் கடல் கடந்து படகில் சென்றோம். படகு என்றால் சும்மா இல்லை...! அதுகூட ஓர் ஆடம்பர ஹோட்டல் போலத்தான் இருந்தது. எங்கள் அணியைச் சேர்ந்த நண்பர்களான குரூஸ், சிவகுமார் போன்றவர்களையும் அவர்களது வீட்டார் மியாசிமாவுக்கு அழைத்து வந்திருந்தார்கள். எனவே எல்லோரும் சேர்ந்து அந்தத் தீவைச் சுற்றிப் பார்த்தோம்.



கன்சாய் விமான நிலையம்

ஜப்பானியர்களில் பெரும்பாலானவர்கள் பௌத்த மதத்தைச் சார்ந்தவர்கள். ஆனால் ஜப்பானின் ஆதிகால மதமாகக் கருதப்படுவது 'ஷிந்தோ' என்ற மதம். அதற்குப் பிறகு பௌத்தம் அங்கு ஊடுருவியதால் 'ஷிந்தோ' செல்வாக்கு இழந்துவிட்டது. இருந்தாலும் ஜப்பானில் சில இடங்களில் பிரசித்தி பெற்ற 'ஷிந்தோ' கோயில்கள் இப்போதும் இருக்கின்றன. மியாசிமா தீவிலும் அப்படியான ஷிந்தோ ஆலயங்கள் இருக்கின்றன. மரங்களிலும், கருங்கற்களிலும் செதுக்கப்பட்ட ஏராளமான சிற்பங்களை உள்ளடக்கி அமைக்கப்பட்டிருக்கின்றன அந்தக் கோயில்கள்.

**சொல்வதைக் கேளுங்கள்!**

எங்களூர் இந்துக் கோயில்களின் பிரதான வாசலிலும் மூலஸ்தான தெய்வத்தின் இருபுறங்களிலும் பரிவார மூர்த்திகள் இருக்கின்றன அல்லவா? அதுபோல ஷிந்தோ கோயில்களின் வாசல்களிலும் கோயிலுக்குச் செல்லும் வீதிகளின் இருபுறங்களிலும் இப்படியான உருவங்கள் காணப்படுகின்றன. சிங்கம், புலி போன்ற மிருகங்களும், பயங்கரத் தோற்றம் உடைய வேறு உருவங்களும் இவ்வாறு இருபுறமும் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன.

எங்கள் நாட்டில் உள்ள அத்தகைய உருவங்களில் ஒன்றுக்கொன்று எந்த வித்தியாசமும் இல்லாமல் இரண்டும் ஒரேமாதிரியாக இருக்கும்.

ஆனால் அங்கு அப்படியல்ல. இருபுறமும் சிங்கங்கள் இருந்தால், ஒரு சிங்கம் வாயைத் திறந்த நிலையில் 'ஆ'என்று இருக்கும். மறுபுறத்தில் உள்ள சிங்கம் வாயை மூடி 'ம்' என்று இருக்கும். எல்லா உருவங்களுமே இப்படித்தான். ஒன்று வாயைத் திறந்தும் மற்றையது வாயை மூடியும் இருக்கும். அதைப்பற்றி திருமதி கியோகிடோவிடம் கேட்டேன்.

"ஒருசிங்கம் வாயைத் திறந்து ஏதோ சொல்கிறது. மற்றையது வாயை மூடிப் பொறுமையாக அதை செவிமடுக்கிறது. இரண்டும் ஒரே நேரத்தில் கதைத்தால் எதுவுமே புரியாதல்லவா...! இதுபோலத்தான் மனிதர்களும் ஒருவர் கதைக்கும்போது மற்றவர் பொறுமையாகக் கேட்கவேண்டும்.ஒரே நேரத்தில் இருவரும் கதைப்பதால் எதுவுமே புரியாது; எந்தப் பிரயோசனமும் இருக்காது. இந்த அர்த்தத்தில்தான் இந்த உருவங்கள் வெவ்வேறு முகபாவத்துடன் அமைக்கப் பட்டுள்ளன'' என்கிறார் அவர்.

அட....எப்படி யெல்லாம் வித்தியாசமா சிந்திக்கிறாங்கப்பா..!

ஓரிடத்தில் கருங்கல்லினால் செதுக்கப்பட்ட 500 உருவங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றும் சுமாராக ஒன்றரை அடி உயரம் இருக்கும். அந்த உருவங்களின் முக அமைப்பு நமது 'குபேரன்'சிலையை நினைவுபடுத்துகிறது. ''இந்த 500 உருவங்க ளினதும் முகபாவங்களை நன்றாகப் பாருங்கள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக இருக்கும். ஒன்றைப்போல இன்னொன்று இருக்கவே இருக்காது'' என்றார் சிவகுமாரை அழைத்துவந்த 'அக்கா'.(அவருக்கு வயது - 49) ஆச்சரியத்துடன் ஒவ்வொரு சிலைகளையும் உற்றுப் பார்த்தோம். அது உண்மைதானப்பா....! 500 சிலைகளும் 500 வகையான முகபாவங்களுடன் இருக்கின்றன.

**பகுதி 7**

அன்றிரவு கியோகிடோ தம்பதியினர் என்னிடம் இலங்கைப் புதினங்களை ஆவலுடன் கேட்டறிந்தனர். இருவரும் ஓரளவு ஆங்கிலம் பேசினார்கள். தங்களின் இரு மகன்களும் திருமணமாகி டோக்கியோவில் செற்றிலாகி விட்டனராம். சிறிய, ஆனால் மிகவும் அழகான வீட்டில் இருவரும் தனியாகவே வசிக்கிறார்கள். இரவு 'சக்கே'அருந்தினார்கள். என்னையும் கொஞ்சம் 'ரெஸ்ற்'பண்ணிப் பார்க்கச் சொன்னார்கள். வேண்டாம் என்று சொல்ல மனம் வரவில்லை. 'லைற்றாக' எடுத்துப்பார்த்தேன். நன்றாகத்தான் இருந்தது.

மறுநாள் காலையில் ஒரு குறிப்புப் புத்தகத்தை என்னிடம் தந்து ஞாபகத்திற்காக ஏதாவது எழுதச் சொன்னார்கள். எழுதிக் கொடுத்தேன்(தமிழிலும்).

ஒருநாள் ஜப்பானியக் குடும்பத்துடன் வாழ்ந்த அனுபவத்துடன் மீண்டும் எல்லோரும் ஒரு முக்கியமான இடத்தில் ஒன்றுசேர்ந்தோம். அதுதான் ஒரு லட்சத்து 50ஆயிரம் உயிர்களைப் பலிகொண்ட அணுகுண்டு வீழ்ந்த இடம். அங்கு நாங்கள் பார்த்த காட்சிகளும் கேட்ட வார்த்தைகளும் நெஞ்சை உருக்கின. அந்தப் பயங்கரங்களைப் பார்த்தபோது எதுவுமே பேச முடியவில்லை.....

(பயணம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஒகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# கணக்கீடு - 01 | பகுதி - I

* இல. 1-20 வரையான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமானதெனக் கருதும் விடையை சரி என தெரிவு செய்க.

01. வரையறுத்த பொதுக்கம்பனி ஒன்றின் பங்கு மீதான பகிர்ந்தளித்தல் எனக் கூறக்கூடியவை.
A: பங்கு வழங்குதல், B: கம்பனியின் பங்குகளை கம்பனியினாலேயே வாங்குதல் C: இலாபம் வழங்குதல், D : முன்னுரிமைப் பங்குகளை மீட்டல்.
1) A, B, C, D 2) A, B, C 3) A, C 4) A, C, D 5) A, B, D

02. வரையறுத்த பொதுக்கம்பனி ஒன்றில் பங்குகளை வைத்திருப்பவர் கொண்டிருக்ககூடிய உரிமைகள் A வாக்களிக்கும் உரிமை B நிர்வாகத்தில் பங்குபற்றல் C பங்குலாபம் பெறல் D கலைத்தலின் போது மிகைச் சொத்துக்களை பெறுதல்,
1) A, C 2) A, B, C 3) A, C, D 4) A, B, C, D 5) A, D

03. இலங்கை கணக்கீட்டு நியம்ம 3இற்கு அமைய நிதி அறிக்கைகளை முன்னிலைப்படுத்தலில் கவனத்தில் கொள்ளப்படும் அடிப்படை எண்ணக்கரு தொகுதியாக அமைவது,
1) அட்டுறு எண்ணக்கரு, தொடர்ந்து செல்லல், இணைதல் எண்ணக்கரு, எதிரீடு செய்தல்.
2) தொடர்ந்தியங்குதல், அட்டுறு, கொள்கை மாறாத்தன்மை எண்ணக்கரு.
3) தொடர்ந்து செல்லல், அட்டுறு அடிப்படை, கைக்கிட்டிய எண்ணக்கரு.
4) காசு அடிப்படை, அட்டுறு அடிப்படை, கொள்கை மாறாமை எண்ணக்கரு.
5) பொருண்மை, நிதி அடிப்படை, அட்டுறு அடிப்படை, ஒப்பீடு செய்தல் எண்ணக்கரு.

04. கம்பனி ஒன்றின் முதலீட்டாளர் அக்கறை கொள்ளக்கூடிய கணக்கீட்டு விகிதங்கள்,
1) இணைப்பு விகிதம், மொத்த இலாபம் வீதம்.
2) சரக்கிருப்பு புரள்வு விகிதம், கடன்பட்டோர் புரள்வு விகிதம்.
3) பங்கொன்றுக்கான உழைப்பு, நடப்பு விகிதம்.
4) நடப்பு விகிதம், விரைவு விகிதம்
5) உரிமை மூலதனத்தின் மீதான வருவாய், பங்குலாபம் செலுத்தும் விகிதம்.

05. பணக்கொடுப்பனவு பகுதி கொள்வனவிற்கான பணக்கொடுப்பனவுக்கான பட்டியலுடன் ஒப்பிடவேண்டிய பத்திரங்கள்,
1) கொள்வனவு வேண்டுதல் பத்திரம், கொள்வனவு கட்டளை, ஒப்படைக்குறிப்பு.
2) கொள்வனவு கட்டளை, பொருள் வழங்கும் பத்திரம், பொருட் கோரிக்கை பத்திரம்.
3) பொருள் பெறுகை பத்திரம், கொள்வனவு கட்டளை, களஞ்சிய வேண்டுதல் பத்திரம்.
4) பொருள் பெறுகை குறிப்பு, கொள்வனவு கட்டளை பொருள் வழங்கும் பத்திரம்.
5) கொள்வனவு வேண்டுதல் பத்திரம், பொருள் பெறுகை குறிப்பு, பொருள் வழங்கும் பத்திரம்.

06. பின்வருவனவற்றுள் ஊழியரின் சேவைக்கால அறிக்கைகளில் ஒன்றாக அமைவது,
1) வேலை அனுமதிப்பத்திரம். 2) வரவு இடாப்பு. 3) வேலைக்கிரய அட்டை.
4) நேர அட்டை. 5) துண்டு வேலை அட்டை.

07. நிறுவனமொன்றின் சம்பளப் பட்டியலிருந்து பெறப்பட்ட விவரங்கள்
மொத்தச்சம்பளம் 140,000 ரூபா தேறிய சம்பளம் 85,000 ரூபா
E.P.F ஊழியரிடம் கழிப்பனவு 5,000 ரூபா
E.P.F நிறுவன பங்களிப்பு 7,500 ரூபா
இலாபநட்ட கணக்கில் தாக்கல் செய்ய வேண்டிய தொகைகள்
1) சம்பளம் கூலி 85,000 ரூபா E.P.F செலவு 5,000 ரூபா
2) சம்பளக்கூலி 140,000 ரூபா E.P.F செலவு 5,000 ரூபா
3) சம்பளம் கூலி 140,000 ரூபா E.P.F செலவு 7,500 ரூபா
4) சம்பளம் கூலி 140,000 ரூபா E.P.F கணக்கு 5,000 ரூபா
5) சம்பளம் கூலி 140,000 ரூபா E.P.F கணக்கு 12,500 ரூபா

08. மேந்தலையின் இரண்டாம் கட்டப்பகிர்வு என்பது,
1) சேவை நிலையங்களுக்கு பகிரப்பட்ட மேந்தலை உற்பத்தி நிலையங்களுக்கு மறு பங்கீடு செய்தல்.
2) மேந்தலைக் கிரயங்களை உற்பத்தி நிலையங்களுக்கு பகிர்தல்.
3) மேந்தலைகளை சேவை நிலையங்களுக்கு பகிர்தல்.
4) மேந்தலைக் கிரயங்களை உற்பத்தி நிலையங்களுக்கும் சேவை நிலையங்களுக்கும் பகிர்தல்.
5) மேந்தலைக் கிரயத்தினை உற்பத்தி செய்த அலகுகளுக்கிடையில் பகிர்தல்.

09. கணக்கீட்டு நியமம் 5இன்படி சரக்கிருப்பு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய விடயங்களாவன:
A. சரக்கிருப்பு தொடர்பான மதிப்பிடப் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கை.
B. மதிப்பீட்டுக்காக பயன்படுத்திய கிரயச் சூத்திரம்.
C. பொறுப்பு தொடர்பான பிணை காட்டப்பட்ட சரக்கிருப்பின் பெறுமதி.
D. சாதாரண விற்பனை செயற்பாட்டில் மதிப்பிடப்பட்ட விற்பனை விலை.
1) ABCD 2) ACD 3) ABC 4) ABD 5) AB

10. கணக்கீட்டு நியமம் 12இன்படி ஐந்தொகை திகதியில் இருந்த நிலைமைக்கு சாட்சி வழங்கும் நிகழ்வுக்கு உதாரணமாக கூறக்கூடியது.
1) ஐந்தொகை திகதிக்கு பின் சொத்துக்களை பெருமளவாக கொள்வனவு செய்தல்.
2) ஐந்தொகை திகதிக்கு பின் உற்பத்தி தொழிற்சாலை தீயினால் அழிவடைதல்.
3) ஐந்தொகைத் திகதியில் இருந்த இருப்பு காலங்கடந்ததினால் ஏற்பட்ட நட்டம்.
4) உரிமைப்பங்குகளுக்கு ஐந்தொகை திகதியின் பின்னர் செய்ய தீர்மானித்த பங்குலாபம்.
5) ஐந்தொகைத் திகதிக்கு பின்னர் ஏற்படும் ஊழியர் வேலை நிறுத்தம், தொழிலாளர் பிணக்கு காரணமான நிச்சயமற்ற நிலைமை.

* **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 11, 12 வினாக்களுக்கு விடையளிக்குக. உச்ச இருப்பு மட்டம் 6,000 அலகுகள் இழிவு பொருள் பயன்பாடு 300 அலகுகள் சராசரி பொருள் பயன்பாடு 400 அலகுகள் இழிவு கட்டளைக்காலம் 2 மாதம் மறுகட்டளை மட்டம் = 2,000 அலகுகள்.**

11. மறுகட்டளைத் தொகை யாது?
1) 4,600 2) 4,400 3) 7,400 4) 4,000 5) 4,200

12. பொருள் கொள்வனவுக்கு கட்டளை அனுப்பப்பட்டு பொருள் வந்து சேர ஆகக்கூடுதலாக எடுக்கும் காலம் யாது?
1) 4 மாதம். 2) 5 மாதம். 3) 3 மாதம். 4) 2 மாதம். 5) 6 மாதம்.

13. வரையறுத்த அல்லி கம்பனி 30 ரூபா விலையில் 100,000 சாதாரண பங்குகளை பின்வருமாறு பணம் பெறுவதென்ற அடிப்படையில் வழங்கியது. விண்ணப்பம் 18 ரூபா அழைப்பு 12 ரூபா 5,000 பங்கை எடுத்த ஒருவர் அழைப்பு பணம் செலுத்தவில்லையாயின் கம்பனியின் கூறப்பட்ட மூலதனம் எவ்வளவு?
1) 2940,000 2) 3000,000 3) 1800,000 4) 1200,000 5) 1500,000

14. வரையறுத்த கம்பனி ஒன்றின் நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்பு செலவொன்றாக இனம் காணப்படாத வேளை குறிப்பாக மாத்திரம் காட்டப்பட முடியும். அவ்வாறு குறிப்பாக வெளிப்படுத்துவதற்கு தேவையற்ற ஒரு தகவல்,
1) நிகழத்தக்க பொறுப்பின் தன்மை தொடர்பான மதிப்பீடு.
2) அதன் நிதி விளைவு (தாக்கம்) தொடர்பான மதிப்பீடு.
3) ஏதாயினும் மீளப்பெறும் திறன் தொடர்பான விவரம்.
4) கால அளவு தொடர்பான உள்ள நிச்சயமற்ற தன்மை.
5) பயன்படுத்தப்படாது மீளப் பதிவழிக்கப்பட்ட அளவு.

15. நிறுவனம் ஒன்று சிக்கனக் கட்டளைத் தொகையில் பொருட்களை வாங்குமாயின் ஏற்படக் கூடிய விளைவு,
1) மொத்தச்செலவு அதிகரிக்கும்.
2) இருப்பு வைத்தல் கிரயத்தை விட கட்டளைச்செலவு அதிகமாக இருக்கும்.
3) இருப்பு வைத்தல் கிரயத்தை விட கட்டளைச் கிரயம் குறைவாக இருக்கும்.
4) மொத்தச்செலவு இழிவுபடுத்தப்படும்.
5) இருப்பு வைத்திருக்கும் கிரயம் ஏற்படாது.

## SPECIAL GUIDE FOR 2010 A/L COMMERCE STUDENTS

16. ஆடை உற்பத்தி நிறுவனமொன்றின் உற்பத்தி மேந்தலை, உற்பத்தியல்லா மேந்தலைக்கு உதாரணமாக கூறக்கூடியவை,
1) துணிக்கான கிரயம், தைப்பதற்கான நூல்.
2) தைப்பதற்கான நூல், ஒப்படைப்பு வான் காப்புறுதி கட்டணம்.
3) தையற்காரர் கூலி, தொழிற்சாலை காவலாளி சம்பளம்.
4) துணிக்கான கிரயம், தொழிற்சாலை வாடகை.
5) தையற்காரர் கூலி, தையல் இயந்திரத்திற்கான கிறீஸ்.

* **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 17, 18ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**
பாதிடப்பட்ட மேந்தலை 80,000 ரூபா
பாதிடப்பட்ட நேர்பொருட்கிரயம் 320,000 ரூபா
உண்மையாக ஏற்பட்ட மேந்தலை 90,000 ரூபா
உண்மையாக ஏற்பட்ட நேர் பொருட்கிரயம் 270,000 ரூபா

17. நேர் பொருட்கிரயத்தின் சதவீதமான மேந்தலை உறிஞ்சல் வீதம் யாது?
1) 25% 2) 50% 3) 75% 4) 33.3% 5) 40%

18. ஒரு அலகு பொருளுக்கான மேந்தலையாக 15 ரூபா உற்பத்திக் கிரயத்தினுள் உள்ளடக்கப்பட்டதெனின் ஒரு அலகுக்கான நேர் பொருள் கிரயம் யாது?
1) 40 ரூபா 2) 60 ரூபா 3) 75 ரூபா 4) 30 ரூபா 5) 80 ரூபா

19. கிரயத்தின் கூறுகளை உள்ளடக்கிய சரியான தொகுதி,
1) நேர்கிரயம் நேரில் கிரயம்.
2) மூலக்கிரயம், மேந்தலைக்கிரயம்.
3) நேர் பொருட்கிரயம், நேர்கூலி, நேர் செலவு உற்பத்தி மேந்தலைகிரயம்.
4) நேர்பொருட்கிரயம், நேர்கூலி, நேர்செலவு, உற்பத்தியல்லா மேந்தலை.
5) மூலக்கிரயம், உற்பத்தி மேந்தலை, உற்பத்தியல்லா மேந்தலை.

20. இலங்கை கணக்கீட்டு நியம்ம 18இன்படி பின்வருவனவற்றுள் ஆதனம் பொறி மற்றும் உபகாரணங்களின் கிரயத்தினுள் உள்ளடக்கம் முடியாத கிரயம் எது?
1) கொள்வனவுக்கிரயம்.
2) ஆரம்ப ஒப்படைத்தல் கிரயம்.
3) கட்டடம் கட்டுவதற்கான இடத்தினை தயார்படுத்தல் கிரயம்.
4) மீள் மதிப்பீட்டு கிரயம்.
5) கட்டக்கலைஞர், பொறியிலாளர் திறன் தொழில்சார் கட்டணம்.

* **பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

21. இலங்கை கணக்கீட்டு நியமம் 36இன்படி நிகழத்தக்க சொத்து என்பதை வரையறுக்குக.

..............................................................................................

22. இலங்கை கணக்கீட்டு நியமம் 10இன்படி நிறுவனமொன்று தான் பின்பற்றி வந்த கணக்கீட்டுக் கொள்கைகளை மாற்றிக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் 2 தருக.

..............................................................................................

23. இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன்படி ஐந்தொகையின் நிகழ்வுக்ள் என்பதை வரையறுக்குக.

..............................................................................................

24. 2007 கம்பனிச் சட்டத்தின்படி வரையறுத்த பொதுக்கம்பனி ஒன்று கட்டாயமாக வைத்திருக்க வேண்டிய 3 கணக்கேடுகளைக் குறிப்பிடுக.

..............................................................................................

25. கிரய அலகு என்பதை வரையறுக்குக. பின்வரும் நிறுவனங்களின் கிரய அலகுகளைக் குறிப்பிடுக.
ஐஸ் பழ உற்பத்தி: ..............................................
விமான சேவை நிறுவனம்: ..............................................

26. இறுதி வந்தது முதல் செல்லல் முறையின் அனுகூலம் ஒன்றையும் பிரதிகூலம் ஒன்றையும் குறிப்பிடுக.
அனுகூலம்: ..............................................
பிரதிகூலம்: ..............................................

27. நிதிக்கணக்கீட்டினையும் கிரயக் கணக்கீட்டினையும் பின்வரும் அம்சங்களில் வேறுபடுத்துக.
யாருக்கு தகவல்: ..............................................
காலப்பகுதி: ..............................................

28. பங்கு வழங்கல் பெறுமதி என்றால் என்ன? கம்பனி ஒன்றில் பங்குகளை வழங்கல் பெறுமதி எவ்வாறு பெறப்படலாம்?

..............................................................................................

29. கம்பனி ஒன்றில் 20% பங்கிலாபவரி கழித்து நிதி ஆண்டின் இடைக்காலத்தில் செலுத்திய தேறிய பங்குலாபம் 32,000 ரூபா இந்த நடவடிக்கையை பதிவிடுவதற்கான நாட்குறிப் பதிவினைத் தருக.

..............................................................................................

30. பின்வரும் விடயங்கள் ஒவ்வொன்றுக்கும் ஓர் உதாரணம் தருக.
இ.க.நி 10 கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றம்: ..............................................
இ.க.நி 36 நிகழத்தக் சொத்து: ..............................................
இ.க.நி 36 ஏற்பாடு: ..............................................

31. மேந்தலை உறிஞ்சல் வீதம் என்றால் என்ன? இதனை கணிப்பிடுபதற்கான தேவை யாது?

..............................................................................................

32. கிரயக் கணக்கீட்டின் நோக்கங்கள் இரண்டைக்குறிப்பிடுக.

..............................................................................................

33. பின்வரும் கிரயங்களை வேறுபடுத்துவதற்காக அடிப்படையைக் குறிப்பிடுக.
1) நேர்கிரயம் நேரில் கிரயம்: ..............................................
2) உற்பத்தி கிரயம் உற்பத்தியல்லா கிரயம்: ..............................................

34. பின்வரும் ஆவணங்கள் வழங்கப்படுவதில் நோக்கங்களை தருக.
1) கொள்வனவு வேண்டுதல் பத்திரம்: ..............................................
2) பொருட்கோரிக்கை பத்திரம்: ..............................................

35. நிறுவனமொன்றின் சரக்கிருப்பு புரள்வு விகிதம் கடந்தாண்டை விட நடப்பாண்டு குறைவடைந்து காணப்பட்டது. இதன் மூலம் ஏற்பட்ட இரண்டு விளைவுகளை கூறுக.

..............................................................................................

* **பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் 'சரி' எனவும் பிழையாயின் 'பிழை' எனவும் குறிப்பிடுக.**

36. வரையறுத்த பொதுக்கம்பனி ஒன்று பங்கு மீதான பகிர்தளித்தல் இடம்பெறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கடன் தீர்க்கும் ஆய்வு மேற்கொள்ளல் வேண்டும். ( )

37. இணைப்பு விகிதம் 1இற்கு கூடுதலாயின் உரிமை மூலதனம் கடன் மூலதனத்தை விட கூடுதலாக இருக்கும். ( )

38. பொருள் ஒன்றின் உற்பத்திக்கு முன் கிரயக் கணக்காளரின் மதிப்பிடப்படுகின்ற கிரயம் நியமக்கிரயம் எனப்படும். ( )

39. ஊழியர் சேமிக்கும் நேரத்திற்கு வழங்கப்படும் விசேட கொடுப்பனவு மேலதிக நேர கொடுப்பனவு எனப்படும். ( )

40. உற்பத்தி தொடர்பில் எங்கெங்கு கிரயங்கள் ஏற்படுகின்றனவோ அவை யாவும் கிரய நிலையங்களாகும். ( )

ஆசிரியர்: திரு.R.ஜனதன் B.BA (Hons)
விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13.
உதவி: R.ருஷாந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கீடு - 01 | பகுதி - II

* முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

01. வரையறுத்த அலிபாபா கம்பனியின் 31 மார்ச் 2008இல் எடுக்கப்பட்ட பரீட்சை மீதி வருமாறு:

| | 000 ரூபா | 000 ரூபா |
|---|---|---|
| கூறப்பட்ட சாதாரண.பங்கு மூலதனம் (25,000 பங்குகள்) | | 5,000 |
| 20% தொகுதிக்கடன் | | 1,500 |
| ஆதனங்கள் கிரயம் | 4,000 | |
| மோட்டார் வாகனங்கள் கிரயம் | 3,200 | |
| பொறி கிரயம் | 2,300 | |
| தளபாடம் கிரயம் | 1,200 | |
| இருப்பு 31 மார்ச் 2008 இல் | 130 | 6,000 |
| விற்பனை | | |
| விற்பனைக்கிரயம் | | |
| செலுத்திய வரி | 3,600 | |
| வரி ஏற்பாடு 2006/2007 | 350 | 60 |
| நிர்வாகச் செலவுகள் | | |
| பங்கீட்டுக்கிரயம் | 10 | |
| பணிப்பாளர் சம்பளம் | 75 | |
| செலுத்திய பங்கு இலாபம் | 48 | |
| பெறு.தேள் ஏற்பாடு 01 ஏப்ரல் 2007இல் | 140 | |
| மோட்டார் வாகனங்கள் | | 1,200 |
| பொறி | | 900 |
| தளபாடம் | | 400 |
| பெற்ற கழிவு | | 30 |
| பொது ஒதுக்கம் | | 240 |
| இலாபநட்ட கணக்கு மீதி | | 160 |
| மீள் மதிப்பீட்டு மிகை | | 400 |
| கடன்கொடுத்தோர் கடன்பட்டோர் | 200 | 150 |
| ஐயக்கடன் ஏற்பாடு | | 60 |
| காப்புறுதி | 75 | |
| விளம்பரம் | 22 | |
| உயர்தொழில் முறைச்செலவுகள் | 32 | |
| பங்கு வழங்கல் செலவு | 20 | |
| வங்கி | 698 | |
| | 16,100 | 16,100 |

மேலதிக தகவல்கள் வருமாறு:

1) இறுதி இருப்பினுள் 80,000 ரூபா இருப்புக்கள் பழுதடைந்தவையாக இருந்தன. இவை பதிவளிக்கப்பட வேண்டும். எனினும், இவை 10,000 ரூபாவிற்கு விற்க முடியும் என எதிர்பார்க்கப்பட்டது.
2) 31 மார்ச் 2008இல் அட்டுறவைகளும் முற்பணங்களும் வருமாறு:-

| | முற்பணம் | அட்டுறு |
|---|---|---|
| கணக்காய்வு கட்டணம் | | 45,000 |
| காப்புறுதி | 15,000 | |
| பங்கீட்டுக்கிரயம் | 10,000 | 8,000 |

3) தளபாடம் என்பதினுள் 400,000 ரூபாவானவை 30 செப்டெம்பர் 2007ஆல் வாங்கியவை யாகும். தளபாடம் கிரயத்தில் 10% பெறுமானத் தேய்விடுக.
4) ஆதனங்கள் 500,000 ரூபாவாக மறுமதிப்பீடு செய்யப்பட்டது.
5) 30 செப்டெம்பர் 2005ஆல் 400,000 ரூபாவுக்கு வாங்கிய மோட்டார் வாகனம் பகுதி மாற்றாக கொடுக்கப்பட்டு 01 ஒக்டோபர் 2007 இல் புதிய மோட்டார் வாகனம் 800,000 ரூபாவுக்கு வாங்கப்பட்டது. எஞ்சிய தொகையாக செலுத்திய காசு 500,000 ரூபா மோட்டார் வாகன கணக்கில் வரவு வைத்தது தவிர வேறு பதிவுகள் இடம்பெறவில்லை. மோட்டார் வாகனம் பொறி கிரயத்தில் 20% பெறுமானத்தேய்விடுக.
6) கடன்பட்டோரில் 20,000 ரூபாவை அறவிட முடியாக்கடனாக பதிவளிப்பதுடன் ஐயக் கடன் ஏற்பாட்டை 30,000 ரூபாவாக சீராக்குக.
7) செலுத்திய வரியினுள் 2006/2007 ஆம் ஆண்டுக்குரிய வரி 50,000 ரூபாவும் உள்ளடங்கும். 2007/2008 ஆம் ஆண்டுக்கு வருமான வரி 410,000 ரூபாவாக மதிப்பிடப்பட்டது.
8) இயக்குநர் சபைத் தீர்மானங்கள் வருமாறு:-
   1. பொது ஒதுக்கத்திற்கு 40,000 ரூபாவை மாற்றுதல்.
   2. சாதாரணப் பங்குகளுக்கு ஒரு 10% பங்கு இலாபம் வெளிப்படுத்தல்.

**வேண்டப்படுவது:-**

1) 31 மார்ச் 2008இல் முடிந்த ஆண்டுக்கு வருமானக்கூற்று. (பொருத்தமான குறிப்புக்களுடன்)
2) உரிமை மாற்றக்கூற்று.
3) சொத்து அசைவுக்கூற்று.
4) பின்வரும் கணக்கீட்டு விகிதங்களை கணிக்குக.
   1. மொத்த இலாப வீதம்.
   2. வட்டிக்காப்பு விகிதம்.
   3. பங்கொன்றுக்கான உழைப்பு.
   4. இணைப்பு விகிதம்.

02. வரையறுத்த லங்கா கம்பனி 20 ரூபா விலையில் 80,000 சாதாரண பங்குகளை பின்வருமாறு பணத்தைப் பெறுவதென்று அடிப்படையில் வழங்கியது.
விண்ணப்பம் 12 ரூபா, அழைப்பு 8 ரூபா.
இக்கம்பனி மாதிரி அமைப்பு விதியைப் பின்பற்றும் கம்பனியாகும்.
01 மே 2008 இல் பின்வருமாறு விண்ணப்பங்கள் பெறப்பட்டன.
வெளிநாட்டு விண்ணப்பம் 20,000, பிற நிறுவனங்கள் 10,000, பொதுமக்கள் 90,000.
15 மே 2008இல் பின்வருமாறு பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.
வெளிநாட்டு விண்ணப்பம் முற்றாக நிராகரிக்கப்பட்டது.
பிற நிறுவனங்கள் 10,000 பங்குகள், பொதுமக்கள் 70,000 பங்குகள்
01 ஒக்டோபர் 2008இல் அழைப்புப்பணத்தை 15 ஒக்டோபருக்குள் செலுத்துமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.
15 ஒக்டோபர் 2008 இற்குள் 2,000 பங்குகளுக்கு ஒதுக்கப்பட்ட பிற நிறுவனப் பங்குகளும் 3,600 பங்குகளுக்கு விண்ணப்பித்த பொதுமக்களும் தவிர அழைப்புப்பணம் பெறப்பட்டது.
அழைப்பு நிலுவைக்கான வட்டி 10% ஆகும்.
01 நவம்பர் 2008 இல் நிலுவைப் பங்குகள் யாவும் 25 ரூபா விலையில் மீள் விநியோகம் செய்யப்பட்டன.
மீளவழங்கல் செலவு 15,000 ரூபா ஏற்பட்டது.
10 நவம்பர் 2008இல் முன்னைய பங்குதாரர் செலுத்திய தொகை மீளச் செலுத்தப்பட்டது.

**வேண்டப்படுவது:-**

1) பங்கு வழங்கல் மீள் விநியோகம் தொடர்பான குறிப்பேட்டுப் பதிவுகள்.
2) பங்கு மீள் விநியோகக் கணக்கு

03. வரையறுத்த அல்லி கம்பனியின் தகவல்கள் வருமாறு:-

| | 31.03.07<br>000 ரூபா | 31.03.08<br>000 ரூபா |
|---|---|---|
| கூறப்பட்ட சா.ப மூலதனம் | 1,500 | 2,000 |
| இலாபநட்டக் கணக்கு | 350 | 1,125 |
| தொகுதிக்கடன்கள் | 870 | 620 |
| பொது ஒதுக்கம் | 320 | 400 |
| கடன்கொடுத்தோர் | 140 | 175 |
| அட்டுறு தொகுதி கடன்வட்டி | 35 | 25 |
| அட்டுறு வருமான வரி | 26 | 38 |
| அட்டுறு செயற்பாட்டு செலவு | - | 50 |
| | 3,241 | 4,433 |

| | 31.03.07<br>000 ரூபா | 31.03.08<br>000 ரூபா |
|---|---|---|
| காணிகட்டடம் (தேறியது) | 1,200 | 1,080 |
| மோட்டார் வாகனம் (தேறியது) | 750 | 800 |
| தளபாடம் | 420 | 300 |
| முதலீடுகள் | 170 | 100 |
| சரக்கிருப்பு | 80 | 60 |
| கடன்பட்டோர் | 140 | 180 |
| வங்கி | 481 | 1,913 |
| | 3,241 | 4,433 |

வருமானக் கூற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு:-

| | 000 ரூபா |
|---|---|
| விற்பனைகள் | 4,800 |
| மொத்த இலாபம் | 2,000 |
| ஏனைய வருமானம் (முதலீட்டு வருமானம்) | 150 |
| செயற்பாட்டு செலவுகள் | 900 |
| தொகுதிக்கடன் வட்டி | 175 |
| ஆண்டுக்குரிய வருமான வரி | 220 |

பிற தகவல்கள் வருமாறு:-
செயற்பாட்டு செலவுகளுள் பின்வருவனவும் உள்ளடங்கும்.

| | |
|---|---|
| காணிக்கட்டடத் தேய்வு | 120,000 ரூபா |
| மோட்டார் வாகனத் தேய்வு | 50,000 ரூபா |
| தளபாட தேய்வு | 70,000 ரூபா |
| தளபாட விற்பனை நட்டம் | 20,000 ரூபா |

**வேண்டப்படுவது:-**

1) நேர் முறையில் செயற்பாட்டு நடவடிக்கையைக் காட்டத்தக்கவாறான காசுப்பாய்ச்சல் கூற்று.
2) நேரில் முறையில் செயற்பாட்டு நடவடிக்கைக்கான காசுப்பாய்ச்சலைக் காட்டுக.

04. அ. விளையாட்டு பொம்மை உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்றின் ஊழியர் தொடர்பான விவரம் வருமாறு:-

| | ஊழியர் பெயர் | | |
|---|---|---|---|
| | சிவா | பாலா | குமரன் |
| 10 பொம்மைசெய்ய அனுமதித்த நேரம் | 30 நிமி. | 40 நிமி. | 50 நிமி. |
| ஊழியர் வேலைசெய்த நேரம் | 30 மணி | 60 மணி | 50 மணி |
| மணிக்கான கூலி | 50 ரூபா | 60 ரூபா | 70 ரூபா |
| உற்பத்தி செய்த பொம்மைகளின் எண்ணிக்கை | 800 | 900 | 600 |

ஊழியர்கள் சமநேரக் கூலிக்கு மேலதிகமாக பின்வரும் கொடுப்பனவுக்கு உரித்துடையவர்கள்.
1) கல்சி முறையில் மிகையூதியக் கொடுப்பனவு.
2) 500 பொம்மைகளுக்கு மேல் உற்பத்தி செய்யும் ஊழியருக்கு ஒரு பொம்மைக்கு 5 ரூபா ஊக்குவிப்பு கொடுப்பனவு.

**வேண்டப்படுவது:-**
ஒவ்வொரு ஊழியர்களுக்குமான மொத்தக் கொடுப்பனவுகளைக் கணிப்பிடுக.

ஆ. உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்றின் மூலப்பொருள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு:-

| | |
|---|---|
| 02 ஜனவரி 2008 கொள்வனவு | 300 அலகுகள் 22 ரூபா வீதம் |
| 05 ஜனவரி 2008 கொள்வனவு | 400 அலகுகள் 28 ரூபா வீதம் |
| 10 ஜனவரி 2008இல் வழங்கல் | 250 அலகுகள் |
| 15 ஜனவரி 2008 கொள்வனவு | 500 அலகுகள் 31 ரூபா வீதம் |
| 20 ஜனவரி 2008 வழங்கல் | 600 அலகுகள் |

எளிய சராசரி முறையில் களஞ்சிய பேரேட்டில் பதிக.

இ. நிறுவனம் ஒன்றின் பொருள் தொடர்பான பேரேட்டில் விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| வருடாந்தம் தேவையான பொருள் | 16,000 அலகுகள் |
| ஒரு கட்டளை அனுப்புவதற்கான செலவு | 100 ரூபா |
| ஓர் அலகு பொருளின் கொள்வனவுக் கிரயம் | 25 ரூபா |

இருப்பு வைத்திருப்பதற்கான செலவு கொள்வனவுக் கிரயத்தின் 20% ஆகும்.

**வேண்டப்படுவது:-**

1) சிக்கன கட்டளைத் தொகை யாது?
2) வருடாந்த கட்டளைகளின் எண்ணிக்கை.

05. வரையறுத்த ஜெகதா கம்பனி 2 உற்பத்தி திணைக்களங்களையும் 2 சேவைத்திணைக்களங்களையும் கொண்டதாகும்.

| | உற்பத்தி 1 | உற்பத்தி 2 | களஞ்சியம் | பராமரிப்பு |
|---|---|---|---|---|
| நேரில் கூலிகள் | 175,000 | 130,000 | 80,000 | 38,000 |
| நேரில் பொருள் | 53,000 | 21,000 | 12,000 | 11,000 |

| ஏனைய மேந்தலைகள் | ரூபா | | |
|---|---|---|---|
| தொழிற்சாலை வாடகை | 180,000 | | |
| தொழிற்சாலை மின்சாரம் | 120,000 | இயந்திர எரிபொருள் | 90,000 |
| ஊழியர் நலன்புரிச் செலவுகள் | 60,000 | ஊழியர் காப்புறுதி | 80,000 |
| இயந்திர தேய்வு | 350,000 | தொழிற்சாலை திருத்தம் | 100,000 |

மேலதிகத் தகவல்கள் வருமாறு:-

| நிலையம் | பரப்பளவு சது.மீற்றர் | இயந்திர பெறுமதி | இயந்திர மணித்தியாலம் | ஊழியர் எண் | பொருள் வழங்கல் | பரா.நேரம் மணி |
|---|---|---|---|---|---|---|
| உற்பத்தி 1 | 9,000 | 200,000 | 100,000 | 20 | 240,000 | 6,000 |
| உற்பத்தி 2 | 6,000 | 150,000 | 50,000 | 10 | 180,000 | 4,000 |
| களஞ்சியம் | 3,000 | ........... | ........... | 8 | ........... | ........... |
| பராமரிப்பு | 2,000 | ........... | ........... | 2 | 180,000 | ........... |

**வேண்டப்படுவது:-**

1) மேந்தலைக்கிரயங்களை உற்பத்தி நிலையங்களுக்கும் சேவை நிலையங்களுக்கும் பங்கீடு செய்க.
2) சேவை நிலையத்தின் மேந்தலைகளை பொருத்தமான அடிப்படையில் உற்பத்தி நிலையங்களுக்கு மறு பங்கீடு செய்க.
3) இயந்திர மணி அடிப்படையில் ஒவ்வொரு நிலையங்களுக்குமான மேந்தலை உறிஞ்சல் விகிதங்களை கணிப்பிடுக.
4) விளையாட்டுக்கார் ஒன்றின் மூலக்கிரயம் 250 ரூபாவாகும். இது உற்பத்தி 1 இல் 3 மணித்தியாலமும், உற்பத்தி 2 இல் 2 மணித்தியாலமும் உற்பத்திக்கு செலவிடப்பட்டதெனின் ஒரு விளையாட்டுக்காரின் உற்பத்திக்கிரயம் யாது?

06. அ. நிறுவனம் ஒன்றின் உற்பத்தி தொடர்பான விவரங்கள் வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| விற்பனை 20,000 அலகு | 600,000 | நேர் செலவு | 30,000 |
| உற்பத்தி செலவுகள் | | நிலையான உற்பத்தி மேந்தலை | 80,000 |
| பொருட் செலவு | 175,000 | மாறும் உற்பத்தி மேந்தலை | 120,000 |
| நேர்கூலி | 75,000 | | |

**வேண்டப்படுவது:-**

1) சமப்பாட்டுப்புள்ளி அலகுகளில்.
2) பாதுகாப்பு எல்லை
3) 40,000 ரூபா இலாபம் பெறுவதற்கு எவ்வளவு அலகு விற்கவேண்டும்?
4) 25,000 அலகுகளுக்கு மேல் வெளியீடு செய்ய முடியாத நிலையில் 50,000 ரூபா இலாபம் பெறுவதற்கு ஓர் அலகு விற்கவேண்டிய விலை யாது?

ஆ. பாலா என்பவர் தனது வியாபாரத்திற்கு புதிய இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளார்.
A இயந்திரத்தின் அடிப்படைக்கிரயம் 60,000 ரூபா
B இயந்திரத்தின் அடிப்படைக்கிரயம் 80,000 ரூபா
அடுத்து வரும் நான்கு வருடங்களில் இரு இயந்திரங்களினதும் தேறிய காசுப்பாய்ச்சல் வருமாறு:-

| | இயந்திரம் A | இயந்திரம் B |
|---|---|---|
| வருடம் 1 | + 30,000 | + 20,000 |
| வருடம் 2 | + 30,000 | + 30,000 |
| வருடம் 3 | + 20,000 | + 10,000 |
| வருடம் 4 | + 20,000 | + 15,000 |

முதலீட்டின் கழிவிடும் காரணி 10%

| வருடம் | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| | 0.909 | 0.826 | 0.751 | 0.683 |

**வேண்டப்படுவது:**
இயந்திரம் ஒவ்வொன்றுக்குமான தேறிய நிகழ்கால பெறுமதிகளைக் கணிப்பிடுக.

(நிறைவுற்றது)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாபிள் வகைகள் மலிவு விற்பனை

இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர மாபிள் வகைகள், கொமட் செட், சிங்கைகள், பிளாஸ்ரிக் கதவு வகைகள், பைப் வகைகள், மரஅடைப்புகள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட 'DUKE' பெயின்ற் வகைகள் என்பவற்றை மலிவான விலையில் பெற்றுக் கொள்ள.

**ஸ்ரார் செராமிக்ஸ்**

இல.05, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021- 5672061, 077 7578277- ராஜா (இ/567231)

## MBBS/MD

**Lugansk State Medical University**
**- UKRAINE - EAST EUROPE**

Recognized by SRI LANKA MEDICAL COUNCIL

With A/Ls 6 years

Minimum : 2C + 1S in Biology, Chemistry and Physics

எமது நிறுவனத்தின் மூலம் அனுப்பட்ட கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு, நுவரேலியா, மாத்தளை, மாணவர்கள் தற்பொழுது Ukraineல் கல்வி கற்கின்றனர்.

**www.lugmedi.com**

யாழ்ப்பாணத்தில் தொடர்புகளுக்கு:
Tel: (தமிழில்): 0777 767818/ 0779004194
**Scholars Information Center (SIC)**
இல.734, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விளையாட்டு வீரர்களைக் கௌரவிக்கவும் பதவி உயர்வு பெற்றவர்கள், ஓய்வுபெற்றவர்களைக் கௌரவிக்கவும் ஞாபகச் சேடயங்களை பல் வேறு வடிவங்களில் பெற்றுக்கொள்ள யாழ்.நகரில்...

**S.S.யசோதரன் ஆட்ஸ்**
381u, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0217903020

## German Language

German, Swiss மொழி வகுப்புகள் தமிழ் மொழிபெயர்ப்புடன்...
தொடர்பு: 10, Palaly Road, Jaffna.
T.P.: 0771604823. (97978)

## சிட்டை எழுதுநர் தேவை

ஸ்ரீசரவணபவன் சைவ உணவகத்திற்கு சிட்டை போடுபவர் தேவை. தங்கி நின்று வேலைசெய்பவர்களுக்கு முன்னுரிமை.
தொடர்பு: ஸ்ரீசரவணபவன், 195, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 0214920150 (97974)




**டயிடஸ் ஸ்ரோஸ்**
**2439422**



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1188 சிவப்பு

07-05-2010

துலாம் 04 08 26 51

ஜக்பொட் பரிசு ரூபா. 6,378,550/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 205,162 | 20/- | 4,103,240/- |
| 2 இலக்கங்கள் | 18,757 | 40/- | 750,280/- |
| 1 இல. + லக்கினம் | 18,597 | 60/- | 1,115,820/- |
| 2 இல. + லக்கினம் | 1,742 | 200/- | 348,400/- |
| 3 இலக்கங்கள் | 509 | 1000/- | 509,000/- |
| 3 இல. + லக்கினம் | 47 | 10,000/- | 470,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 6,378,550/- | 6,378,550/- |
| மொத்தம் | | | 14,075,290/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 244,822 | | 14,575,290/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

ஆலிந்தயே வாசனாவ - லக்க் செவன் வெற்றியாளர்
எம்.ஏ.எம்.ஜாபீர் : கல்முனை
எச்.டபிள்யூ.சரோஜா பத்திரண : மாத்தறை

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை

2010 மே 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நிலநிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 501249231-8-29 |
| மாத்தறை | 501234486-5-48 |
| கம்பஹா | 501241942-6-35 |
| பதுளை | 501234853-3-39 |
| களுத்துறை | 501244116-3-18 |



## மஹஜன சம்பத / மஹாஜன சம்பத / Mahajana Sampatha

07.05.2010

அலுவலக முடிவுகள் — சீட்டிழுப்பு இல. 2237

வெற்றி எழுத்து: L — வெற்றி எண்கள்: 9 9 1 6 7 5

| பரிசு | L | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| [illegible] | L | 9 | 9 | 1 | 6 | 7 | 5 | ரூபா 11,100,354/= | - |
| 1 பரிசுகள் | | 9 | 9 | 1 | 6 | 7 | 5 | ரூபா 2,000,000/= | 02 |
| 2 பரிசுகள் | | | 9 | 1 | 6 | 7 | 5 | ரூபா 100,000/= | 11 |
| 3 பரிசுகள் | | | | 1 | 6 | 7 | 5 | ரூபா 10,000/= | 125 |
| 4 பரிசுகள் | | | | | 6 | 7 | 5 | ரூபா 1,000/= | 1217 |
| 5 பரிசுகள் | | | | | | 7 | 5 | ரூபா 100/= | 12293 |
| 6 பரிசுகள் | | | | | | | 5 | ரூபா 20/= | 121295 |
| 7 பரிசுகள் | | 9 | 9 | 1 | 6 | 7 | | ரூபா 10,000/= | 13 |
| 8 பரிசுகள் | | 9 | 9 | 1 | 6 | | | ரூபா 1,000/= | 112 |
| 9 பரிசுகள் | | 9 | 9 | 1 | | | | ரூபா 100/= | 1225 |
| 10 பரிசுகள் | | 9 | 9 | | | | | ரூபா 50/= | 12102 |
| 11 பரிசுகள் | L | | | | | | | ரூபா 20/= | 48493 |

Rs. 13,161,660.00

தேசிய லொத்தர் சபை


### குடும்ப நல சேவையாளர்கள் கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம், மே 10

சர்வதேச குடும்பநல சேவையாளர் தினத்தையொட்டி சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு குடும்ப நல சேவையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகதில் இடம்பெற்றது.

அனைத்து குடும்பநல சேவையாளர்களுக்கும் சுகாதாரத் தொண்டர்களால் மலர் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

பதில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் க.தயாளன் தலைமையில் விருந்துபசாரமும் இடம் பெற்றது.

(201-207)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



யாழ். சரவணை கிழக்கு, வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட

**திருமதி பத்மநாதன் அன்னபூரணி**

தோற்றம் 15★10★1947 மறைவு 21★04★2009

திதி: 10.05.2010

அம்மா!
வாழ்க்கை எனும் நதியோட்டத்தில்
வங்களுடன் நாங்களும்
உங்களுடன் நீங்களும் - என
மகிழ்ந்திருந்த நாள்கள்
காணாமற் போன - ஆண்டொன்று
கடந்தாலும் ஆறாத உங்கள்- நினைவுடன்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (10.05.2010) திங்கட்கிழமை அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை வவுனியா, கோயிற்குளம் சிவன்கோயில் மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்விற்கு வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

264, சில்வா வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.** (97939)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**அமரர் நாகலிங்கம் முனியாண்டி**

தோற்றம் 18★08★1932

மறைவு 10★04★2010

எமது குடும்பத் தலைவர் இறைபதமடைந்த வேளையில் உடன் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் நன்றிகளைக் கூறிக்கொள்வதோடு, இன்று (10.05.2010) திங்கட்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(அழைப்புக் கிடைக்காதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்).

கச்சாய் வீதி, கொடிகாமம். (சீ/567506)

**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**மனுவேற்பிள்ளை றோக்செல்வநாயகம்** (பொலிஸ் ஐயா)

பிறப்பு 16★08★1948

இறப்பு 10★05★2009

எம் அன்புத் தெய்வமே! எம் குலம் விளங்க வந்த
குல விளக்கே!
இரக்கமற்ற காலனவன் உங்களை இடை நடுவில்
கவர்ந்து சென்று விட்டான்
எமக்கெல்லாம் வழிகாட்டியாய் இருந்து கடைசித்
காலம் வரை
எமை வழி நடத்துவீர்கள் என்று நாம்
நினைத்திருக்க
கணப்பொழுதில் எமை எல்லாம் தவிக்க விட்டுச்
சென்றீர்களோ?
ஆசைத் தெய்வத்தின் நினைவுகள் எமை வாட்டும் போது
தனிமையில் நாம் அழுவதை நீங்கள் அறிவீர்களோ?

நி.முகவரி: பலாலி, வசாவிளான்.
த.முகவரி: நறுவில் ஒழுங்கை, சாறையடி, புலோலி தெற்கு, பருத்தித்துறை. (97931)

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




01.03.1991

★கிளிநொச்சி, வட்டக்கச்சி அரசினர் நெற் பண்ணை ஊழியர்கள் விடுதி மீது இலங்கை விமானப்படை குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய குண்டுத்தாக் குதலில் 9 பொதுமக்கள் உடல் சிதறிப் பலியானதாக அறிவிப்பு.

★வளை குடாப் பிரச்சினை தொடர்பாக ஐ.நாவின் சகல தீர்மானங்களையும் ஈராக் நிர்வாகம் ஏற்றுக் கொண்டதை யடுத்து வளைகுடாப் போரில் தற்கா லிக யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்த தாகத் தெரிவிப்பு.

02.03.1991

★கொழும்பு ஹவ்லொக் வீதியில் இன்று காலை இடம்பெற்ற பெரும் குண்டு வெடிப்புச் சம்பவமொன்றில் பெருந் தோட்டத் தொழில் துறை அமைச்சரும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்ன கொல்லப்பட்டதா கத் தெரிவிப்பு.

★மடு அகதிகள் முகாமில் இருந்து அகதி களை வேறு இடத்துக்கு மாற்றும் முயற் சியைத் தாம் அனுமதிக்கப் போவ தில்லை என ஐ.நா. அகதிகள் ஸ்தானி கராலயத்தின் இலங்கைக்கான வதி விடப் பிரதிநிதி தெரிவிப்பு.

03.03.1991

★உயிரிழந்த அமைச்சர் ரஞ்சன் விஜே ரத்ன கோ்ணல் தரத்தில் இருந்து ஜென ரல் தரத்துக்கு ஜனாதிபதி பிரேமதாசா வால் பதவி உயர்த்தப்பட்டதாக அறி விப்பு.

★உயிரிழந்த அமைச்சர் ரஞ்சன் விஜே ரத்னவின் இறுதிக் கிரியைகள் எதிர்வ ரும் 06 ஆம் திகதி இராணுவ மரியா தைகளுடன் நடத்தப்படவுள்ளதாகவும் அன்றையதினம் தேசிய துக்க தினமா கப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தாக வும் அரசு அறிவிப்பு.

04.03.1991

★குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவின் இடத்துக்கு சிறிசேன கூரே நியமிக்கப்படக் கூடுமென அர சியல் வட்டாரங்கள் ஊகம் தெரிவிப்பு.

★பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ் சன் விஜேரத்னவைப் பலிகொண்ட ஹவ் லொக் வீதிக் குண்டுவெடிப்புச் சம்ப வத்துக்கு விடுதலைப் புலிகளே கார ணம் என்று இலங்கை அரசு சந்தேகிப் பதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவிப்பு.

05.03.1991

★யாழ்.குடாநாட்டில் நேற்று முழுவதும் இலங்கை விமானப்படையின் குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதல்களால் 22 பொதுமக்கள் மரணம்: 25 பேருக்கு மேல் படுகாயம் எனத் தெரிவிப்பு.

★அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவின் படுகொலைச் சம்பவத்தைத் திட்ட மிட்டு நடத்திய சூத்திரதாரி யார் என் பது இரண்டொரு தினங்களில் தெரிந்து விடுமெனப் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியதாக கொழும்புச் செய்திகள் தெரிவிப்பு.

06.03.1991

★இலங்கைத் தமிழர்களின் பெரும்பான்மை யோர் தமிழீழ விடுதலைப்புலிகளையே ஆதரிக்கிறார்கள் என்பதனை இந்தியா வும் ஏற்றுக்கொள்கிறது என இந்திய வெளியுறவுச் செயலாளர் முச்குண்ட் துபே தெரிவிப்பு.

★யாழ். குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீதுதான் விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதாக கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவிப்பு.

07.03.1991

★இந்தியப் பிரதமர் சந்திரசேகர் தலைமை யிலான ஜனதாதள் சோஷலிஸ்ட் கட்சி அரசு நான்கு மாத ஆட்சியின் முடிவில் நேற்று ராஜினாமா.

★மறைந்த அமைச்சர் ரஞ்சன் விஜேரத் னவின் பாதுகாப்புத் துணை அமைச்சர் பதவி பிரதமரும் நிதி அமைச்சருமான டி.பி.விஜேதுங்கவிடம் மேலதிகமாக ஒப்படைப்பு.

08.03.1991

★பேச்சுக்கள் மூலம் இனப் பிரச்சினைக் குத் தீர்வு காண்பது என்ற நிலைப்பாட் டில் அரசு உறுதியாக உள்ளதாக பிரதம ரும் புதிய பாதுகாப்புத் துணை அமைச் சருமான டி.பி.விஜேதுங்க தெரிவிப்பு.

09.03.1991

★இஸ்ரேலில் இருந்து இலங்கைக் கடற் படைக்கு ரோந்துப் படகுகளை வாங் குவதில்லை எனவும் சீனாவிடமிருந்தே எதிர்வரும் காலத்தில் அவற்றை வாங் குவதென்றும் அரசு முடிவு செய்துள்ள தாகத் தெரிவிப்பு.

★மடுவிலுள்ள அகதி முகாம் சம்பந்தமாக முடிவெடுக்கும் பொருட்டு ஐ.நா. அக திகள் ஸ்தானிகராலய அதிகாரி அங்கு தங்கியிருந்து அகதிகளின் கருத்தை அறியவுள்ளதாகத் தெரிவிப்பு.

10.03.1991

★வவுனியா, தாண்டிக்குளம் இராணுவ காவல் அரணிலிருந்து வெளியேறி முன்சென்ற மூன்று புளொட் இயக்க உறுப்பினர்கள் விடுதலைப்புலிகளின் தாக்குதலில் பலியானதாகத் தெரிவிப்பு.

★குடாநாட்டில் வேகமாகப் பரவிவரும் மூளைக் காய்ச்சல் நோய்க்கு இலக்காகி இரு மாதங்களில் பத்துக்கு மேற்பட் டோர் பலியானதாகச் சுகாதாரத் திணைக் கள வட்டாரங்கள் தெரிவிப்பு.

11.03.1991

★தாண்டிக்குளத்தில் புளொட் குழுவி னரின் சோதனைச் சாவடிக்கு அருகில் வைத்து இருபது அப்பாவிப் பொதுமக் கள் சுட்டுக் கொல்லப்பட்டதாக ஏஜென் சிச் செய்திகள் தெரிவிப்பு.

★தீவிரவாத இயக்கங்கள் தொடர்பாக கடும் போக்கைக் கடைப்பிடித்து வந்த அரசின் கொள்கையில் அமைச்சர் ரஞ் சன் விஜேரத்னவின் மரணம் மாற்றங் களை ஏற்படுத்தக் கூடுமென ஆஸ்தி ரேலிய வானொலி ஊகம் தெரிவிப்பு.

12.03.1991

★கடந்த ஒரு வாரத்தில் மட்டும் விடுத லைப்புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகி ஐம்பதுக்கும் அதிகமான படையினர் உயிரிழந்திருப்பதாக இலங்கை இராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பு.

★வடக்கு-கிழக்கு யுத்தத்துக்குத் தீர்வு காணும் வேளை அண்மித்துவிட்டதாக பிரதமரும் பாதுகாப்புத் துணை அமைச்சரு மான டி.பி.விஜேதுங்க தெரிவிப்பு.

13.03.1991

★உத்தேச இலங்கை - இந்திய நட்புறவு ஒப்பந்தத்தில் இலங்கை அரசு தனக்குப் பாதகமானவை எனக் கருதும் சம்பவங் களின் காரத்தைக் குறைக்க அல்லது மாற்றியமைக்க இந்தியா தயாராக இருப்பா தாக இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு.

14.03.1991

★இந்தியாவின் ஒன்பதாவது நாடாளு மன்றத்தை ஜனாதிபதி ஆர்.வெங்கட் ராமன் நேற்றுக் கலைத்துப் பொதுத் தேர்த லொன்றுக்கு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

★அடிப்படை மனித உரிமைகளை மீறிச் செயற்படும் இலங்கை அரசு சர்வ தேச மன்னிப்புச் சபை மீது பிழை கூறு வது தவறாகும் என சர்வதேச மன்னிப் புச்சபை இலங்கை அரசுக்குக் கடித மூலம் தெரிவிப்பு.

15.03.1991

★ஜனாதிபதி பிரேமதாசாவின் வெளி விவ கார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர் லோரன்ஸ் திலகரை ஜெனிவா வில் வைத்துச் சந்தித்துப் பேசியதாகத் தெரிவிப்பு.

★இலங்கைத் தமிழர்கள் எவரையும் சட்ட விதிமுறைகளைப் பின்பற்றாமல் காவ லில் வைக்கக் கூடாது [illegible] நீதிமன்றம் தமிழக [illegible]

# புதிய அங்கத்தவர்களை இணைத்து மாதர் சங்கச் செயற்பாடுகள் விஸ்தரிப்பு

நீர்வேலிப் பிரதேசத்தில் மாதர் சங்கத் தில் புதிய அங்கத்தவர்களை இணைத்து சங்கத்தை விரிவுபடுத்துவதற்கான ஏற் பாடுகள் மேற்கொள்ளப்படும்.

சமூக அபிவிருத்தி மன்றத்தின் தலை வியும்,நீர்வேலி தெற்கு மாதர் அபிவிருத் திச் சங்கத் தலைவியுமான திருமதி ருக்கு மணி ஆனந்தவேல் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்த ஆண்டில் புதிதாக மேலும் பல பெண்களை மாதர் சங்கத்தில் புதிதாக இணைத்து அவர்களை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த மாதர் சங்கத்தின் ஊடாக பெண் கள் வீட்டில் இருந்தபடியே தாம் விரும்பிய சுயதொழிலை மேற்கொள்ளமுடியும்

மாதர் சங்கத்தில் அங்கத்தவர்களாக இணைவோருக்கு குறைந்த வட்டியிலான கடன் வசதிகளும் வழங்கப்பட்டு வருகின் றன - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(04-224)

# கோப்பாய்ப் பகுதிக்கு 200 கேபிள் தொலைபேசி இணைப்புகள் விரைவில்

யாழ்ப்பாணம்,மே 10

கோப்பாய்ப் பிரதேசத்துக்குக் கேபிள் தொலைபேசி இணைப்புக்களை வழங்கு வதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது இருபாலைச் சந்தியில் இருந்து நிலத்தடி கேபிள் இணைப்புக்களைப் பொருத்தும் பணிகள் நடைபெற்று வரு கின்றன.

கோப்பாய்ச் சந்திக்கு அருகில் இதற் கென அமைக்கப்பட்டுள்ள பரிவர்த்தனை அலகில் இவை பொருத்தப்பட்டதும் பிரதேச மக்களுக்கான தொலைபேசி இணைப்புக்களை வழங்கும் பணிகள் குறைந்தது இரண்டு மாத காலத்துக்குள் ஆரம்பமாகிவிடும் என்று ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன. முதற்கட்ட மாக 200 தொலைபேசி இணைப்புக்களை விநியோகிப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன என்றும் அந்த வட்டாரங் கள்மேலும் தெரிவித்தன

(04-224)

# கைதடி முதியோர் இல்லப் பாவனைக்கு கணனிகளை வழங்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே 10

கைதடி அரச முதியோர் இல்லத்தின் அலுவலகப் பாவனைக்கெனத் கணனி இயந்திரங்களைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இல்லத்தின் அத்தியட்சகர் என். இராஜ லிங்கம் இது தொடர்பாக வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ள விடயங்கள் வருமாறு -

இல்லத்தின் அலுவலகத்தில் உள்ள ஒரே ஒரு கணனியைக் கொண்டே இது வரை காலமும் பணிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

தற்போது அலுவலகத்தின் அத்தியாவ சியப் பணிகளைக் கருத்திற்கொண்டு மேலும் கணனிகளை தந்து உதவுமாறு சமூகசேவைகள் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளோம்- என்று அவர் கூறினார்.

(04-224)

## மக்கள் இடையே பரஸ்பர உறவை மேம்படுத்த

# சிவில் அலுவலகம் செயலகத்துடன் இணைந்து நடத்தும் கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம், மே 10

மக்களிடையே பரஸ்பர உறவு மற்றும் தொடர்பாடல் என்பவற்றை மேம்படுத்தும் நோக்குடன் கட்டுரைப் போட்டி ஒன்றைச் சிவில் விவகாரங்களுக்குப் பொதுமக்கள் உறவுகளுக்கான அலுவலகம் நடத்தவுள்ளது.

யாழ். செயலகத்துடன் இணைந்து பாட சாலை மாணவர்கள் மத்தியில் இந்தப் போட்டி இருபிரிவுகளாக நடத்தப்பட விருக்கிறது.

ஜி.சீ.ஈ. (உயர்தர) மாணவர்களுக்கு (21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு) தனி யான போட்டியும், திறந்த போட்டியும் நடத் தப்படவுள்ளன.

தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம் போட்டிகள் நடத்தப்படும்.

வலயம் மற்றும் மாவட்ட மட்டத்தில் போட்டிகள் நடத்தப்பட்டுச் சான்றிதழ் வழங்கப்படும். ''இலங்கையில் இனங்க ளுக்கு இடையே ஐக்கியத்தினை எவ்வாறு ஏற்படுத்தலாம்?'', ''இலங்கையில் பின் பற் றப்படுகின்றவாறு இந்துசமயம், பௌத்த சமயம் மற்றும் கிறிஸ்தவ சமயம் ஆகி யன'' , ''பல்லினத் தன்மையுள்ள நிலை யில் ஒற்றுமை'' ஆகிய மூன்று தலைப்புக ளில் போட்டிகள் இடம்பெறுகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுரைகளை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் ''சிவில் விவகாரங்க ளுக்கும் பொதுசன உறவுகளுக்குமான அலுவலகம், பாதுகாப்புப் படைத்தலை மையகம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பா ணம்.'' என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட் கப்பட்டுள்ளது.

(ஒ-1)

# சாரதி அனுமதி பெறுவோர் எண்ணிக்கை செயலகத்தில் தினம் தினம் அதிகரிக்கிறது

கைதடி,மே 10

யாழ். செயலகத்தில் அமைந்திருக்கும் மோட்டார் போக்குவரத்துத் திணைக் களத்தில் சாரதி அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிப்போரின் எண்ணிக்கை தின மும் அதிகரித்து வருவதனைக் காணக் கூடிதாகவுள்ளது.

தற்போது யாழ்.குடாநாடெங்கும் இரவு பகலாக வீதிகளில் நின்று பொலிஸார் வாகனச் சாரதிகளிடம் சாரதி அனுமதிப் பத்திரத்தை பரிசோதிக்கின்றனர்.

அவர்களிடம் இல்லாதவிடத்து தண் டப்பணம் அறவிடுவதாலேயே பலர் தற் போது சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பிப்பதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

(1-288)



மந்திகை எம். எச். எவ். வைத்தியக் குழு வினர் தும்பளை யோகசாந்தி நிலை யத்தில் அண்மை யில் யோகப் பயிற்சி பெற்றனர். இதன் பொருட்டு ஒரு தொகைப் பணத்தை தும்பளை யோக சாந்தி நிலையத் துக்கு வழங்கினர். அந்தப் பணத்தை யோக நிலையத் தினர் தும்பளை [illegible] மாணவர் நலனுக்காக யோகாசன ஆசிரியர் ரி.தேவராஜேந்திரன் [illegible] அதிபர் திருமதி வி.சிவகுமாரனிடம் வழங்குவதையும் அருகில் பாடசாலை அதிபர் கே.கே.யோகநாதன் நிற்பதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## தருபவர்: வித்யா

### மேடம்

வீட்டிற்கு வரும் சில்லரை உபசரிக்கக் கூட நேரமில்லாமல் ஏதாவது வேலைகளைச் செய்வீர்கள். புதிய சொத்துக்கள் வாங்கும் முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. மருத்துவச் செலவுகளை சந்திக்கலாம். சிலர் உங்களுக்கு உதவி செய்ய முன்வந்தும் அதை வேண்டாமென மறுத்து விடுவீர்கள். கனவுத் தொல்லையுண்டு.

### இடபம்

மறக்க முடியாத நிகழ்ச்சிகள் நடக்கலாம். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள். அதிக செலவாகும் என நினைத்த காரியம் ஒன்று, குறைந்த செலவில் முடியும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். நண்பர்களால் ஆதாயம் பெறலாம்.

### மிதுனம்

மற்றவர்களை நம்பி எந்த காரியங்களையும் ஒப்படைக்காமல், அனைத்தையும் நீங்களே செய்ய முற்படுவீர்கள். தாய் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். உங்களுக்கு வேண்டியதை சாதிப்பதற்காக சிலரிடம் கனிவாகப் பேசுவீர்கள். சண்டை போட்ட சிலரிடம் சமாதானமாகச் செல்வீர்கள். பரபரப்பாக செயற்படும் நாள்.

### கடகம்

உறவினர்கள் சிலரிடம் உதவி கேட்கலாமா, வேண்டாமா என குழப்பம் அடைவீர்கள். உங்கள் நலனில் அக்கறை கொண்ட ஒருவரை பற்றி அறிந்து கொள்வீர்கள். மற்றவர்களுக்காக உங்களுக்குப் பிடித்தமான ஒன்றை விட்டுக் கொடுப்பீர்கள். உறவினர் ஒருவர் தங்களுக்கு வேண்டியவருக்காக உங்களிடம் உதவி கேட்கலாம்.

### சிங்கம்

எப்படியும் முடிந்து விடும் என மலைபோல் நம்பிய காரியம் ஒன்று கடைசி நேரத்தில் கைநழுவிப் போகலாம். உங்களுக்கு முன்னர் நன்கு அறிமுகமான ஒருவர் இன்று தெரியாதது போல நடந்து கொள்ளலாம். வாகனங்களால் ஏற்படும் தொந்தரவுகளால் தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். சிலருடன் வாக்குவாதங்களில் ஈடுபடலாம்.

### கன்னி

மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காகவே, சில செலவுகளைச் செய்வீர்கள். நண்பர்கள் சிலர் உங்களைப் பாராட்டி பேசலாம். உறவுப் பெண்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும். உங்களுக்கு தெரியாத விடயம் ஒன்றை மாமன், மைத்துனர்களிடம் கேட்டு தெரிந்து கொள்வீர்கள். நட்பு வட்டம் விரிவடையும்.

### துலாம்

புத்திசாலித்தனமான செயல்பாடுகளால் புகழ் சேர்ப்பீர்கள். விருந்து, விசேஷ நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாகாமல் இருக்க, பணியில் கவனம் அவசியம். உதிரி வருமானங்களைப் பெறலாம். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெறும் சூழ்நிலை உருவாகும். மதிப்பு, கௌரவம் மேம்படும்.

### விருச்சிகம்

சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி விடுமோ என கலக்கம் அடையலாம். நீங்கள் சொல்வதே சரியென சிலரிடம் வாக்கு வாதத்தில் ஈடுபடுவீர்கள். சில வேலைகளில் ஆரம்பத்தில் தாமதம் ஏற்பட்டாலும், பின்னர் விறுவிறுப்பாக முடிவுக்கு வரும். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். செலவு கூடும் நாள்.

### தனுசு

உறவினர்கள், அயலார் விடயங்களின் தலையிடுவதன் மூலம், மன உளைச்சல்களுக்கு ஆட்படலாம். மனைவி, சகோதரிகள் கேட்ட உதவிகளைச் செய்யாமல், அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். எதிர்பார்த்த பணவரவு ஒன்று வந்தாலும், அதற்கேற்ற செலவும் ஏற்படும். ஏதோ ஒருவித வெறுப்பு குடிகொள்ளும்.

### மகரம்

எடுத்த காரியங்களில் தங்கு தடையற்ற வெற்றி கிடைக்கும் நாள். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம். தூரத்து உறவினர் ஒருவரின் அறிமுகம் கிடைக்கும். செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள். உங்களுக்காக நண்பர்கள் சிலர் செலவு செய்யலாம். நீண்ட நாட்களாக சந்திக்காத ஒருவரை சந்திக்கலாம்.

### கும்பம்

இன்று செய்ய நினைத்த வேலை ஒன்றை நாளை செய்யலாம் என தள்ளி வைப்பீர்கள். சிலர் உங்களை எங்காவது வரச் சொல்லி விட்டு, அவர்கள் வராமல் போகலாம். ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். நண்பர்கள் சிலரின் வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டு நடக்கலாம். நேரம், காலம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள்.

### மீனம்

பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையிலான உதவி கிடைக்கலாம். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர் உங்களைத் தேடி வரலாம். வெளியூர்களில் இருக்கும் சில்லரைத் தொடர்பு கொண்டு முக்கிய விடயமாகப் பேசுவீர்கள். சகோதரர்களால் அன்புத் தொல்லையுண்டு. ஆபத்தான ஆயுதங்களை கவனமாக கையாள வேண்டும்.

## டெங்கு ஒழிப்பு வாரத்தில் சிரமதானப் பணிகள்

யாழ்ப்பாணம்,மே 10

டெங்குநோயைக் கட்டுப்படுத்தும்முகமாக சுகாதாரப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் டெங்கு ஒழிப்பு வாரத்தில் மக்களால் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இந்தச் சிரமதானப் பணிகள் மிகவும் மும்முரமாக நடைபெற்று வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

பாடசாலைகள் அமைந்துள்ள சூழல், பொது இடங்கள், மக்கள் குடியிருப்புப் பகுதிகள் போன்ற இடங்களில் இந்தச் சிரமதானப் பணிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் என்பன நடைபெற்று வருகின்றன.

மாணவர்கள், ஆசிரியர்கள் என்போரும் இத்தகைய துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். (04-224)

## வீதிப் புனரமைப்புப் பணிகள்

நல்லூர்,மே 10

புங்குடுதீவு, பெருங்காடு - இறுப்பிட்டி வீதிப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாகப் பாதிக்கப்பட்ட நிலையில் அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டும் கவனத்தில் கொள்ளப்படாத இந்த வீதி இப்போது முதல் கட்டமாக ஒரு கிலோ மீற்றர் தூரம் வரையே புனரமைக்கப்படவுள்ளது என அறியப்படுகின்றது.

பெருங்காட்டிலிருந்து இறுப்பிட்டி வரை சுமார் 3½ கி.மீற்றர் நீளமுள்ள இந்த வீதியின் பாதிப்புக் காரணமாக கடந்த பல வருடங்களாக யாழ்ப்பாணம் - இறுபிட்டிக்கான பஸ் சேவைகளும் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-111)

## உபகரணங்கள் அன்பளிப்பு

நல்லூர்,மே 10

லண்டன் தமிழ் எயிட் நிறுவனம் குழந்தைகளுக்கு மஞ்சள் காமாளை நோய்க்குச் சிகிச்சை அளிக்கும் மின்குமிழ் உபகரணங்களை யாழ்:போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் குழந்தை வைத்திய நிபுணர் எஸ்.கே.அருண்மொழி சர்வதேச லயன்ஸ் கழகத்தின் சுகாதாரத்திற்குப் பொறுப்பான முன்னாள் மாவட்ட இணைப்பாளர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜாவிடம் விடுத்த கோரிக்கையை அடுத்து கொழும்பு லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் யோசெப் இம்மனுவல் மேற்கொண்ட முயற்சியின்பயனாக மேற்படி கருவிகள் லண்டன் தமிழ் எயிட் நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-111)

## தென்மராட்சியில் அடிக்கடி மின்தடை இலத்திரனியல் சாதனங்கள் சேதம்


யாழ்ப்பாணம்,மே 10

சாவகச்சேரிப் பகுதியில் கடந்த ஒரு வாரமாக அடிக்கடி ஏற்படும் மின்தடையினால் பெருமளவு மின் சாதனங்கள் பழுதடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அடிக்கடி இடம்பெறும் மின் தடைகளினால் அரச அலுவலகங்கள், வங்கிகள் ஆகியவற்றில் பொதுமக்கள் தமது தேவைகளை நிறைவேற்றச் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் மின்தடையினால் கணணிகள் மற்றும் ரியூப் பல்ப்புகள் உட்பட்ட மின் சாதனங்கள் பழுதடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 06 * 08 * 1929



உதிர்வு 10 * 04 * 2010

### அமரர் செல்லையா பஞ்சலிங்கம்

மாதமொன்று போனதப்பா ஆறவில்லை எம் துயரம்
அவனியில் உன் அரவணைப்பின்றி
அல்லற்படுகின்றோம் அறியாயோ நீ
ஆண்டவன் பாதம் சேர்ந்த - உன்
ஆத்மா சாந்திபெறத் தினம் தினம் வேண்டுகின்றோம்

கடந்த 10.04.2010 அன்று சிவபதம் அடைந்த எம் குடும்ப விளக்கின் மரணச் செய்திகேட்டு உடன் இல்லம் வந்து ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையம் வைத்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (10.05.2010) திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கரந்தன்,
நீர்வேலி மேற்கு. (97992) குடும்பத்தினர்.


## உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத்

சீட்டிழுப்பு இலக்கம் 548

திகதி 2010/05/08

சுப்பர் இலக்கம் 11

வெல்லப்பட்ட இலக்கங்கள் 04 05 27 60

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 25,130,205.60 விகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 விகிதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 விகிதம் | 08 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 விகிதம் | 204 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 விகிதம் | 408 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 விகிதம் | 10,071 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 50.00 விகிதம் | 5,793 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 146,061 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 30.00 விகிதம் | 23,470 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 7,138,070.00
சுப்பர் பரிசு சொகுசு ஜீப் வண்டியுடன் மிகுதி தொகை பணமாக

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ 25,291,731.20

தேசிய லொத்தர் சபை



## எங்களின் வாடிக்கையாளர்களின் கவனத்துக்கு!

★ மென்பானம் தயாரிப்புப் பொருள்கள்
★ கேக் தயாரிக்கும் பொருள்கள்
★ பொலித்தீன், லஞ்ச் பொக்ஸ்
★ இந்தியன் ஊதுபத்தி வகைகள்
★ ஆயுர் வேத மூலிகைகள்
★ பாடசாலை உபகரணங்கள்
★ பான்சி குட்ஸ் வகைகள்
★ ஹொட்டல் மற்றும் சைனிஸ் ஹொட்டலுக்குரிய பொருள்கள் மற்றும் பல்வேறு வகையான அனைத்துப் பொருள்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

★ ஐஸ்கிறிம் தயாரிப்புப் பொருள்கள்
★ எமல்சன் வகைகள்
★ பிஸ்கட் வகைகள்
★ ஆயுர்வேத மருந்துகள்
★ றோயல் தயாரிப்புப்பொருள்கள்
★ சொக்லெட் வகைகள்
★ பேப்பர் சேவியற்
★ எசன்ஸ் வகைகள்
★ றொபி வகைகள்
★ சொப்பிங் பாக்
★ லைற் வகைகள்



(சி-567170)

சிவா நறுமணப் பூங்கா

இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: இல. 021 222 2567


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபாலிங்கம் வெற்றிக் கிண்ணத்தை இலகுவாக கைப்பற்றியது கொக்குவில் இந்துக் கல்லூரி!

வலி. வடக்கு, மே 10

'சபாலிங்கம்' வெற்றிக்கிண்ணத்தை இலகுவான வெற்றியின் மூலம் முதன் முறையாகக் கைப்பற்றியது கொக்குவில் இந்துக்கல்லூரி.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி- கொக்குவில் இந்துக்கல்லூரி அணிகளுக்கு இடையே இந்துக்களின் போரை அடுத்து நடைபெறும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடுவது எனத் தீர்மானித்தது.

யாழ்.இந்துவின் ஆரம்ப வீரர்களாக கிரிசோபன்-சஜீகன் ஜோடி களமிறங்கியது. யாழ்.இந்து 7 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது, இராகுலன் வீசிய பந்தை எதிர்கொண்ட கிரிசோபன் ஜனார்த்தனனிடம் பிடிகொடுத்து 5 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

இரண்டாவது விக்கெட்டுக்காகக் களமிறங்கிய டிலக்ஷன் 2 ஓட்டங்களை எடுத்திருந்தபோது பிரதீஸின் பந்தில் ஓட்டம் ஒன்றைப் பெறமுற்பட்டு' ரன் அவுட்' ஆனார்.

மூன்றாவது விக்கெட்டுக்காக சஜீகனுடன் ஜோடி சேர்ந்த பார்த்தீபன் 4 ஓட்டங்களுடன் கார்த்திக்கின் பந்தில் விக்கெட்டை இழக்க யாழ்.இந்து அணி 5 ஓவர்கள் நிறைவில் 18 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

சஜீகன் பொறுமையாக நின்று ஆட அவருடன் ஜோடி சேர்ந்தார் அணித் தலைவர் நிறோஜன். இருவரும் பொறுமையாக இணைந்து ஆட யாழ்.இந்துக் கல்லூரியின் ஓட்ட எண்ணிக்கை மெதுவாக உயர ஆரம்பித்தது.

19 ஆவது ஓவர்வரை இணைந்து ஆடிய இந்த ஜோடி இணைப்பாட்டமாக 36 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்நிலையில் 42 பந்துகளை சந்தித்து 16 ஓட்டங்களை பெற்றார். இந்நிலையில் மேலுமொரு ஓட்டத்தைப்பெற முயற்சித்தபோது பங்குஜனால் 'ரன் அவுட்' செய்யப்பட்டார்.

நிறோஜனுடன் ஜோடி சேர்ந்த ஜஸ்மினன் சாம்பவன் வீசிய பந்தில் ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் இழந்தார்.

அடுத்து செந்தூரன் களமிறங்க நிறோஜன் 58 பந்துக்களில் 16 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சாம்பவனின் பந்தில் பங்குஜனிடம் பிடிகொடுத்து ஆட்டம் இழந்தார்.

அடுத்து சஜீவன் களமிறங்க செந்தூரன் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து 8ஆவது விக்கெட்டுக்காக கஜீபராஜ் களமிறங்கினார். இந்நிலையில் யாழ். இந்துக் கல்லூரி 61 ஓட்டங்களைப்பெற்று 7 விக்கெட்டுக்களை இழந்து தவித்துக் கொண்டு இருந்தது.

கஜீபராஜ் 20 பந்துக்களில் 5 ஓட்டங்களை பெற்று ஜனுதாஸின் பந்தில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டம் இழந்தார். அடுத்துக் களமிறங்கிய பிரகாஸ் அதிரடியாக அடித்தாடினார். இவர் 7 பந்துகளில் ஒரு பௌண்டறி 3 சிக்ஸர்களை விளாசி 22 ஓட்டங்களைப் பெற்றார். இராகுலன் வீசிய பந்தை அடித்த பிரகாஸ் பவிந்தனிடம் பிடிகொடுத்து ஆட்டம் இழந்தார். இறுதி ஆட்டக்காரராகக் சிவேந்திரன் களமிறங்க சஜீவன் 15 பந்துகளில் 6 ஓட்டங்களைப் பெற்று பிரதீஸின் பந்தில் ஆதித்தனிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

சிவேந்திரன் ஒரு ஓட்டத்துடன் ஆட்டம் இழக்காது களத்தில் இருந்தார். யாழ். இந்துக் கல்லூரி 99 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் சார்பில் பந்துவீசிய இராகுலன் 5.1 ஓவர்களை வீசி 8 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டக்களையும் சாம்பவன் 10 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் பிரதீஸ் 36 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

100 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடியது கொக்குவில் இந்துக் கல்லூரி.

ஆரம்பத்துடுப்பாட்டக்காரர்களாக பங்குஜன்- ஆதித்தன் இணை களமிறங்கி வலுவான அடித்தளம் ஒன்றை இட்டது.

இந்த ஜோடி 7 ஓவர்களில் இணைப்பாட்டமாக 45 ஓட்டங்களைப் பெற்றது. இந்நிலையில் ஆதித்தன் 24 பந்துக்களை சந்தித்து 25 ஓட்டங்களைப் பெற்றபோது 'ரன் அவுட்' ஆனார்.

அடுத்து வந்த இராகுலன் நிதானமாக ஆட 30 பந்தக்களில் 19 ஓட்டங்களைப் பெற்ற பங்குஜன் செந்தூரனின் பந்தில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டம் இழந்தார்.

அடுத்து வந்த சாம்பவன் இராகுலனுடன் நிதானமாக இணைந்து ஆடினார். கொக்குவில் இந்துக் கல்லூரி 19:1 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்று சபாலிங்கம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றியது.


இறுதிவரை களத்தில் நின்ற இராகுலன் 38 பந்துகளில் 25 ஓட்டங்களையும் சாம்பவன் 28 பந்துகளில் 15 ஓட்டங்களையும் ஆட்டம் இழக்காது பெற்றனர்.

யாழ்.இந்துக் கல்லூரியின் செந்தூரன் 31 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

(6-86)










யாழ்.-கொக்குவில் இந்துக் கல்லூரிகள் மோதிய சபாலிங்கம் வெற்றிக்கிண்ண ஒருநாள் போட்டியின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ். நகரப் படைகளின் தளபதி மேஜர் நிஸங்க, வவுனியா மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.அச்சுதன், தொழில் அதிபர் ஈ.எஸ்.பி.நாகரட்ணம், யாழ். இந்துவின் அதிபர் வீ.கணேசராஜா, கொக்குவில் இந்துவின் அதிபர் ஏ.அகிலதாஸ் ஆகியோரை முதல் படத்தில் காணலாம்.

அணி வீரர்களுக்கு விருந்தினர்களும் கல்லூரிஅதிபர்களும் பரிசுகளை வழங்குவதையும், வெற்றிபெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரியின் அணித்தலைவர் நிறோஜன் விருந்தினர்களிடம் இருந்து வெற்றிக்கிண்ணத்தைப் பெறுவதையும் படங்களில் காண லாம்.

*(படங்கள் : நேசன், ரட்ணம்)*

## பெண்களுக்கான கிரிக்கெட் போட்டி; பருத்தித்துறை மெதடிஸ் சம்பியன்

வலி.வடக்கு,மே10

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் பெண்கள் அணிகளுக்கு இடையே முதல் தடவையாக நடைபெற்ற 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை யாழ்.மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாட சாலையும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் 10 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது.

உதயரூபினி ஆட்டமிழக்காது 20, கஜேந்தினி 15 ஓட்டங்களைப் பெற்றனர்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த ரம்யா 2 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் ஜானகி, மேனகா தலா 2 ஓவர்கள் பந்து வீசி முறையே 17,11 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

80 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை 8.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 81 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.சியாமி, ஜெயரூபினி முறையே 34,20 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தைச் சேர்ந்த தர்மினி, தர்சிகா தலா 2 ஓவர்கள் பந்து வீசி முறையே 8,15 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். (6-86)




## யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் உதைபந்தாட்டம் இறுதியாட்டத்தில் மோதும் அணிகள் தெரிவாகின

வலி வடக்கு, மே 10

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான 17,19 வயதுப்பிரிவு உதைபந்தாட்ட அணிகளுக்கான இறுதிப் போட்டி மற்றும் மூன்றாம் இடத்துக்கான போட்டிகளில் விளையாட பின்வரும் அணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

17வயதுப்பிரிவில் மூன்றாம் இடத்திற்கு விளையாட பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியும்-

இறுதிப் போட்டியில் விளையாட மானிப்பாய் இந்துக் கல்லூரி- இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரியும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

19 வயதுப் பிரிவில் மூன்றாம் இடத்திற்கு விளையாட யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும்-

இறுதிப் போட்டியில் விளையாட உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (6-86)

## காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் விளையாட்டு விழா

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தினரால் நடத்தப்படும் விளையாட்டு விழா நாளை மறுதினம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் மு.ப.8.30 மணியளவில் ஆரம்பமாகவிருக்கும் இந்த விழாவுக்கு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் தலைமை தாங்குவார். யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் பிரதம விருந்தினராகவும், வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை, யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ. எவ்.ஜே. ரூபசிங்கம், பதில் அதிபர் திருமதி யு.சிறீஸ்கந்தராசா, இலங்கை வங்கி முகாமையாளர் க.சிவகுமார், வர்த்தகர் இ.ஜெயராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (க)

## தென்மராட்சியில் கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம்,மே 10

தென்மராட்சிப் பிரதேச கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 23 ஆம் திகதி சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன.

522 ஆவது படையணியின் அனுசரணையுடன் நடாத்தப்படவுள்ள இச்சுற்றுப் போட்டிக்கு பிரதேச கிரிக்கெட் அணிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழக செயலாளரிடம் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (1-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருள்களின் விலைவாசியை அதிகரித்து மக்கள் மீது சுமைகளை ஏற்றவேண்டாம்!

## இப்படி அரசிடம் கோருகிறது ஜே.வி.பி.

கொழும்பு, மே 10

அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை அதிகரிப்பதன் மூலம் மக்கள் மீது சுமைகளைச் சுமத்த வேண்டாம் என அரசிடம் ஜே.வி.பி. கேட்டுக்கொண்டுள்ளது.

தேர்தல் காலங்களில் மக்களை ஏமாற்றும் அரசு தேர்தலுக்குப் பின்னர் அவர்கள் மீது பொருளாதார அழுத்தங்களைத் திணிப்பதாகவும் அக்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

சமையல் எரிவாயுவின் விலை அதிகரிப்பைக் கண்டித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே ஜே.வி.பி. இதனைத் தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

அரசு சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை ஆறாம் திகதி நள்ளிரவு முதல் முன்னெடுத்துள்ளது.

இதன்படி ஷெல்காஸின் விலை 219 ரூபாவாலும், லாவ் காஸின் விலை 323 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோரால் இந்த விலை அதிகரிப்பைத் தாங்க முடியாது என்பது தெளிவான விடயம்.

கடந்த மார்ச் மாதத்திலேயே இவ்வாறான விலை அதிகரிப்பு இடம்பெறுவதற்கான சூழ்நிலை காணப்பட்டது.

எனினும், பொதுத் தேர்தல் காரணமாக அரசு அதனைத் தவிர்த்துக்கொண்டது.

தேர்தல் வேளையில் மக்களை ஏமாற்றுவதற்குப் பல தந்திரோபாயங்களை அரசு மேற்கொண்டது.

எனினும் தற்போது அரசு மக்கள் மீது சுமைகளைத் திணிக்கின்றது

சில நாள்களுக்கு முன்னர் கோதுமை மாவின் விலையும், பாணின் விலையும் அதிகரித்தன. விரைவில் அரசு பால்மாவின் விலையையும் அதிகரிக்கவுள்ளது.

நாட்டில் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதாகத் தேர்தல் காலங்களில் மாயையொன்றைத் தோற்றுவித்த அரசு, தற்போது சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

அரசின் இந்த சமூக விரோத செயலை மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊடகவியலாளர் சொத்துகளை சமர்ப்பிக்கத் தேவையில்லை!

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

ஊடகவியலாளர்கள் தங்களின் சொத்துகள் மற்றும் பொறுப்புக்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்ற அவசியமில்லை - என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் தங்களின் சொத்துகள் மற்றும் பொறுப்புகளை சமர்ப்பிக்க வேண்டும் என்று தகவல் திணைக்களம் கடந்த மாதம் அறிவித்திருந்தது. இவ்வாறு ஊடகவியலாளர்கள் தங்களின் சொத்துகள் மற்றும் பொறுப்புகளைச் சமர்ப்பிக்கும் போது அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிகராகி விடுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், ஊடகவியலாளர்கள் சொத்துகள் மற்றும் பொறுப்புகளை சமர்ப்பிப்பத்தால் அது ஒரு சட்டரீதியான ஆவணமாக இருக்கும் என்றும் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

# யுத்தம் தொடர்பான உத்தேச விசாரணைக்குழு; ஆசிய மனித அமைப்பு அவதானத்துடன் வரவேற்கிறது

கொழும்பு, மே 10

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதித் தருணங்களில் சர்வதேச மரபுகள் மீறப்பட்டமை தொடர்பாக விசாரிப்பதற்காக அரசு ஆணைக்குழுவை நியமிக்கவுள்ளதாக வெளியான அறிவிப்பை அவதானத்துடன் வரவேற்றுள்ள ஆசிய மனித உரிமை ஆணைக்குழு, யுத்தத்தில் உறவுகளை இழந்தவர்கள் தமது துயரங்களை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை இந்த ஆணைக்குழு வழங்கும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

''ஜி.எஸ்.பி.' வரிச்சலுகையே இவ்வாறான அறிவிப்புக்கான காரணம். இந்த அறிவிப்புக் குறித்து அளவுக்கதிகமான நம்பிக்கை கொள்வதற்கான சூழ்நிலையும் தற்போது இல்லை'' என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆசிய மனித உரிமை ஆணைக்குழு இதுபற்றி மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதித் தருணங்களில் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுகள் மீறப்பட்டமை தொடர்பாகவும் இதற்கான காரணங்கள் என்ன, யார் பொறுப்பு என்பவற்றைக் கண்டறிவதற்காகவும் அரசு ஆணைக்குழுவொன்றை அமைக்கவுள்ளதாக வெளியான தகவல்களை ஆசிய மனித உரிமை ஆணைக்குழு அவதானத் துடன் வரவேற்கிறது.

இவ்வாறான ஆணைக்குழு குறித்த அறிவிப்புக்கான காரணம் 'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகையே என்பது வெளிப்படையான விடயம்.

இதேவேளை, இதுவரை காலமும் இதற்கு முரணான விதத்தில் கருத்து வெளியிட்டு வந்த அரசு, தற்போது இவ்வாறான அறிவிப்பை வெளியிட்டுள்ளமையை அங்கீகரிக்க வேண்டும்.

அரசால் உருவாக்கப்படவுள்ள ஆணைக்குழு எவ்வாறானதாக அமையும் என்பதைத் தற்போதே எதிர்வு கூறமுடியாது.

எனினும் இந்த வகையான நடவடிக்கையை எடுக்கவுள்ளதாக வெளியான அறிவிப்பு சாதகமாக நோக்கத்தக்கதாகும்.

தற்போதைய சூழ்நிலையில் இந்த நடவடிக்கை மற்றும் இதன் இறுதி முடிவு குறித்து அளவுக்கதிகமான நம்பிக்கை கொள்ள முடியாதுள்ளது.

நாட்டின் காயம்பட்ட சமூகத்திற்கு உண்மை மற்றும் நல்லிணக்கம் என்ற கருப்பொருள் மிக அவசியமானது; பொருத்தமானது.- எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தனது கடமையை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றவேளை...

# சரத் பொன்சேகா விவகாரம் குறித்து ஐரோப்பிய நாடாளுமன்றில் விவாதம்

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தகவல்

கொழும்பு,மே10

ஜெனரல் சரத் பொன்சேகா விவகாரம் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனயாக தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள அனுமதி மறுக்கப்பட்டமை குறித்து ஐரோப்பிய நாடாளுமன்றம் கவனம் செலுத்தி வருகிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வாரம் இந்த விடயம் குறித்து ஐரோப்பிய நாடாளுமன்றில் விவாதிக்கப்பட்டுள்ளதென அவர் தெரிவித்துள்ளார்.

ஜீ.எஸ்.பி சலுகைத் திட்டத்தை பெற்றுக் கொள்வது தொடர்பான மெய்யான அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியது இன்றியமையாததெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமை நிலைமைகள் குறித்தே ஐரோப்பிய ஒன்றியம் கூடுதலாக கவனம் செலுத்தி வருகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சபாநாயகருக்கு ஆலோசனை வழங்க சட்டத்தரணிகள் குழுவொன்றை நியமிக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் சட்ட விவகாரங்கள் தொடர்பில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிற்கு சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காக இந்தக் குழு உருவாக்கப்பட வேண்டுமென்றும், நாடாளுமன்றத்தின் எல்லா விடயங்களுக்கும் சட்ட மா அதிபரிடம் ஆலோசனைக் கோருவது முறையாகாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அமிதாப் இலங்கை வருவதை யாராலும் தடுக்க முடியாதாம்

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

கொழும்பு, மே 10

இலங்கையில் நடைபெறவுள்ள திரைப்பட விருது வழங்கும் விழாவிற்கு அமிதாப் பச்சன் குழுவினர் நிச்சயம் கலந்து கொள்வார்கள் என அரசு தெரிவித்துள்ளது.

இவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொள்வதில் எவ்வித சந்தேகமும் தேவையில்லை என பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

சர்வதேச இந்திய திரைப்பட அகடமியின் விருது வழங்கும் வைபவம் குறித்த ஊடகவியலாளர்கள் மாநாடொன்று சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்றது.

ஹிந்தி திரையுலகத்தினர் இந்நிகழ்வில் கலந்து கொள்வது குறித்து தமிழக திரையுலகத்தினரால் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருவதை சுட்டிக்காட்டி கேள்வி எழுப்பப்பட்ட வேளையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# 26 பேருடன் சென்ற படகு ஆஸி.பொலிஸாரால் மீட்பு

கொழும்பு, மே 10

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்ல முயன்ற இலங்கையர்களும் இருக்கலாம் என்ற நம்பப்படும் 26 சட்டவிரோத குடியேறிகளுடன் சென்ற படகை ஆஸ்திரேலிய கடலோர காவற்படையினர் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் மேற்கு ஆஸ்திரேலிய கரையோர பிரதேசத்தில் பயணித்து கொண்டிருந்த போதே கைதுசெய்யப்பட்டுள்ளனர். என ஆஸ்திரேலிய உள்துறை அமைச்சர் பிரன்டன் ஓ கோர்னர் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதக் குடியேறிகளை ஏற்றிச் சென்ற படகை அவதானித்த 'டாஸ் 8' ரக ரோந்து விமானம் கரையோரக் காவற்படையினருக்கு வழங்கிய தகவலையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சட்டவிரோத குடியேறிகள் அனைவரது அடையாளங்கள், எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் மற்றும் அவர்களது தேக ஆரோக்கிய நிலைகளை அறியும் நோக்கில் கிறிஸ்மஸ் தீவிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர் என கோர்னர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் மட்டும் சட்ட விரோதமாகக் குடியேற்ற வாசிகளை ஏற்றிச் சென்ற 51 படகுகளை ஆஸ்திரேலியக் காவற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

மேற்கு ஆஸ்திரேலிய கரையோர பிரதேசத்தில் சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டவர்களில் இலங்கையரும் இருக்கலாம் என ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது என ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# உயர்தர வகுப்பில் ஆங்கில மொழி மூலக் கற்கைக்கு 554 ஆசிரியர்களை நியமிக்க ஏற்பாடு

கொழும்பு, மே 10

ஜி.சீ.ஈ. (உயர்தர) தரத்தில் ஆங்கில மொழியில் கற்பிக்க 554 ஆசிரியர்களை சேர்த்துக்கொள்ள அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இந்த நியமனத்துக்கான விண்ணப்பங்கள் இன்று முதல் கோரப்படவிருப்பதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் குணவர்த்தன இது பற்றி அறிவித்தார்.

வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதும் 85 பாடசாலைகளில் உயர்தரம் ஆங்கிலத்தில் கற்பிக்கப்படுகிறது. ஆனால் ஆங்கில ஆசிரியர்கள் போதியளவு இல்லை என்று கூறுகின்றார்கள்.

இந்தக் குறையை நிவர்த்திக்கும் வகையில் 554 ஆங்கில ஆசிரியர்களை சேர்த்துக் கொள்ள முகாமைத்துவ திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது. தற்போது விஞ்ஞான பாடத்துக்கு மட்டுமே ஆங்கில ஆசிரியர்கள் உள்ளனர். வர்த்தகம், கலை, பிரிவுகளுக்குப் போதிய ஆசிரியர்கள் இல்லை. ஒரு பாடத்தினைக் கற்க குறைந்தது 20 மாணவர்களாவது இருந்தால் அந்தப் பாடசாலைக்கு ஆங்கில ஆசிரியர் பெற்றுக்கொடுக்கப்படுவர் என்றும் அமைச்சர் கூறினார்.

# இத்தாலியிலிருந்து நாடு திரும்பியவர் பாதாள உலகக் குழுவின் சூட்டில் பலி

கொழும்பு, மே 10

இத்தாலியில் நீண்ட காலம் பணியாற்றி நாடு திரும்பிய நபர் ஒருவர் பாதாள உலகக் குழுவின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

கொழும்பு வாழைத்தோட்டத்தைச் சேர்ந்த 41 வயதான அருணஜித் சுரம்யஸ்ரீ ராஜ பக்ஷ என்பவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டள்ளார் எனச் செய்தி வெளியாகியுள்ளது.

கொலையுண்ட நபர் கடந்த 17 ஆண்டுகளாக இத்தாலியில் பணியாற்றி வந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு சோண்டர்ஸ் பிளேஸ் முகந்திரம் வீதியில் வைத்து அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

பாதாள உலகக் குழு உறுப்பினர் ஒருவருடன் ஏற்பட்ட சிறு முறுகல் நிலைமையே இந்தப் படுகொலைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடைசி விருந்தாளி



பனி ததும்பும் புல் நுனிகளின் இடுக்கில் உனது பாடல் கம்பீரமாய் உட்கார்ந்திருக்கிறது.

புற்களுக்கிடையில் நகரும் உலர்ந்த பட்டுப்பூச்சிகள் அந்தப் பாடலால் கவரப்பட்டு அங்கும் இங்கும் இழுபடுகின்றன.

நீ... உயிரினங்களை ஈர்க்கும் காந்த சக்தியாய் எங்கும் நிலைபெற்றிருக்கிறாய்.

உனது உலை வானில் கொதிக்கிறது.

அனைத்து ஜீவராசிகளுக்கும் என நீ வானில் பொங்கலிடுகிறாய்!

உனது பொங்கலை உண்டு உயிர்கள் பசியாறுகின்றன.

நீ மட்டும் உயிர்கள் உண்ணும் உணவோடு உன் பசி தணிக்கிறாய்!

வண்ணத்துப்பூச்சியாய் சிரிக்கும் வானவில்லின் வர்ணங்களில் உனது ரேகையை அழுத்தி பதித்திருக்கிறாய்.

மழை ஈரத்தில் கூட கரைந்து போகாத வானவில்லைப் பார்த்துக் கானகம் களிப்புறுகிறது!

துளிர்களால் நிரம்பியிருக்கும் புதிய மரம், உனது காற்றால் தன்னை சுவாசித்துக்கொள்கிறது!

உன்னைப் பாடும் ஆவலில் மூங்கில்கள் ஒன்றோடு ஒன்று உராய்ந்து சப்தித்துக் கொள்கின்றன.

குளத்தில் தாமரை மிதந்து மிதந்து எழுகிறது. உனக்கென தரிசனம் தருவதற்காக.

நீ நிர்மலமாகவே தோற்றமளிக்கிறாய்!

கருணை கூர்ந்த உனது முகம், இறுகப் பூட்டிய கதவுகளை அடித்துத் திறக்கிறது.

நீ வந்து நிற்கிறாய் என் முன் ஒரு இரவலனாய்...

நான் உன்னை எதிர்பார்க்கவில்லை. இப்படி நீ என் முன் வந்து நிற்பாய் என்று.

அரிசி மணிகள் கேட்டு இரந்து நிற்கிறாய் நீ....

உள்ளே மூடைகளில் கட்டப்பட்ட அரிசி மணிகள் நான் போகிற போது மாயமாய் மறைந்து விடுகின்றன.

கடைசி அரிசி மணியை மேய்ந்து கொண்டிருக்கும் மயில் கொத்திக் கொண்டிருக்கிறது.

நான் திரும்பிப் பார்க்கிறேன்.

நீ இன்னமும் வாசலில் தான் நின்று கொண்டிருக்கிறாய்!

எங்கேனும் பத்திரப்படுத்திய அரிசி இருக்ககூடுமோ என நான் தேடிக் கொண்டிருக்கிறேன்.

நேர்த்திக்கென முடிந்து வைத்த சில்லறைக்காசு துணிமுடிப்பில் அகப்படுகின்றது. எடுத்து வருகின்றேன்.

உனது பிச்சைத் தட்டில் சில்லறைகள் இருக்கவில்லை.

அரிசி மணிகள் இருந்தன.

நான் எங்கு போவது இந்த மழை இருட்டில்.... அரிசி மணி வாங்குவதற்கு

மயில் தோகை விரிக்கிறது.

உதிர்ந்து விழுந்த ஒரு இறகை பொறுக்கி வருகிறேன். அதைக்கூட நீ வாங்கிக் கொள்ளவில்லை.

நான் ஒற்றைச் சில்லறையோடு உன் பின் அலைகிறேன்.

'' எனக்குப் பசிக்கிறது...''நீ சொல்கிறாய்.

சாப்பிடுவதற்குத் தர என்னிடம் என்ன இருக்கிறது....!

அந்த நாணயக் குற்றி கீழே விழுகிறது.

சப்தமின்றி விழுந்தது.

எடுத்துப் பார்த்த போது அரிசி மணியாகி இருந்தது.

ஓடிவந்து உன் தட்டை நிறைத்தேன்.

நீ புன்னகைத்தபடியே ஒரு பாடல் பாடினாய்.

ஆசீர்வாதங்களோடு அப்பால் போனாய்!

எனது வீட்டில் எதுவும் இல்லை.

வயிற்றுப் பசி நீ போன பின் கிளம்பியது.

இனிய நறும்புகை நாசியில் தொற்றியது.

உனது கவிதை காதில் ஒலித்துக் கொண்டிருந்தது.

தூரத்து மலைகளுக்கு அப்பால் நீ போய் கொண்டிருப்பது தெரிந்தது.


உனது நிழல் மட்டும் நீ போகப்போக பெரிதாகி விட்டது. அருகிலே வந்து தொட் டுப் பார்க்கையில் எதுவுமே இல்லையாகிப் போனது.

மலை முகட்டின் அடியில் சிவப்புச் சூரியன் ஒளிந்து கொண்டிருந்த போது நீ எனக் குள் ஐக்கியமாகிப் போயிருந்தாய்.

கடைசி விருந்தாளியாய் வந்த உனது மனதை திருப்திப்படுத்திய நிறைவோடு எனது வறுமை தீர்ந்துபோனது. *

*(நன்றி : கடவுளோடு பேசுதல்)*

# அமைச்சராவதற்கு என்ன தகுதி?



அப்போது அமெரிக்கக் குடியரசுத் தலைவராக ஆபிரகாம் லிங்கன் இருந்தார்.

தேர்தல் சமயத்தில் அவருக்கு உதவி செய்தவர்களுள் பெரும்பாலானோர் அவரை ஏதாவது பதவி கேட்டு நச்சரித்துக் கொண்டிந்தனர்.

அது பற்றிப் பொதுக்கூட்டத்தில் பேச நேர்ந்தபோது, ஆபிரகாம்லிங்கன் ஓர் உவமைக் கதையைக் கூறினார்.

ஒரு நாட்டு மன்னன் வேட்டையாடப் புறப்பட்டார். மன்னர் தம் அமைச்சரை அழைத்து,

''அமைச்சரே, இன்று நான் பரிவாரங்களுடன் வேட்டைக்குச் செல்லப் போகிறேன். மழை பெய்யுமா?'' என்று கேட்டார். அதற்கு அமைச்சர்,

''மன்னரே,இன்று கண்டிப்பாக மழை பெய்யாது.என் பேச்சை நம்பி நீங்கள் வேட்டைக்குச் செல்லலாம்'' என்றார். மன்னரும் அதை நம்பி வேட்டைக்குப் புறப்பட்டார்.

மன்னர் காட்டை நெருங்கிக் கொண்டிருந்த சமயம்,எதிரே குடியானவன் ஒருவன் கழுதை மீது அமர்ந்து வந்து கொண்டிருந்தான்.

''இன்று நிச்சயமாக மழை பெய்யும். உடனே நீங்கள் திரும்பி விடுங்கள்'' என்று பதிலளித்தான்.

அவனது பேச்சைப் பொருட்படுத்தாத மன்னன் வேட்டையாடச் சென்றார்.

சற்றுத் தூரம் சென்றதும் கடும் மழை பெய்தது. அதனால் மன்னர் முழுமையாக நனைந்து விட்டார்.

மன்னர், திரும்பி வரும் வழியில் அந்தக் குடியானவனை மீண்டும் சந்தித்தார்.

''மழை பெய்யும் என்று எப்படி அவ்வளவு உறுதியாகக் கூறினீர்கள்! என்று மன்னர் கேட்டார்.


அதற்குக் குடியானவன்,

''மழை பெய்யுமா, பெய்யாதா என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் என் கழுதைக்குத் தெரியும். கழுதை தன் காதுகளை முன்பக்கமாக நீட்டிக் கொண்டால் மழை பெய்யும் என்னும் உண்மையை நான் அறிந்து கொள்வேன் என்று பதிலளித்தான்.

அரண்மனைக்குத் திரும்பிய மன்னன், அமைச்சரை பதவியிலிருந்து விலக்கி விட்டு குடியானவனுடைய கழுதையை அமைச்சராக்கி விட்டார்.

இந்தக் கதையைச் சொல்லிக் கொண்டிருந்த ஆபிரகாம் லிங்கன், 'அதற்குப் பிறகு தான் மன்னனுக்கு பெரும் பிரச்சினை ஏற்பட்டது. ஊரிலுள்ள எல்லாக் கழுதைகளும் தங்களுக்கும் அமைச்சர் பதவி கொடுத்தாக வேண்டும் என்று நச்சரிக்கத் தொடங்கின' என்றார். *

# யாழ்.பஸ் பிரயாணி




(நன்றி : சிரித்திரன்)

# கடவுளிடம் எதையும் கேட்காதவருக்கு...?

ஒரு ராஜகுமாரி பதவியேற்றதும் மக்களுக்குப் பரிசுகளைக் கொடுக்க விரும்பினாள். யார் யார் என்னென்ன பரிசு கேட்டாலும் தரப்போவதாக அறிவித்தாள். வாடிக் கிடந்த பலர், அரண்மனை நோக்கி ஓடி வந்தார்கள். வரிசை நீண்டது. ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை யாசித்தார்கள்.

முத்துமாலை, வைர மோதிரம், வயிறு புடைக்க அன்னம், வகை வகையாகத் துணிமணிகள், பஞ்சம் பிழைக்க பசுக்கள், நிலபுலன்கள் என்று பட்டியல் நீண்டது. வரிசையில் வந்து பரிசை வாங்குவதை வேடிக்கை பார்த்தபடி நின்றான் ஒரு வாலிபன். இரண்டு கையேந்தி எல்லோரும் யாசகம் கேட்டபோது இரண்டு கைகளை மார்போடு கட்டிக் கம்பீரமாக நின்றபடி இந்த பரிசளிப்பை வேடிக்கை பார்த்தான்.

சளைக்காமல் பரிசு கொடுத்த இளவரசி, அந்த இளைஞனை உற்று நோக்கினாள். அவன் கம்பீரம் அவளைக் கவர்ந்தது. ஆனால் அவன் எதையும் தன்னிடம் யாசிக்கவில்லையே என்று மனம் குறுகுறுத்தது. காவலரை அழைத்து இளைஞனை அருகில் வரச்செய்து,'' என்ன பரிசு வேண்டும் கேள், தருகிறேன்'' என்றாள்.



புன்னகைத்தபடி இளைஞன் சொன்னான் ''மேன்மை தாங்கிய இளவரசியாரே உங்கள் கருணைக்கு என் நன்றிகள் பலப்பல. ஆனாலும் தங்கள் இடத்தில் நான் பெறுவதற்கு எதுவும் இல்லை. உங்கள் கருணையைக் கண்ணாரக் கண்டு மகிழ, உங்களை வாழ்த்த இங்கு வந்தேன், எதையும்பெற வரவில்லை''

இளவரசி அவனுக்கு முத்துமாலை, நாட்டின் ஒரு பகுதி, சேனைத் தலைமை இப்படி எத்தனையோ வழங்க முன் வந்தும் இளைஞன் கம்பீரமாக மறுத்துவிட் டான்.

அவனது கம்பீரம் இளவரசியைத் திகைக்க வைத்தது. யாரும் எதிர்பாராத படி பளிச்சென்று எழுந்து அவள் சொன்னாள்.'' என்னை மனைவியாக ஏற்றுக்கொள். உன்னைப் போன்ற ஒருவனைக் கணவனாக அடையவே நான் விரும்புகின்றேன்.'' என்று மாலையிட்டாள்.

இளவரசியிடம் யார் யார் எதை எதை எதிர்பார்த்தார்களோ, அதை அவர்களுக்குத் தந்தாள். எதையுமே எதிர்பாராதவனுக்குத் தன்னையே தந்தாள். பகவான் ராமகிருஷ்ணர் சொல்கிறார். ' கடவுளும் அப்படித்தான். நீங்கள் அவரிடம் எது கேட்டாலும் தருவார். எதையும் கேட்கவில்லை என்றால் தன்னையே தருவார்.''

சொன்னவர்: க.கி.சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடா, ஆஸி. உள்ளிட்ட நாடுகளுக்குச் செல்லும்

# ஈழத்தமிழருக்குப் பணம் வந்தமை குறித்து விசாரிக்க இன்ரர்போலை நாடுகிறது 'றோ'

தென்காசி, மே 10

ஈழத்திலிருந்து ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளுக்கு புகலிடம் கோரிச் செல்லும் தமிழர்களிடம் பெருமளவில் பணம் புழங்குவது குறித்து விசாரிக்க 'இன்ரர்போல' உதவியை இந்தியப் பொலிஸாரும், 'றோ' பிரிவினரும் நாடவுள்ளனர்.

கொல்லம் ரயில் நிலையம் அருகேயுள்ள தனியார் விடுதியில் தங்கியிருந்த 38 ஈழத் தமிழர்களை கடந்த வெள்ளியன்று நள்ளிரவு பொலிஸார் கைதுசெய்தனர். கொல்லம் பொலிஸ் கட்டுப்பாட்டு அறையில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பிடிபட்ட 38 பேரில் முல்லைத்தீவைச் சேர்ந்த முகவர் டென்னீசன் என்பவரை கேரள பொலிஸார் தனி இடத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர். விசாரணையில் முல்லைத்தீவு மற்றும் இலங்கையின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களை இவரும் (டென்னீசன்) மற்றும் சிவா என்பவரும் படகுகள் மூலம் அழைத்து வந்து கேரளா வழியாக கனடா, ஆஸ்திரேலியா, உள்ளிட்ட நாடுகளுக்கு கடல் மார்க்கமாக அனுப்பி வைப்பதும், அதற்காக ஒரு நபருக்கு ரூபா 2 லட்சம் முதல் 5 லட்சம்வரை கட்டணம் வசூலித்து வருவதும் தெரியவந்துள்ளது.

இதை ஒரு தொழிலாகவே டென்னீசனும், சிவாவும் செய்து வருகின்றனர். சிவாவைப் பிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது என பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது. தற்போது பிடிபட்டுள்ள 38 பேரும் கடந்த ஏப்ரல் 26 ஆம் திகதி கொச்சிக்கு அழைத்து வரப்பட்டு அங்கிருந்து கடந்த 5 ஆம் திகதி கொல்லம் அழைத்து வரப்பட்டு தங்க வைக்கப்பட்டனர் எனவும் தெரியவந்துள்ளது.

கேரள வழியாக இலங்கைத் தமிழர்களை அழைத்துச் செல்லும் நபர்கள் யார், எங்கிருந்து பணம் விநியோகம் செய்யப்படுகிறது என்பது உள்ளிட்ட பல்வேறு தகவல்களையும் டென்னீசனிடமிருந்து பொலிஸார் கேட்டு வருகின்றனர்.

பிடிபட்டுள்ள 38 பேரையும் தனியாக விசாரணை நடத்தஇந்தியப் பொலிஸாரும் 'றோ' பிரிவினரும் முடிவு செய்துள்ளனர். மேலும் இவர்களிடம் விசாரணை நடத்த டில்லியில் இருந்து உயர் அதிகாரிகள் கொல்லம் வருகின்றனர்.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்துக்கும் நடந்த சண்டையில் பொருளாதார ரீதியிலும் முல்லைத்தீவுத் தமிழர்கள் பெரும் பாதிப்பை சந்தித்த நிலையில், கனடா, ஆஸ்திரேலியா செல்ல லட்சக்கணக்கில் பணம் செலவழிக்க இவர்களிடம் பணம் எப்படி வந்தது, இவர்களுக்கு பண விநியோகம் செய்தவர்கள் யார், எங்கிருந்து பணம் வருகிறது என்பது குறித்து 'றோ' அமைப்புக்கு சந்தேகம் வந்துள்ளது.

இதற்கு விடை காணும் விதமாக இவர்களின் பிண்ணனி குறித்து விசாரிக்க இண்டர்போல் உதவியை நாடுவதற்கு 'றோ' முடிவுசெய்துள்ளது எனத் தெரியவரு கிறது.

இதற்கிடையே, கொல்லத்தில் கைது செய்யப்பட்ட முகவர் டென்னீசனை கொல்லம் மாவட்ட நீதிபதி முன்பு ஆஜர் படுத்தி அவரைப் பொலிஸ் காவலில் எடுத்து விசாரிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

## இந்தியச் செய்திகள்

# கேரளத்தில் கைதான 38 ஈழத் தமிழரை தமிழக அரசு பொறுப்பேற்க வேண்டும்

### நாம் தமிழர் இயக்கத் தலைவர் சீமான் கோரிக்கை



சென்னை, மே 10

கேரளத்தில் கைது செய்யப்பட்டுள்ள முப்பதுக்கும் மேற்பட்ட ஈழ அகதிகளை தமிழக அரசு பொறுப்பெடுக்க வேண்டும் - என்று 'நாம் தமிழர்' இயக்கத்தின் தலைவரும் இயக்குநருமான சீமான் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

ஈழ மக்களின் நிராதரவான நிலை ஆழ்ந்த துக்கத்தையும் கவலையையும் கண்ணீரையும் ஏற்படுத்தும் நிலையில் வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுவது போல கேரளத்தில் கடந்த வெள்ளியன்று முப்பத்துக்கும் மேற்பட்ட ஈழத் தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. அவர்களிடம் முறையான கடவுச்சீட்டு, விசா என்பன இருக்கின்றனவா என விசாரித்த கேரள பொலிஸார் வழக்கம்போல அவர்கள் விடுதலைப் புலிகளா என்று விசாரித்துக் கொண்டிருக்கிறார்களாம்.

நிராதரவான முறையில் உயிர் தப்பி ஓடும் ஈழ மக்களிடம் எப்படி கடவுச்சீட்டும், விசாவும் இருக்கும்?. நிற்கவோ - படுத்துறங்கவோ - உறவுகளோடு வாழவோ முடியாத நிலையில் - ஓடும் ஈழ அக்திகளின் துன்ப வாழ்வைப் புரிந்து கொள்ள வேண்டும். உடனடியாக தமிழக அரசு தலையிட்டு கேரளத்தில் கைதுசெய்யப்பட்டுள்ள ஈழ அதிகளை பொறுப்பெடுத்துக் கொள்ள வேண்டும்.

எக்காரணம் கொண்டும் அவர்களை இலங்கை அரசிடம் ஒப்படைத்து விடும் மனித நேயமற்ற செயலைச் செய்து விடக் கூடாது என்பதோடு, அபாயகரமான சூழலுக்குள் சிக்கிக் கொண்டிருக்கும் ஈழ மக்களின் துன்பங்களை தமிழக அரசு புரிந்து செயற்பட வேண்டும் - என்றுள்ளது.

## பிற்பட்ட மக்களை சினிமாதான் மேம்படுத்தியது என்கிறார் வாலி

ஆயிரக்கணக்கான பிற்பட்ட மக்களை சினிமா இல்லையெனில் மேம்படுத்தியிருக்க முடியாது - என்று கவிஞர் வாலி கூறினார்.

புதுச்சேரி கம்பன் விழாவில் அவர் கூறியவை வருமாறு -

சமுதாயத்தைத் தட்டி எழுப்பும் வசனங்களை சினிமாவில் அண்ணா, கருணாநிதி ஆகியோர் பயன்படுத்தினர். சினிமா இல்லையென்றால் ஆயிரக் கணக்கான பிற்பட்ட மக்கள் மேம்பட்டிருக்க முடியாது - என்றார்.

# முகாமிலுள்ள ஈழத் தமிழரை மத்திய அரசு காக்கத் தவறினால் போராட்டம் வெடிக்கும்

### கம்யூ. பாண்டியன் எச்சரிக்கை

அம்பாசமுத்திரம், மே 10

இலங்கை முகாமிலுள்ள தமிழர்களை காப்பாற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நடவடிக்கை எடுக்கத் தவறினால் தமிழகத்தில் போராட்டம் வெடிக்கும் - என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலர் தா.பாண்டியன் கூறினார்.

மேலும், டில்லியில் பத்திரிகையாளரை தாக்கினார் எனக் கூறப்படும் மத்திய அமைச்சர் ராசாவை பதவி நீக்கம் செய்ய வேண்டும் - என்றும் அவர் கூறினார்.

இதுகுறித்து அம்பாசமுத்திரத்தில் அளித்த பேட்டி வருமாறு -

டில்லியில் ஸ்பெக்ட்ரம் ஊழல் தொடர்பாக கேள்வி எழுப்பிய பத்திரிகையாளரை மத்திய அமைச்சர் ஆ.ராசா தாக்கினார் எனக் கூறப்படுகிறது. அது உண்மையானால் அவரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும்.

கண்ணியம் காக்கத் தவறிவிட்டார் என ராசாவை அமைச்சர் பதவியிலிருந்து கருணாநிதி விலகச் சொல்ல வேண்டும்.

இலங்கையில் எஞ்சியுள்ள தமிழர்கள் இன்னமும் சித்திரவதை முகாம்களில்தான் உள்ளனர். அங்குள்ள தமிழர்களை காப்பாற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நடவடிக்கை எடுக்கத் தவறினால் தமிழகத்திற்கு வரும் மத்திய அமைச்சர்களுக்கு எதிராக கூட்டணிக் கட்சிகளுடன் சேர்ந்து கண்டனப் போராட்டங்கள் நடத்தப்படும்.

தமிழக அரசியலில் மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்ற கேள்விக்கு பதிலளித்த தா.பாண்டியன், தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதும் கூட்டணியில் மாற்றம் ஏற்படும் - என்றார்.

# கொழும்பு நகரில் திரைப்பட விழாவா? கண்டித்துச் சென்னையில் ஆர்ப்பாட்டம்!

சென்னை, மே 10

ஜூன் மாதம் 3 முதல் 5ஆம் திகதிவரை இலங்கையில் நடத்தவுள்ள இந்திய சர்வதேச திரைப்படக் கழகத்தின் விருது வழங்கும் விழாவிற்கு எதிர்ப்புத் தெரிவித்து தகவல் தொழில்நுட்பத் துறையினர் சார்பில் சென்னையில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

சென்னை மெமோரியல் ஹோல் முன்பாக நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் திரைப்படக் கலைஞர்களும், தமிழ் இன உணர்வாளர்களும் கலந்து கொண்டனர்.

திரைப்பட பாடலாசிரியர் கவிஞர் தாமரை, இயக்குநர்கள் மணிவண்ணன், கௌதமன், ராம், இயக்குனர் வெற்றி மாறன், தோழர் தியாகு, தோழர் விடுதலை இராசேந்திரன், பேராசிரியர் அறிவரசன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

இந்தியத் திரையுலகே! தமிழினப் படுகொலையை மூடி மறைக்கும் இலங்கை அரசின் கைப்பாவைகளா நீங்கள்?

இந்திய தொழில் முதலாளிகளே! தமிழர் நிலங்களைச் சூறையாட கொலைக்கார ராஜபக்ஷவோடு கூட்டணியா?

வியாபார வெறிக்குமுன் மனித உரிமைகள், நீதி, எங்கள் கண்ணீர் எல் லாம் மலிவானதா என்று கண்டன் கோஷம் எழுப்பினர்.

# சத்தீஷ்காரில் நக்ஸல் தாக்குதல்; 8 பொலிஸார் உடல் சிதறிப் பலி!

### கண்ணிவெடியில் சிக்கி நொருங்கியது வாகனம்

ராய்ப்பூர், மே 10

சத்தீஷ்கார் மாநிலத்தில் நக்ஸலைட்டுகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் மத்திய ரிசர்வ் படைப் பொலிஸார் 8 பேர் பலியானார்கள். மேலும் 10 பேர் படுகாயம் அடைந்தனர்.





சத்தீஷ்கார் மாநிலம் தந்தேவாடா மாவட்டத்தில் உள்ள முர்கானா வனப்பகுதியில் கடந்த ஏப்ரல் 6ஆம் திகதி நக்ஸலைட்டுகள் நடத்திய தாக்குதலில் மத்திய ரிசர்வ் படைப் பொலிஸார் 76 பேர் பலியானார்கள்.

இந்தச் சம்பவம் இந்தியா முழுவதும் பெரும் அதிர்ச்சி அலை களை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், சத்தீஷ்காரில் நேற்று முன்தினம் மீண்டும் நக்ஸலைட்டுகள் தாக்குதல் நடத்தினார்கள்.

இந்தச் சம்பவம் அங்குள்ள பிஜப்பூர் மாவட்டத்தில் நடந்தது. பசகுடா ஆவப்பள்ளி என்ற இடத்தில் இருந்து மத்திய ரிசர்வ் படை பொலிஸார் குண்டு துளைக்காத கவச வாகனத்தில் பிஜப் பூர் நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

பிஜப்பூரில் இருந்து 14 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பெடகொடேபால் என்ற கிராமத்தின் அருகே சென்றபோது நக்ஸலைட்டுகள் புதைத்து வைத்திருந்த சக்தி வாய்ந்த கண்ணிவெடி வெடித்ததில் பொலிஸார் சென்ற வாகனம் நொறுங்கியது. அப்போது அங்கு மறைந்திருந்த நக்ஸலைட்டுகள் துப்பாக்கியாலும் சுட்டனர்.

இந்தத் திடீர்த் தாக்குதலில், 8 மத்திய ரிசர்வ் படைப் பொலிஸார் பலியானார்கள். மேலும் 10 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் ஜக்தால்பூர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நக்ஸலைட்டுகள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதியில் எந்த வாகனத்திலும் செல்ல வேண்டாம் என்ற அறிவுறுத்தலை மீறி பாதுகாப்புப் படையினர் சென்றனர் எனத் தெரிகிறது என்று சத் தீஷ்கார் மாநில உள்துறை அமைச்சர் நங்கிராம் கன்வார் கூறினார்.

# தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் தூக்குக் கைதி முருகனின் கவிதை

சென்னை, மே 10

ராஜீவ் கொலைக்குற்றவாளி முருகன் உள்ளிட்ட 20 சிறைக்கைதிகள் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டுக்குக் கவிதை எழுதுகின்றனர்.

கோவையில் உலகத்தமிழ் செம்மொழி மாநாடு ஜூன் மாதம் நடக்கிறது. தமிழ் அறிஞர்கள், வெளிநாடு வாழ் தமிழர்கள், அரசியல் கட்சித்தலைவர்கள் கலந்து கொள்கின்றனர். பல்வேறு தரப்பினர் தங்கள் தமிழ்ப் படைப்புக்களை மாநாட்டில் சமர்ப்பிக்கின்றனர். நல்ல படைப்புக்களுக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளது.

இப்போட்டிகளில் சிறைக்கைதிகள் கலந்து கொள்ளலாம் என்று தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. வரும் 15, 16ஆம் திகதி கைதிகளுக்கான போட்டிகள் நடக்கின்றன. அவற்றில் சிறந்த படைப் புகள் செம்மொழி மாநாட்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இந்த போட்டியில் வேலூர் மத்திய ஆண்கள் சிறையில் இருந்து 20 கைதிகள் கலந்து கொள்கின்றனர். முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண் டனை விதிக்கப்பட்டு, சிறையில் இருக் கும் முருகனும் போட்டியில் கலந்து கொள் கிறார்.

இது குறித்து வேலூர் ஆண்கள் ம ய சிறைக் கண்காணிப்பாளர் சேகர் கூறும் போது, போட்டிகள் சிறைக்குள்ளேயே நடக்கின்றன. கைதிகள் எழுதும் படைப் புகள் சிறைத்துறை கூடுதல் டி.ஜி.பி. அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப் படும். அங்கு சிறந்த படைப்புகள் தேர்வு செய்யப்பட்டு, மாநாட்டுக்கு அனுப்பி வைக்கப்படும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள பாப்பரசர் 16ஆம் பெனடிக்ற்றின் இலங்கைக்கான பிரதிநிதி பேராயர் ஜோசப் ஸ்பிற்றேரி ஆண்டகையின் திருப்பலியும் வரவேற்பு நிகழ்வும் நேற்று யாழ்.மரியன்னை பேராலயத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் பேராயர் ஜோசப் ஸ்பிற்றேரி ஆண்டகை, யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், யாழ்.மாவட்ட குரு முதல்வர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆகியோர் அழைத்து வரப்படுவதை முதற்படத்திலும், வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்ட வண.பிதாக்களை இரண்டாவது படத்திலும், பாப்பரசரின் பிரதிநிதிக்கு ஆராத்தி எடுத்துக் கௌரவிப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுவதை நான்காவது படத்திலும், பேராயர் ஜோசப் ஸ்பிற்றேரி ஆண்டகை உரைநிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் இறுதி இருபடங்களிலும் காணலாம்.

(படங்கள்: உமா)

# அரசின் 78 முக்கிய நிறுவனங்கள் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில்!

கொழும்பு, மே 10

அரசுக்குச் சொந்தமான 78 முக்கிய நிறுவனங்களை சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கு வழங்காமல் ஜனாதிபதி தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளார் என்று ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது.

பத்தரமுல்லையில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய கட்சியின் எம்.பியான அநுரகுமார திஸாநாயக்கவே இவ்வாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அமைச்சர்களின் எண்ணிக்கை 35 ஆக மட்டுப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் காலத்தில் கூறினார். இப்போது அமைச்சுகளின் எண்ணிக்கை 35 இல் இருந்து 38வரை மட்டுப்படுத்தப்படும் என்று சொல்கிறார். இருப்பினும், அமைச்சரவை நியமிக்கப்பட்டதன் பின்பு இன்னும் பல அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சர்களின் நியமனம் இன்னும் தொடர்கிறது. இது இத்தோடு நிறைவடைந்துவிட்டது என்று ஜனாதிபதியால் கூறமுடியுமா?

ஜனாதிபதி முக்கியமான அமைச்சுக்கள் பலவற்றைத் தனக்குக் கீழ் வைத்துள்ளார். அதேபோல், பல அமைச்சுகளின் கீழ் வரவேண்டிய 78 நிறுவனங்களை ஜனாதிபதியே வைத்துள்ளார்.

தற்போது நியமிக்கப்பட்டிருக்கும் அமைச்சர்களுள் அதிகமானவர்கள் பழைய அமைச்சர்கள்தான். அமைச்சுப் பதவிகள் மாத்திரம் மாற்றி மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு அமைச்சுப் பதவியையும் பொறுப்பேற்றிருக்கும் அமைச்சர்கள் அந்தந்த அமைச்சில் ஊழல், மோசடிகள் இடம்பெற்றிருக்கின்றன என்று கூறுகின்றனர்.

கல்வி அமைச்சைப் பொறுப்பேற்ற பந்துல குணவர்தன அந்த அமைச்சில் ஊழல், மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்கிறார். அதேபோல், அமைச்சர்கள் சுசில் பிரேம ஜயந்த, மைத்திரிபால சிறிசேன ஆகியோரும் அவர்கள் பொறுப்பேற்றிருக்கும் அமைச்சுகளில் மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்று கூறியுள்ளனர். அப்படியாயின் அந்த அமைச்சுப் பதவிகளை வகித்தவர்கள் இந்த அரசில் உள்ளவர்கள்தானே? இந்த அரசு ஊழல்,மோசடிமிக்கது என்பதை அமைச்சர்களே சொல்லாமல் சொல்கின்றனர். - என்றார். (அ-சி)

## கொம்பனி வீதி மக்களின் வீடுகளை இடித்த


# நகர அபிவிருத்தி அதிகார சபை மீது நடவடிக்கை எடுக்க ஐ.தே.க. முடிவு

கொழும்பு, மே 10

கொழும்பு, கொம்பனி வீதியில் அமைந்திருந்த வீடுகளை இடித்து அகற்றியமை தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் எம்.பியான சுஜீவ சேரசிங்க கூறியவை வருமாறு:-

கொம்பனி வீதியில் அமைந்திருந்த வீடுகளை இடித்துத் தள்ளியமையானது ஒரு சட்ட விரோத நடவடிக்கையாகும். அந்த வீடுகள் சட்ட ரீதியாக அமைக்கப்பட்டவை என்பதை நிரூபிக்கும் ஆவணங்கள் அந்த வீட்டு உரிமையாளர்களிடம் உள்ளன. 1986 முதல் 1987 வரையிலான காலப்பகுதியில்



அந்த ஆவணங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்த நிலையில் அம்மக்களின் வீடுகள் அகற்றப்பட்டமைக்கு நாம் எமது கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்தச் சட்டவிரோத செயற்பாட்டை மேற்கொண்ட நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு எதிராக நாம் சட்ட நடவடிக்கை எடுக்கப்போகிறோம்.

இடிக்கப்பட்ட வீடுகளுக்கு சட்டப்படியான ஆவணங்கள் உள்ளதோடு, அந்த வீடுகளில் வாழ்ந்த மக்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் உள்ளன. இந்த வீடுகளை அகற்ற நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டிருக்கவுமில்லை.

கொம்பனி வீதியில் மேலும் வீடுகள் அகற்றப்படுவதைத் தடுப்பதற்காக நீதிமன்றில் இடைக்காலத் தடை உத்தரவு பெற நான் தீர்மானித்துள்ளேன். அதேபோல், பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடியாக நிவாரணமும் வழங்கப்பட வேண்டும். - என்றார். (சி)

# வாகனங்களின் முன்புறம் கறுப்புக் கண்ணாடிக்குத் தடை

கொழும்பு, மே 10

வாகனங்களின் முன்புறம் கறுப்புநிறக் கண்ணாடிகளைப் பொருத்துவதற்குத் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது. இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்று பாதுகாப்பு அமைச்சினால் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் புதிய நடைமுறை குறித்து வாகனங்களின் உரிமையாளர்கள் மற்றும் சாரதிகளுக்கு தெரியப்படுத்துமாறு அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

# நாடெங்கும் மின்னல் தாக்கி 2 மாதங்களில் 17 பேர் பலி

கொழும்பு, மே 10

கடந்த இரு மாதங்களுக்குள் மின்னல் தாக்கியதன் காரணமாக நாடு முழுவதிலும் 17பேர் பலியாகியுள்ளனர் என காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. இதேவேளை, எதிர்வரும் நாள்களிலும் மின்னல் தாக்கம் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மின்னல் தாக்குதலுக்கு உள்ளாகி நான்குபேர் பலியாகியுள்ளனர். அதிக மழைபெய்யும் நேரங்களில் மின்னல் தாக்கம் குறித்து அவதானமாக செயற்படும்படி வானிலை அவதான நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது. (சி)

# கொம்பனி வீதி வீடுகள் இடிப்பு; சட்டபூர்வ நடவடிக்கையாம்

கொழும்பு, மே 10

கொம்பனித்தெரு மலே வீதியில் குடியிருந்த மக்களை அகற்றியமை சட்டரீதியான, நியாயமான செயல் என தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெளிவுபடுத்தியுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மலேவீதியில் உள்ள பாதுகாப்பு பயிற்சி நிலையத்துக்கு அண்மையில் இருந்த வெற்றுக் காணியில் சிலர் அத்துமீறி கட்டடங்களைக் கட்டியிருந்தனர். இது சட்டவிரோதமானது. எனவே இக்கட்டடங்களை அகற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கை நியாயமானதாகும்.

சட்டவிரோதமான முறையில் இவர்கள் குடியிருந்தபோதிலும் இவர்களுக்கு மாற்றிடங்களையும், நஷ்ட ஈட்டையும் வழங்க அரசு முன்வந்துள்ளது.

பாதுகாப்பு பயிற்சி நிலையத்தின் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மாணவர்களின் [illegible] அவசியம். - இப்படி ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்சர்வேடிவ் கட்சி ஆட்சி அமைக்க ஆதரவு லிபரல் ஜனநாயகக் கட்சித் தலைவர் அறிவிப்பு

லண்டன், மே 10

பிரிட்டனில் கன்சர்வேடிவ் கட்சி ஆட்சி அமைக்க ஆதரவு கொடுத்து ஆட்சியில் பங்கேற்போம் என்று லிபரல் ஜனநாயகக் கட்சி தலைவர் நிக் கிளெக் அறிவித்திருக்கிறார். இதற்காக அவர் தன் கட்சியின் மூத்த தலைவர்களிடம் ஆதரவு கேட்டுள்ளார்.

பிரிட்டனில் சமீபத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இதுவரை ஆளும் கட்சியாக இருந்த தொழிற்கட்சி தோல்வியடைந்தது. மொத்தம் உள்ள 650 தொகுதிகளில் தேர்தல் தள்ளி வைக்கப்பட்ட ஒரு தொகுதி தவிர எஞ்சியுள்ள 649 தொகுதிகளில் தொழிற்கட்சி 258 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது.

கன்சர்வேடிவ் கட்சி 306 இடங்களில் வெற்றி பெற்றது. 3 ஆவது பெரிய கட்சியான லிபரல் ஜனநாயகக் கட்சி 57 இடங்களில் வெற்றிபெற்றது. இது தவிர, ஸ்கொட்டிஷ் தேசியக் கட்சி 6 இடங்களிலும், மற்ற கட்சிகள் 23 இடங்களிலும் வெற்றி பெற்றன.

எந்த ஒரு கட்சிக்கும் அறுதி பெரும்பான்மை கிடைக்காத நிலையில், கூட்டணி ஆட்சிதான் அமைக்க முடியும். நாடாளுமன்றத்தில் பெரிய கட்சியான கன்சர்வேடிவ் கட்சி, 3 ஆவது பெரிய கட்சியான லிபரல் ஜனநாயகக் கட்சியுடன் கூட்டணி அமைத்து ஆட்சி நடத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், லிபரல் ஜனநாயகக் கட்சி கன்சர்வேடிவ் கட்சிக்கு ஆதரவு அளிக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

லிபரல் ஜனநாயகக் கட்சி எடுக்கப்போகும் முடிவை பொறுத்துதான் கூட்டணி ஆட்சி அமையும். இதனால்தான் தொழிற்கட்சித் தலைவரும் பிரதமருமான கோர்டன் பிறவுண் கூறுகையில், ''நிக் கிளெக் கன்சர்வேடிவ் கட்சியுடன் பேச்சு நடத்தட்டும். அதில் முடிவு எதுவும் ஏற்படாவிட்டால் நாங்கள் அவருடன் பேச்சு நடத்தத் தயாராக இருக்கிறோம்'' என்று தெரிவித்துள்ளார்.

கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் டேவிட் காமரூன் கூட்டணி அமைக்க லிபரல் கட்சி முன்வரவேண்டும் என்று வேண்டுகோள்விடுத்திருந்தார். இதை ஏற்றுக்கொள்வது போல, லிபரல் கட்சித் தலைவர் நிக் கிளெக் கும் கன்சர்வேடிவ் கட்சி ஆட்சி அமைக்க ஆதரவு அளிப்பது என்று தீர்மானித்திருக்கிறார். அதற்கு தன் கட்சியின் மூத்த தலைவர்கள் ஆதரவு தருவார்கள் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

இந்த இரு கட்சிகளும் கூட்டணி அமைக்க முன்வந்தபோதிலும் அந்த கட்சிகளுக்கு இடையிலுள்ள கொள்கை வேறுபாடுகள் தடைக்கல்லாக இருக்கின்றன.

லிபரல் கட்சி, தேர்தல் நடைமுறையில் சீர்திருத்தம் கொண்டுவரவேண்டும் என்று கோரி வருகிறது. வாக்கு சதவீதத்துக்கேற்ப பிரதிநிதித்துவம் தரப்படவேண்டும் என்றும் கோரி வருகிறது.

அடுத்தது பட்ஜெட் பற்றாக்குறையை குறைக்க நடவடிக்கை வேண்டும் என்பதில் கன்சர்வேடிவ் கட்சி உறுதியாக உள்ளது. ஆனால், பொருளாதாரப் பின்னடைவில் இருந்து மீண்டுவரும் நிலையில் இந்த நடவடிக்கை பொருளாதாரத்தைப் பாதிக்கும் என்று லிபரல் கட்சி எச்சரித்துள்ளது.

குடியேற்றம், ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டனின் பங்கு போன்றவற்றிலும் இருதரப்பினருக்குமிடையே கருத்து வேறுபாடு இருக்கிறது. கட்சித் தலைமை கூட்டணிக்கு ஒப்புக்கொண்டாலும் மற்ற எம்.பிக்கள் கொள்கைகளில் சமரசம் செய்து கொள்ள முன்வர வேண்டும்.

## தஜிகிஸ்தானில் வெள்ளம் நிலச்சரிவு! 16 பேர் மரணம்!!

மாஸ்கோ, மே 10

தஜிகிஸ்தானில் பெய்த பலத்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு ஆகியவற்றின் அனர்த்தங்களுக்கு 16 பேர் பலியாயினர்; 40 பேர் காயமடைந்தனர். பழைய சோவியத் ஒன்றியத்திலிருந்த தஜிகிஸ்தான் தற்போது தனி நாடாக உள்ளது.

இங்கு, கடந்த சில நாள்களாக பலத்த மழை பெய்தது. தஜிகிஸ்தானின் தெற்கு மாகாணம் முழுவதும் வெள்ளப்பெருக்கும், கடும் நிலச்சரிவுகளும் ஏற்பட்டன. இவற்றில் சிக்கி 16 பேர் பலியாயினர்; 40 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

1,500 இற்கும் மேற்பட்ட வீடுகள் நிலச்சரிவுகளாலும், வெள்ளப் பெருக்காலும் முழுமையாக சேதமடைந்தன. 2,500 ஹெக்டர் பரப்பிலான விவசாயமும் சேதமடைந்தது.

பல இடங்களுக்கான சாலைப் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்ற தஜிகிஸ்தான் ஜனாதிபதி இமோமலி ரக்மோன், அங்குள்ள மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார்.

## நேபாள மாவோயிஸ்ட் கிளர்ச்சி வாபஸ் அமெ. உட்படப் பல நாடுகள் வரவேற்பு

காத்மாண்டு, மே 10

நேபாளத்தில் சனிக்கிழமை சகஜ நிலைமை திரும்பியது. மாவோயிஸ்ட்கள் தங்களுடைய 6 நாள்கள் வேலைநிறுத்தக் கிளர்ச்சியை நிறுத்தியதால் இது சாத்தியமானது.

கடைவீதிகளில் எல்லா கடைகளும், வர்த்தக நிறுவனங்களும் திறந்திருந்தன. சாலைகளில் எல்லா வாகனங்களும் ஓடத் தொடங்கியதால் போக்குவரத்தும் தடையின்றி நடைபெற்றது.

வீதிகளிலும் வீடுகளிலும் ஒருவித நிம்மதி ஏற்பட்டது. மக்கள் மன இறுக்கம் தளர்ந்து தத்தமது வேலைகளில் ஈடுபட்டனர்.

அரசியல் கட்சிகளின் தலைவர்களும் மாவோயிஸ்ட்களின் இந்த முடிவை வரவேற்றனர். இந்தியா உள்ளிட்ட நாடுகள் தந்த ராஜீயத்துறை நெருக்கடிகளாலும், கிளர்ச்சிக்கு எதிராக நேபாள மக்கள் அணி திரள ஆரம்பித்ததாலும் மாவோயிஸ்ட்கள் கிளர்ச்சியைத் தளர்த்தியுள்ளனர்.

மாவோயிஸ்ட்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டதை அமெரிக்கா, ஸ்வீடன், நோர்வே, சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளின் தூதர்களும் வரவேற்றுள்ளனர்.

வேலைநிறுத்தக் கிளர்ச்சியை மட்டும் கைவிடுகிறோம், எங்களுடைய கோரிக்கைகள் நிறைவேறும்வரையில் போராட்டத்தைக் கைவிட மாட்டோம் என்று மாவோயிஸ்ட்கள் அறிவித்துள்ளனர்.

''இப்போதுள்ள அரசு கலைக்கப்பட வேண்டும். பிரதமர் பதவி விலகவேண்டும், புதிய அரசியல் சட்டம் எழுதப்பட வேண்டும். புதிய அரசு பதவிக்கு வர வேண்டும். அதில் மாவோயிஸ்ட்களுக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும். நேபாள மன்னராட்சிக்கு எதிராக ஆயுதம் எடுத்துப் போராடிய மாவோயிஸ்ட் தொண்டர்களை அப்படியே நேபாள இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டும்'' என்றும் அவர்கள் கோரியுள்ளார்கள்.

''இந்தியா உள்ளிட்ட நாடுகளுடனான உறவில் கட்டுப்பாடு வேண்டும். சீனத்துடன் நெருங்கிய உறவு வைக்கவேண்டும். மன்னராட்சியை நீக்கியதல்லாமல் மன்னரைப்பற்றிய கண்ணோட்டத்தையும் அடியோடு மாற்றிக்கொள்ளவேண்டும். இந்தியாவின் தொழில், வர்த்தக முதலீடுகளுக்குக் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும். இந்தியாவின் ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்'' என்றும் மாவோயிஸ்ட்கள் கோரிக்கைகள் சமர்ப்பித்துள்ளார்கள்.

நேபாளத்துக்கான இந்தியத் தூதர் மாவோயிஸ்ட்களின் தலைவரைச் சந்தித்துப் பேசும்போது கிளர்ச்சியை நிறுத்தாவிட்டால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரும் என்று எச்சரித்ததன் பிறகே மாவோயிஸ்ட்கள் அடங்கியுள்ளனர் என சில வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## 2 அமைதிப்படை சிப்பாய்கள் சூடானில் சுட்டுக் கொலை

கார்ட்டூம், மே 10

சூடானின் டாபூர் பிராந்தியத்தில் அமைதிப் படையைச் சேர்ந்த இரு எகிப்திய சிப்பாய்கள் துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என ஐ.நா. ஆபிரிக்க ஒன்றிய கூட்டு அமைதிப்படை தெரிவித்துள்ளது.

தென் டாபூரில் எட் அல்-பார்சன் என்னுமிடத்தில் அமைதிப் படையைச் சேர்ந்த எகிப்திய சிப்பாய்களை இலக்கு வைத்து துப்பாக்கிதாரிகள் பதுங்கியிருந்தவாறு துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர் என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

இத்துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இருவர் பலியாகியுள்ளனர். மூவர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் பின்னர் கூட்டுப் படைகளின் வைத்தியசாலைக்கு ஹெலிக்கொப்டர் மூலமாகக் கொண்டு செல்லப்பட்டார்கள் என்றும் அது விவரித்தது.

இத்தாக்குதலுக்கு இதுவரை எந்தவொரு தீவிரவாத அமைப்பும் உரிமை கோரவில்லை. டாபூரில் 2008 ஆம் ஆண்டு முதல் இதுவரை, இருபதுக்கு மேற்பட்ட அமைதிப்படை சிப்பாய்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

சூடானின் டாபூர் பிராந்தியத்தில் மூண்டுவந்துள்ள உள்நாட்டுக் கலவரங்களில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர். 30 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக முகாம்களில் தஞ்சமடைந்துள்ளார்கள்.

## உலக அரங்கில்

## இந்தோனேஷியாவில் உக்கிர பூகம்பம்: அரசு ஆழிப்பேரலை எச்சரிக்கை!

ஜகர்த்தா, மே 10

இந்தோனேஷிய சுமத்ரா தீவை உக்கிர பூகம்பம் தாக்கியதை அடுத்து, ஆழிப் பேரலை எச்சரிக்கை விடுக்கப்பட்டது. சுமத்ராவிலிருந்து 140 மைல் தொலைவில் அமைந்துள்ள பாண்டே அசேயை நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்த பூகம்பம் தாக்கியது.

இதில் அநேக வீடுகள் சேதமடைந்துள்ளன. இதர விவரங்கள் உடனடியாக வெளியாகவில்லை என ஏ.பி. செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இந்த பூகம்பத்தின் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 7.4 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது. இதனால் பேரழிவுக்கான ஆழிப் பேரலைகள் உருவாக வாய்ப்பில்லை. எனினும், உள்ளூர் கரைப் பிராந்தியங்களை நூறு கிலோ மீற்றருக்கு மேல் தாக்கக்கூடிய பேரலைகள் உருவாகக்கூடும் என அமெரிக்க பூகம்பவியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

மாகாண தலைநகரான பாண்டே அசாவின் தென்கிழக்கே கரைக்கப்பால் 214 கிலோ மீற்றர் (133 மைல்) தொலைவில் 61.4 கிலோ மீற்றர் ஆழத்தில் இது மையங்கொண்டிருந்தது என்றும் இந்த ஆய்வு மையம் குறிப்பிட்டது.

2004 ஆம் ஆண்டு 9.2 புள்ளிகள் வீச்சில் உக்கிர பூகம்பம் ஏற்பட்ட பகுதிக்கருகிலேயே இப்பகுதியும் அமைந்துள்ளது. முன்னைய பூகம்பத்தால் ஏற்பட்ட ஆழிப் பேரலை அனர்த்தங்களால் இந்து சமுத்திர பிராந்திய நாடுகளில் 2,20,000 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தங்களுக்கு தென்மேற்கு மெல்லாபோத் மாவட்டமும், அசேயின் இதர பகுதிகளும் பேரழிவுகளுக்குள்ளாயின. இதில் அசேயில் மாத்திரம் ஏறத்தாழ 1,70,000 மக்கள் பலியாகியுள்ளார்கள்.

## ஆங் சாங் சூகியைச் சந்திக்க அமெரிக்கக் குழுவுக்கு அனுமதி



யாங்கூன், மே 10

மியான்மாரில் ஜனநாயகம் அமைய போராடிவரும் ஆங் சாங் சூகியைச் சந்திக்க அமெரிக்க தூதுக்குழுவுக்கு அனுமதி அளிக்கப்படும் என மியான்மார் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தெற்காசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்துக்கான அமெரிக்க வெளியுறவுத் துணை அமைச்சர் கர்ட் கேம்பல் தலைமையிலான குழு இந்த வாரத்தில் மியான்மாரில் 3 நாட்கள் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இன்று திங்கட்கிழமை, கரட் கேம்பலுக்கு சூகியைச் சந்திக்க அனுமதி அளிக்கப்படலாம் என இராணுவ நிர்வாகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். எனினும், இத்தகவலை அவர் உறுதிப்படுத்தவில்லை. இராணுவ ஆட்சி நடைபெற்றுவரும் மியான்மாரில் ஜனநாயகத்துக்காகப் போராடும் ஆங் சாங் சூகி இராணுவ ஆட்சியாளர்களால் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரைச் சந்திக்க பல கட்டுப்பாடுகளை இராணுவம் விதித்துள்ளது. சென்ற ஆண்டு நவம்பர் மாதம் ஒருமுறை கர்ட் கேம்பல் சூகியைச் சந்தித்தார். கடந்த 14 ஆண்டுகளில் முதல் முறையாக மியான்மருக்குப் பயணம் மேற்கொண்ட முக்கிய அமெரிக்கத் தலைவர் கர்ட கேம்பல் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது மீண்டும் அவர் சூகியைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார்.

## ரஷ்ய நிலக்கரிச் சுரங்க விபத்தில் 8 ஊழியர்கள் பலி; 24 பேர் காயம்!

மாஸ்கோ, மே 10

ரஷ்ய நிலக்கரிச் சுரங்கமொன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 8 ஊழியர்கள் பலியானார்கள். 24 பேர் காயமடைந்தனர். இன்னும் 64 ஊழியர்கள் உள்ளே சிக்குண்டுள்ளனர். மீட்புப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சைபீரியாவின் மேற்கு கெகிரோவொவ் பிராந்தியத்தில் இந்த நிலக்கரிச் சுரங்கம் அமைந்துள்ளது. விபத்து சம்பவித்தவுடன், அநேகர் பாதுகாப்பாக, உடனடியாக மீட்கப்பட்டுள்ளனர். வாயு கசிவால் இந்த வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

அதேவேளை, மெஷ்குரி சென்ஸ்க் என்னும் இடத்துக்கு அருகிலுள்ள ராஸ் பெட்ஸ்கேயா நிலக்கரிச் சுரங்கத்திலும் வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது. 20 மீட்புப் பணியாளர்க[illegible] அங்கு வி[illegible] என்றும் இதர விவரங்கள் வெளியாகவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

## ஆப்கானில் வெள்ளம்: 66 பேர் உயிரிழப்பு

ஹெராத் (ஆப்கானிஸ்தான்), மே 10

ஆப்கானிஸ்தானில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்திற்கு 66 பேர் பலியாகியுள்ளனர். நூற்றுக்கணக்கான வீடுகள், கால்நடைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. இதனால் மக்கள் தங்களின் இருப்பிடங்கள் மற்றும் வாழ்வாதாரங்களை இழந்து பரிதவிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வடக்கு, தெற்கு ஆப்கானிஸ்தான் பகுதிகளில் பெய்த இந்த பலத்த மழையால், அப்பகுதிகள் முழுவதும் வெள்ளக் காடாக மாறியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மேற்கிந்தியத் தீவுகளின் கெய்ல் அதிரடி; அரையிறுதி வாய்ப்பை இழந்தது இந்தியா!

பார்படோஸ், மே 10

இந்திய வீரர்கள் பிரகாசிக்கத் தவறியதால் அரையிறுதி வாய்ப்பை 14 ஓட்டங்களால் கோட்டைவிட்டது இந்திய அணி.

மேற்கிந்தியத்தீவுகளில் நடைபெற்றுவரும் ஐ.சி.சியின் மூன்றாவது ருவென்ரி-20 உலகக்கிண்ணப் போட்டியில் நேற்று நடைபெற்ற சுப்பர்-8 போட்டியில் இந்திய - மேற்கிந்தியத் தீவு அணிகள் மோதின.

சுப்பர்-8 போட்டியின் முதல் போட்டிகளில் மேற்கிந்தியத்தீவுகள் இலங்கையிடமும், இந்தியா அவுஸ்திரேலியாவிடமும் தோல்வியடைந்தன. இப்போட்டியில் இரு அணிகளும் வெற்றி பெற்றாக வேண்டும என்ற கட்டாய நிலையிலேயே களமிறங்கியிருந்தன.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணியின் தலைவர் டோனி, தாம் முதலில் களத்தடுப்பில் ஈடுபடப்போவதாகத் தெரிவித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடத் தயாரான மேற்கிந்தியத்தீவு அணியின் ஆரம்ப வீரர்களாக கிறிஸ் கெய்ல் - சந்தர்போல் ஜோடி களமிறங்கியது. இருவரும் இணைந்து மேற்கிந்தியத்தீவுகளின் ஓட்ட சேகரிப்புக்குப் பலமான அத்திபாரத்தை இட்டார்கள்.

இந்த ஜோடி இணைப்பாட்டமாக 80 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது, சந்தர்போல் 23 ஓட்டங்களுடன் நெஹ்ராவின் பந்தில் விக்கெட் காப்பாளர் டோனியிடம் பிடிகொடுத்து ஆட்டம் இழந்தார்.

இரண்டாவது விக்கெட்டுக்காக கெய்லுடன் ஜோடி சேர்ந்த சமி 2 பௌண்டறிகள், ஒரு சிக்ஸருடன் 10 பந்துகளில் 19 ஓட்டங்களுடன் ஜடேஜாவின் பந்தில் விஜயிடம் பிடிகொடுத்து ஆட்டம் இழந்தார்.

விக்கெட்டுக்கள் ஒரு புறம் விழ மறுபுறத்தில் சிறப்பாக ஆடிக்கொண்டு இருந்தார் கிறிஸ் கெய்ல். அடுத்துவந்த பொலர்ட் 2 சிக்ஸர்களுடன் 17 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தார்.

பிராவோ ஒரு ஓட்டத்துடன் ஆட்டம் இழக்க சர்வான் ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் நெஹ்ராவின் பந்தில் ரோகித் சர்மாவிடம் பிடிகொடுத்து ஆட்டம் இழந்தார். அதிரடியாக ஆடி 66 பந்துகளில் 5 பௌண்டறிகள், 7 சிக்ஸர்களுடன் 98 ஓட்டங்களைப் பெற்ற கெய்ல் ஓட்டம் ஒன்றைப் பெற முற்பட்டு டோனியினால் 'ரன் அவுட்' செய்யப்பட்டார்.

ஹைன்ட்ஸ் பந்துகள் எதனையும் சந்திக்காத நிலையிலும் ராம்டின் ஒரு பௌண்டறியுடன் 4 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காது களத்தில் இருந்தனர்.

மேற்கிந்தியத்தீவுகள் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்திய அணி சார்பில் பந்து வீசிய நெஹ்ரா 3 விக் கெட்டுக்களையும் ஷகீர்கான், ஜடேஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

அரையிறுதிப் போட்டிக்குள் நுழைய இப்போட்டியில் வென்றே ஆகவேண்டும் என்ற நிலையில் இந்திய அணி களமிறங்கியது.

ஆரம்பவீரர்களாக வழமையான விஜய் - கம்பீர் இணை களமிறங்கியது. ஆனால் விஜய் சமியின் வேகத்தில் பொல்லர்ட்டிடம் பிடிகொடுத்து 7 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார்.

இரண்டாவது விக்கெட்டுக்காகக் களமிறங்கிய ரோகித்சர்மா ஓரளவு சிறப்பாக ஆட கம்பீர் 15 ஓட்டங்களுடன் ரோச்சின் பந்தில் ராம்டின்னிடம் பிடிகொடுத்து ஆட்டம் இழந்தார்.

ரெய்னாவுடன் இணைந்த ரோகித்சர்மா 5 ஓட்டங்களுடன் பொல்லர்ட்டின் பந்தில் ராம்டின்னிடம் பிடிகொடுத்து வெளியேறினார். அடுத்து யுவராஜ்சிங் களம் இறங்க 25 பந்துகளில் 4 பௌண்டறிகள் ஒரு சிக்ஸருடன் 32 ஓட்டங்களைப் பெற்ற ரெய்னா கெய்லின் பந்தில் சமியிடம் பிடிகொடுத்து பெவிலியன் திரும்பினார்.

யுவராஜ்சிங்கும் 12 ஓட்டங்களுடன் பின்னின் பந்தில் சந்தர்போலிடம் பிடிகொடுத்து ஆட்டம் இழந்தார். டோனி நிதானித்து ஆடினார்.

18 பந்துகளில் 2 பௌண்டறிகள், 2 சிக்ஸர்களுடன் 29 ஓட்டங்களைப் பெற்ற டோனி ஓட்டம் எடுக்க முற்பட்ட பிராவோ 'ரன் அவுட்' செய்து அவரை வெளியேற்றினார்.

அடுத்துவந்த பதான் 17 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்க ஹர்பஜன்சிங் 14 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். நெஹ்ரா ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் பெவிலியன் திரும்பினார்.

ஜடேஜா 5 ஓட்டங்களுடனும் ஷகீர்கான் ஓட்டம் எதனையும் பெறாமலும் களத்தில் இருந்தனர்.


இந்திய அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்களையே பெற்றது.

மேற்கிந்தியத்தீவு அணியின் சார்பில் பந்துவீசிய ரோச் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்ற சமி, ரெய்லர், பிராவோ, பொல்லர்ட், கெய்ல், பின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

ஆட்டத்தின் நாயகனாக மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கிறிஸ்கெய்ல் (98) தெரிவானார். (6)

ஒளிமயமான எதிர்காலத்துக்கான நுழைவாயில்
GATEWAY CfICT
GATEWAY Language Centre
GATEWAY KIDS SCHOOL OF COMPUTING
IPICT International Pedagogical ICT Licence
GATEWAY CENTRE FOR INFORMATION COMMUNICATION TECHNOLOGY JAFFNA
347, Kasthuriyar Road, Jaffna
Phone : 021 567 5555, 021 222 7967
E-Mail : gatewayjfn@sltnet.lk

# இங்கிலாந்துக்கு அரையிறுதி வாய்ப்பு!



பார்படாஸ், மே 10

தென்னாரிக்காவுக்கு எதிரான 'ருவென்ரி-20' உலகக் கிண்ணத் தொடரின், நேற்றுமுன்தினம் இரவு நடந்த 'சூப்பர்-8' போட்டியில் இங்கிலாந்து அணி 39 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது.

மூன்றாவது 'ருவென்ரி-20' உலகக் கிண்ணத் தொடரின் 'சூப்பர்-8' 'இ' பிரிவில் இடம்பெற்ற இங்கிலாந்து-தென்னாபிரிக்க அணிகள் நேற்றுமுன்தினம் இரவு மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இங்கிலாந்து அணியின் ஆரம்ப வீரரான லம்ப் (3) வந்தவேகத்திலேயே ஆட்டமிழந்தார்.

பின்னர் கீஸ்வெற்றர்-பீற்றர்சன் ஜோடி ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டது. சிறப்பாக ஆடிய பீற்றர்சன் அரைச் சதம் (53) கடந்த நிலையில் போத்தாவின் சுழலில் சிக்கி ஆட்டமிழந்தார். அப்போது இங்கிலாந்து அணி, 12 ஓவர்களில் 100 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

அதைத் தொடர்ந்து, டுமினியின் பந்தில் சிக்ஸர் அடித்த கீஸ்வெற்றர் (41) அவரிடமே வீழ்ந்தார். பின்னர் வந்த வீரர்களான கொலிங்வூட் (14), ரைட் (0), மோர்கன் (21), பிரஸ்னன் (13) என அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் இங்கிலாந்து அணி, 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 168 ஓட்டங்களைச் சேர்த்தது.

தென்னாபிரிக்க அணி சார்பாக பந்துவீச்சில், போத்தா, மோர்கல், லாங்கிவெல்ட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பின்னர் துரத்திப் பிடிக்கக் கூடிய இலக்கை விரட்டிய தென்னாரிக்க அணிக்கு, இம்முறை கலிஸ் (11) கைவிட்டார். அதிரடி வீரர் கிப்ஸ் 8 ஓட்டங்களுடன் 'பெவிலியன்' திரும்பினார். நீண்டநேரம் தாக்குப்பிடித்த அணித்தலைவர் ஸ்மித் 19 ஓட்டங்களையே சேர்த்தார். அல்பி மோர்கல், 'டக்-அவுட்'டானார். பௌச்சரும் (9) ஏமாற்றினார்.

விக்கெட்டுகள் வீழ்ந்தபோதும், இறுதிக் கட்டத்தில் டுமினி-போத்தா இணைந்து போராடினர். டுமினி 39 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்து வெளியேற, தென்னாபிரிக்க அணியின் வெற்றிக் கனவும் கலைந்தது. அதைத் தொடர்ந்து ஸ்ரைன் (5), போத்தா (12) ஆகியோர் ஆட்டமிழக்க, தென்னாபிரிக்க அணி 19 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது.

இதன்மூலம் 39 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றது.

இங்கிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில், சைட் பொத்தம், ஸ்வான் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக பீற்றர்சன் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம், 'சூப்பர்-8' சுற்றில் 4 புள்ளிகளைப் பெற்ற இங்கிலாந்து அணி, அரையிறுதி வாய்ப்பைக் கிட்டத்தட்ட உறுதிசெய்துவிட்டது.

## போட்டி இல. 09

2010 ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு 'உதயன்'நடத்தும் பரிசுப்போட்டி

* அனுப்புபவர் பெயர் : ..............................
* முகவரி : ..............................
* தொ.பே.இல : ..............................

கேள்வி:

01.T-20 உலகக்கிண்ண கோப்பையின் நிறம் என்ன?

..............................

02.T-20 2009ம் ஆண்டு உகைக்கிண்ண போட்டியில் அதி கூடிய மொத்த ஓட்டங்களைப் பெற்ற வீரர் யார்?

..............................

03.இலங்கையின் முன்னணி கணினிப்பயிற்சி நிறுவனமான "கேற்வே"(Gateway)வழங்கும் சர்வதேச தரமுடைய ஒன்லைன் (Online) பரீட்சை எது?

..............................

போட்டி இலக்கம் 09 இல் வெற்றி பெறும் போட்டியாளருக்கு இல 347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும்முகவரியில் அமைந்திருக்கும் "கேற்வே" (Gateway centre For Information Communication Technology) சார்பாக ரூபா 2000/= பெறுமதியான பரிசுப்பொதி வழங்கப்படும்.

* பூர்த்தி செய்யப்பட்ட கூப்பனை 'உதயன் பணிமனை', 361,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
* அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டி இலக்கத்துடன் ரி-20 உலகக்கிண்ணப் போட்டி எனக்குறிப்பிடப்பட வேண்டும்

உங்களுக்காக ஒரு சில நிமிடம் !

வேலைதேடும் பட்டதாரிகளே, இளைஞர்களே, யுவதிகளே கல்விசார் தகைமைகள் இருந்தும் ஆளுமை விருத்தியின்மை, நேர்முகத் தேர்வினை எப்படி எதிர்கொள்வது என்று தெரியாத காரணங்களினால் ஏராளமான வேலை வாய்ப்புக்கள் உங்களை விட்டுச்செல்கின்றது. வங்கிகள், தனியார் நிறுவனங்கள் தகுதியான பணியாட்களை எம்மிடமிருந்து எதிர்பார்க்கின்றார்கள். எனவே, இன்றே எமது பயிற்சிப்பட்டறையில் இணைந்து எதிர்காலத் தொழில் வாய்ப்பினை உறுதி செய்து கொள்ளுங்கள். பயிற்சிப் பட்டறையில் இணையும் அனைத்து மாணவர்களும் எமது தொழில் வங்கியில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

British College of Higher Studies
Tel: 021-2224550, Mobile: 0777222422, 0714299935, 0773501499 web: www.bchs.lk Email: info@bchs.lk

யாழ். மாநகரிலே...
British College of Higher Studies ஏற்பாட்டில்
வேலைவாய்ப்பினைப் பெற்றுத்தர உதவும் பயிற்சிப்பட்டறைகள் (Personality Development Work shops)
உள்ளடக்கம்: நேர்முகத் தேர்வினை எவ்வாறு எதிர்கொள்வது, உரையாடுவது, முகாமைத்துவம், மனிதவளப் பயன்பாடுகள், அலுவலகப் பிரயோகத்திற்கான கணினிப் பயிற்சிகள், ஆங்கில உரையாடற் பயிற்சிகள் என்பன அடங்கலான
பயிற்சிப் பட்டறைகள் : 15 மணித்தியாலங்கள்
சனி, ஞாயிறு மற்றும் வாரநாட்களிலும் நடாத்தப்படும்

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் இருந்து பங்குபெறும் பட்டதாரிகளுக்குச் சிறந்த கட்டணக் கழிவுடன் குழுக்களாகவும் பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்படும்.

பயிற்சிப் பட்டறையில் பயிலும் அனைவரும் எமது தொழில் வங்கியிற் பதியப்பட்டு அதனூடாக நல்ல நிறுவனங்களில் (Bank & Private firms) வேலை வாய்ப்பைப் பெற ஆவன செய்து தரப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளில் தெரிவான 272 தமிழர்கள் இலங்கையின் தேடப்படுவோர் பட்டியலில்

கொழும்பு,மே10

நாடுகடந்த தமிழீழ அரசு அமைப்பதற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட 272தமிழர்களும் தேடப்படுவோர் பட்டியலில் (BLACK LISTED) சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, சுவிட்சர்லாந்து, டென்மார்க், நோர்வே, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் நடைபெற்ற தேர்தலில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நாடுகடந்த தமிழீழ அரசை ஏற்கமுடியாது என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இந்தத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரங்களை சேகரித்துள்ள புலனாய்வுப் பிரிவினர் அவர்கள் நாட்டுக்குள் வருவதற்கு அனுமதிக்கமாட்டார்கள் என்று தெரிவித்துள்ளது. (அ-1)

## துரையப்பா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கப்பட்டார் என்று கூறப்பட்டது.

தமது கடமை முடிவடைந்து விளையாட்டுப் போட்டி அலுவலகத்துக்குச் சென்ற வேளையில், அலுவலகத்தில் நின்ற வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டு அலுவலர்கள் இருவரும் விளையாட்டு வீரராகக் கலந்துகொண்ட பொலிஸ் வீரரும் இத் தாக்குதலை நடத்தினர் என்று சொல்லப்படுகின்றது. அதன் பின்னர் ஏனைய மத்தியஸ்தர்களும் தாக்குதல் நடத்தியவர்களுடன் மோதலில் ஈடுபட்டனர்.

தாக்குதலையடுத்து கடமையில் இருந்த பொலிஸார் அமைதியை ஏற்படுத்த முயற்சித்த போதிலும் இரு பிரிவினரும் தொடர்ந்து கடுமையாக மோதிக்கொண்டனர்.

இத்தாக்குதலில் யாழ்.மாவட்ட அமைச்சூர் சங்க மத்தியஸ்தரான சதீஸ்கண்ணா தலையிலும் முகத்திலும் காயங்களுக்கு ஆளாகியிருக்கின்றார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து நடைபெறவிருந்த பரிசளிப்பு நிகழ்வு ரத்துச் செய்யப்பட்டது. (6-23-86)

## அரசமைப்பை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக அரச வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசமைப்பு மாற்றத்துக்கான நகல் வரைபுகளை உருவாக்கும் பணியை ஆரம்பித்துள்ளார்.

இதில் முக்கியமாக மேற்சபையை உருவாக்குவது குறித்துக் கவனம் செலுத்தப்படுகின்றது.

எனினும் இந்த மேற்சபை எவ்வாறானதாக அமையும் என்பது குறித்துத் தெளிவான தகவல்கள் வெளியாகவில்லை.

ஜனாதிபதியொருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் பதவி வகிப்பதைக் கட்டுப்படுத்தும் அரசமைப்பு ஏற்பாடுகளை அகற்றுவது குறித்தும் சிந்திக்கப்படுகின்றது.

ஜனாதிபதியொருவர் எத்தனை தடவையும் பதவி வகிக்க வழிவகுக்கும் வகையில் மாற்றம் கொண்டுவரப்படலாம் எனக் கூறப்படுகின்றது.

அரசமைப்பின் 17ஆவது திருத்தத்திலும் மாற்றங்களைக் கொண்டுவருவது குறித்து ஆராயப்படுகின்றது.

புதிய மாற்றம் மூலம் ஜனாதிபதி நேரடியாகவே நியமனங்களை மேற்கொள்வதற்கான அதிகாரத்தைப் பெறுவார்.

தற்போது சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு நியமனங்களை மேற்கொள்ளும் அதிகாரம் அரசமைப்புக் கவுன்ஸிலிடமே உள்ளது.

அரசமைப்பு மாற்றங்களுக்கான நகல் வடிவத்தைத் தயாரிக்கும் பொறுப்பு வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நகல் வடிவங்கள் இன்னும் ஆரம்பகட்டத்திலேயே உள்ளன. அவை பூர்த்தியானதும் அது குறித்து ஜனாதிபதி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் ஆலோசனைகளை மேற்கொள்வார். அதன் பின்னரே அவை நடைமுறைப்படுத்தப்படும் என அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-சி)

LAVA HOSPITAL
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
www.lavahospitals.com/blog
ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
Basic Body Checkup
அடிப்படை உடற் பரிசோதனைகள்
★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=

## பிரிட்டனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

சர்வதேச தீவிரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான கொள்கைகளைச் கொண்டுள்ள கன்சர்வேட்டிவ் கட்சியுடன் இலங்கைத் தூதரகம் ஏற்கனவே தொடர்பு கொண்டு உரையாடியுள்ளதாக இணையத் தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பிரிட்டிஷ் அரசுடன் கலந்துரையாடலை மேற்கொள்வதற்கு தூதுக் குழுவொன்றை அனுப்பிவைக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமும், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸிடமும் இலங்கைக் கான தூதரகம் கேட்டுள்ளது. (அ-சி)

## எஸ்.எம்.எஸ்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தகவல் செயற்பாட்டு ஆணைக் குழு அறிவித்திருக்கிறது.

இந்தக் குறுந்செய்தியை வெளிப்படுத்திய முதலாவது நபர் குறித்து ஆராய்வதற்கு தொலைத் தொடர்பு நிறுவனத்திடமிருந்து தரவுகள் கோரப்பட்டுள்ளன என்று ஆணைக்குழுவின் பணிப்பாளர் ஜெனரல் அனுஷ் பலபிட்ட தெரிவித்துள்ளார்.

குறித்த குறுஞ்செய்தி வெளிநாட்டில் உருவாக்கப்பட்டதாக கருதப்பட்ட போதும், அது உள்நாட்டுத் தொலைபேசி ஊடாகவே பரப்பப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தேசிய ரீதியாக மக்களை அச்சுறுத்தும் குறுந்செய்தியைப் பரப்பியவர்களின் தொலைபேசி தொடர்பான தகவல்களும் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன எனவும் பணிப்பாளர் கூறினார். (அ-சி)

## மே 17ஐ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடைப்பிடிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக எமது மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளாலும் போரினாலும் பெரும்தொகையானோர் உயிரிழந்துள்ளனர். பலர் வேறு பல பெரிய பாதிப்புகளுக்கும் உள்ளாகியுள்ளனர்.

பெருந்திரளானோர் வீடுகளிலும் இருப்பிடங்களிலும் இருந்து வெளியேற்றப்பட்டு வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் அகதிகள் ஆக்கப்பட்டுள்ளார்கள்.

2006 நடுப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட யுத்தம், காலப்போக்கில் விரிவடைந்து வன்னிப் பெருநிலத்தில் தொடர்ந்து நடைபெற்று இறுதிக் கட்டமாக கடந்த வருடம் 2009 ஜனவரி மாதம் தொடக்கம் மே 18 ஆம் திகதிவரை உக்கிரமாக நடந்தது.

இந்த உச்சக்கட்டப் போரின்போது தமிழ் மக்கள் பல்லாயிரக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டனர். அத்துடன் மேலும் இலட்சக் கணக்கானவர்கள் வேறு பல பெரிய பாதிப்புகளுடன் தங்கள் இருப்பிடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

இந்தப் பேரவலம் உலக சரித்திரத்தில் நடந்த பெரிய இப்பேரவலத்தை நினைவு கூரும் வகையில் வருடா வருடம் துக்க தினமொன்றைக் கடைப்பிடிக்குமாறு அனைத்துத் தமிழ் மக்களையும் வேண்டுகின்றோம்.

இவ்வருடம் 2010 மே 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலையில் சமய வழிபாட்டுத் தலங்களில் அமைதியான முறையில் பிரார்த்தனைகளில் ஈடுபடுமாறு அனைத்துத் தமிழ் மக்களையும் சமயத் தலைவர்களையும் அன்பாக வேண்டுகின்றோம் - என்றுள்ளது.

# இலங்கைக் கடற்படையினர் தாக்கி தமிழக மீனவர்கள் ஐந்து பேர் காயம்

சென்னை,மே10

கச்சதீவுக்கும் தனுஷ்கோடிக்கும் இடையில் கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகினர் என்று தமிழக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இத்தாக்குதலில் ஐந்து மீனவர்கள் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

300படகுகளில் 500 மீனவர்கள் ஒன்றாகத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர் என்றும் அவர்களில் ஐந்துபேர் தாக்குதலுக்கு இலக்காகினர் என்றும் தமிழக அதிகாரிகள் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் இந்தியக் கடற்பகுதியில் அவர்கள் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளையில் இலங்கை கடற்படையினரால் தாக்குப்பட்டுள்ளனர் எனவும் தமிழக அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-1)

## நயினாதீவு அம்மன் ஆலயத்துக்கு 10 லட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், மே 10

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய ராஜகோபுரத் திருப்பணிக்காக இந்து கலாசாரத் திணைக்களத்தினூடாக ரூபா 10 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற யாழ். மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக வேலணைப் பிரதேச செயலர் திரு.மு.நந்தகோபாலன் தெரிவித்தார். (1-267)

## வன்னியில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வருடம் இடம்பெற்ற இறுதி மோதலின்போது இடம்பெயர்ந்த மூன்று இலட்சம் பேரில் இன்னமும் 60ஆயிரம் பேரே மீள்குடியமர்த்தப்பட வேண்டியவர்கள். கண்ணிவெடி அகற்றிமுடிந்ததும் அவர்களும் மீள்குடியமர்த்தப்பட விருக்கின்றார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த வருடம் ஒக்ரோபர் 11ஆம்திகதி ஆரம்பிக்கப்பட்ட மீள்குடியேற்ற நடவடிக்கை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் யூலையுடன் மீள்குடியமர்வு பூர்த்தியாகிவிடும் என நம்புகிறேன் என்றும் சந்திரா பெர்ணான்டோ மேலும் தெரிவித்தார். (அ-1)

## இலங்கைத் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

### இந்திய இராணுவத்தின் நான்கில் ஒரு பங்கு இலங்கையில்.....!

இதேவேளை, இலங்கையின் இராணுவத்தினரின் எண்ணிக்கை 2 லட்சம் வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்திய இராணுவத்தின் நான்கில் ஒரு பங்காக அது காணப்படுகிறது. இது இந்தியாவுக்கு மிகப்பாரிய அச்சுறுத்தல் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அருட்தந்தை ஜெகத் கஸ்பார், இலங்கையில் மனித உரிமைகளுக்கான தீர்வு ஒன்று இல்லாமல் வேறு எதனையும் தீர்த்து விட முடியாது எனக் கூறியுள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் ஒரேயொரு நம்பிக்கையாக விடுதலைப் புலிகளே இருந்துள்ளனர். தற்போது முறைமையற்ற முறையில் குடியேற்றங்கள் நடைபெற்று வருகின்றன. மஹிந்த ராஜபக்ஷவின் அரசு மக்களை நோக்கி செல்ல வேண்டிய தேவை ஒன்று அங்கு நிலவுகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இதில்கலந்துகொண்டு உரையாற்றிய இந்திய ஊடகவியலாளர் பகவான் சிங், விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டதன் பின்னர் இலங்கையை இந்தியா சீனாவிடம் இழந்து விட்டது எனக் கூறினார்.

இந்த நிலையில் இலங்கைக்கு இனிமேல் இந்தியா தேவைப்படாது என்றும் தற்போது தமிழர்களின் தடயங்கள் அழிக்கப்பட்டு இலங்கை முழுவதும் சிங்களமயமாக்கப்பட்டு வருகிறது எனவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார். (அ-சி)

## அருக்கி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ந்ததாகத் தெரியவருகிறது.

இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:

ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலைக்கு அருகில் உள்ள ஒரு வீடு ஒன்றில் வசித்து வந்த முதியவரான உமாபதி (வயது68) என்பவரே இவ்வாறு தனக்குத் தானே தீ மூட்டி மரணித்துள்ளார்.

வீட்டாருக்கு நித்திரைகொள்ளச் செல்வதாகக் கூறிய முதியவர் வீட்டில் உள்ளவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த நேரத்தில் அங்கு அடுக்கி வைத்திருந்த விறகின் மீது படுத்துத் தனக்குத்தானே தீ மூட்டியுள்ளார் என்று சொல்லப்படுகின்றது.

வீட்டில் உள்ளவர்கள் காலையில் இவரைக் காணவில்லையே எனத் தேடிய போதே விறகு அடுக்கப்பட்டிருந்த இடத்தில் எரிந்த நிலையில் அவரின் சடலம் காணப்பட்டதாகவும் வீட்டார் சுன்னாகம் பொலிஸாருக்கு செய்த முறைப்பாட்டையடுத்து,மல்லாகம் நீதிவானின் பணிப்புக்கு அமைய முதியவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கெண்டு வருகின்றனர். (1-6-86)

## தமிழ்த் தேசியக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசைச் சேர்ந்த எவருடனும் பேசவும் இணைந்து செயற்படவும் நான் தயாராகவுள்ளேன். நாட்டின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதியே நாங்கள் யாருடன் பேசவேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தன்னுடன் தொடர்பு கொண்டவர் யார் என்பதை வெளியிட சம்பந்தன் மறுத்துள்ளார் என்று 'த நேஷன்' குறிப்பிட்டுள்ளது.

''இதேவேளை, நாட்டின் சில பிரிவினர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதை விரும்பவில்லை. பிரச்சினை தீர்க்கப்படுவதை விரும்பவில்லை. இதனால் இதற்கான போலியான காரணங்களைத் தெரிவிக்கின்றனர். அவர்கள் தமிழர்களுடன் அதிகாரங்கள் பகிர்ந்துகொள்ளப் படுவதை விரும்பவில்லை'' என்றும் சம்பந்தன் குற்றம்சாட்டினார்.

''அரசு நேர்மையான தீர்வை முன்வைக்கவேண்டும். தமிழ் மக்கள் மீது எதனையும் திணிக்கலாம் எனக் கருதக்கூடாது. அவ்வாறு கருதினால் அது ஒருபோதும் சாத்தியப்படாது . பயனற்ற - நடைமுறைப்படுத்த முடியாத தீர்வொன்றை ஏற்றுக்கொள்ளுமாறு எம்மீது அழுத்தம் கொடுத்தால் அதுவும் நடக்காது'' என்றும் சம்பந்தன் எச்சரித்துள்ளார். (அ-சி)

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்கள் நடைபெறு கின்றன.
Vivekananda Academy
(Centre for International Language Studies) No.3, 2nd Lane Palaly Road, Jaffna. [அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்]
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம் எமது நிறுவனம் மட்டுமே.
குறிப்பு: July மாத ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மொழியின் புதிய வகுப்புக்கள் தற்பொழுது ஆரம்பமாகின்றன.
GOV.Reg.No W/A 76795
Tel-0774842464/0213216928/0779927117

## மரண அறிவித்தல்

### திருநாவுக்கரசு திருக்கமலன்

காரைநகரைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா வேலுப்பிள்ளையின் பேரன் திருநாவுக்கரசு திருக்கமலன் நேற்று (09.05.2010) ஞாயிற்றுக்கிழமை இரவு லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தங்கோடை, காரைநகர். தொ.பே.021 222 7737

தகவல்: வே.சிற்சபேசன் (சிறிய தகப்பனார்).

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org